
கல்கி
KALKI
30
காசு
31-12-1961



மகாராணி

சந்தன சோப்

அழகுசாதன
சோப்புக்களில்
அரசியர்க்கரசி

வாதுமை எண்ணெய் கலந்துள்ள சோப்

செல்வச் சந்தன மரம் தந்த சத்தும், சரும செழிப்பிற்கான மிகத் தூய தாவரத் தைலங்களும் இணைந்து உருவாகியுள்ளது மகாராணி. அன்னச் சிறகு போன்ற மென்மைப் பொலிவையும், சல்லாத் துகில் போன்ற சருமத் தெளிவையும் நமக்கு அருள்வது மகாராணி சந்தன சோப்...

MHR. 4A-X52 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு


பிலவ, மார்கழி 16

கல்கி

டிசம்பர் 31, 1961

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



ஆடம்பரப் பொருளாகக் கருதப்படினும், அரசன் முதல் ஆண்டிவரை புகையிலையை ஏதேனுமொரு விதத்தில் உட்கொள்ளாதவர்களே இல்லை. இந்தியாவிலும் சவி, பொடியோ, புகையிலையோ போடும் பழக்கத்தைவிட புகைபிடிக்கும் பழக்கமே மக்களை மேன்மேலும் கவர்ந்துள்ளது. இதன் பயனாக ஆண்டுதோறும் 3200 கோடி சிகரெட்டுகளுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டு வருகிறதென இன்று உத்தேசக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

புகையிலையின் வரலாறு... 8



பம்பாய்—57.

பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT 708 TN — Greens' Advtg.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 22

எது சிறந்த முறை?

ஜனநாயகத்தைக் கொல்வதற்குச் சர்க்கார் வாணிபத்தைப் போல வலிமை வாய்ந்த ஆயுதம் வேறெதுவும் கிடையாது. ஏனெனில் அப்போது தங்களுக்குத் தேவையான பொருட்களை மக்கள் பெறமுடியாது. மக்களுக்கு எந்தப் பண்டங்கள் தேவை என்று சர்க்கார் கருதி உற்பத்தி செய்கிறதோ அவற்றை மட்டுமே அவர்கள் பெறமுடியும். பொருள்களின் விலையும் சர்க்கார் மனம் போனபடியே நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அரசாங்கம் வியாபாரம் செய்யத் தொடங்கினால் ஊழல்கள்தான் மண்டிப் பெருகும் என்பதில் சந்தேகமே வேண்டாம்.

நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தை ஒரே இடத்தில் குவிக்கக் கூடாது; அதைப் பரவலாக அமைக்க வேண்டும் என்றெல்லாம் பேசுகிறார்கள். இது உண்மையான இலட்சியமானால் தொழில்களைச் சர்க்கார் வசமாக்குவதன் மூலம் இதை அடைய முடியாது என்பது வெளிப்படை. தனியாரின் போட்டாபோட்டிக்குத் தொழிலை விட்டால்தான் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் அம்சங்கள் ஒரே இடத்தில் தேங்காமல் பரவலாக நிலவும் என்பதைத் தீர ஆலோசித்துப் பார்க்கும் யாரும் உணருவார்கள்.

சர்க்காரின் வர்த்தகக் கார்ப்பரேஷன்களுக்கு சுய நிர்வாகப் பொறுப்பு தருவோம்; அவற்றின் செயல் போக்கில் அதிகார வர்க்கம் தலையிடாது; இதனால் பொருளாதார நிர்ணயப் பொறுப்பு பரவலாக்கப்படும் என்று இப்போது சொல்கிறார்கள். இது உண்மைக்குப் புறம்பான பேச்சு. மையப் பீடத்திலுள்ள அதிகாரிகள் செய்யும் அதே தவறுகளைத் தனித்தனிக் கார்ப்பரேஷனின் அதிகாரிகளும் தொடர்ந்து செய்வதற்குத்தான் இது இடமளிக்கும். இதனால் வேலைத்திறனில் முன்னேற்றம் இருக்காது; பொறுப்பின்மைதான் அதிகமாகும். அங்கங்கே ஏற்படும் தண்டச் செலவுகளையும், கவனக்குறைவையும் பற்றித் தட்டிக் கேட்க யாருமே இல்லாமல் போவார்கள். இந்தப் புதிய யோசனை அமுலானால் என்றோ ஒரு நாள் பார்லிமெண்டுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்ற பயமும் இராது.

சர்க்கார் மேற்கொள்ளும் தொழிலில் வேறு யாரும் போட்டியிட முடியாது. போட்டா போட்டி இருக்கும்போதுதான் தரமான பண்டங்களைக் குறைந்த விலையில் மக்களுக்குத் தரும் சூழ்நிலை ஏற்படும். தனியார் தொழில் நடத்தும்போது காணும் இந்த நிலைமையைச் சர்க்கார் தொழில் செய்யும்போது காண முடிவதில்லை. அபிவிருத்திக்காகப் போடப்படும் திட்டங்களின் செயல்முறையை ஏட்டில் பார்க்கும்போது எவ்வளவோ சிறப்பாக இருக்கலாம். ஆனால் அவை காரியத்துக்கு வரும்போது, அவற்றைச் செயலாக்கும் அதிகாரிகளை ஊக்க அந்த முறையில் எதுவுமில்லை என்று தெரியும். சொந்தமாகத் தொழில் நடத்தும் நிர்வாகிகளின் சுயமான ஈடுபாட்டுக்கு ஒப்பாக, சர்க்கார் தொழில் நிர்வாகிகளை உற்சாகத்துடன் உற்பத்தியைப் பெருக்குமாறு செய்வதற்கு ஒரு வழியும் கிடையாது.

தனிப்பட்டவர்கள் தொழில் நடத்தும்போது ஏகபோக உரிமை பெறாமல் தடுத்து நிறுத்துவதற்கு ஆட்சியிலுள்ள எந்த அரசியல் கட்சியும் முன் வரும். ஆனால் அரசாங்கமே இவ்வித ஏகபோக உரிமையைப் பெறுமானால் தன்னைத்தானே தடுத்துக் கொள்வதற்கு அது சட்டம் செய்யுமா? சர்க்கார் லாபம் சம்பாதிக்க எண்ணினாலோ, அல்லது கட்சிக்கு மக்களிடம் நல்ல பெயர் வாங்கித் தருவதற்காகத் திட்டங்கள் போட்டு வரம்

யற்ற செலவு செய்தாலோ அதன் போக்கை யார் சோக்க முடியும்?


உற்பத்தி செய்பவர் மேலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானல் லாபம் கிடைக்க வேண்டும். மக்களும் நியாயமான விலைகளைக் கொடுத்துப் பொருள்களை வாங்க வேண்டும். தொழிலில் போட்டியிருக்கும் போது உற்பத்தியாளர்கள் கொள்ளை லாபமடிக்காமல் மக்களுக்கு வேண்டிய பண்டங்களை அவர்கள் வாங்கக்கூடிய விலைக்கு விற்கும் நிலை இயல்பாக உண்டாகிறது. ஊக்கமுள்ள உற்பத்தியாளர்கள் தொடர்ந்து தொழில் செய்வதற்கு வேண்டிய லாபமும் அவர்களுக்குக் கிடைக்கிறது. உற்பத்தி செய்பவர்கள், பொருள்களை வாங்கும் பொது மக்கள் இருவருடைய தேவைகளும் வியாபார ஸ்தலத்தில் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு விரைவில் இரு சாராருக்கும் நியாயம் வழங்கப்படுகிறது. மக்கள் அறியாமலே மிகவும் இயற்கையாக இந்தக் காரியம் நடந்து விடுகிறது. ஆகவே தனிப்பட்டவர்கள் சுதந்திரமாகத் தொழில் புரியும்போது திறமை, சிக்கனம் இவை பெறவேண்டிய நியாயமான வெற்றி தோல்விகளை அவர்கள் பெற முடிகிறது. பொருளாதாரத்தை மனம் போனபடி யாரும் கட்டுப்படுத்த முடியாமல் அந்த அதிகாரம் பரவலான முறையில் அமைகிறது. இந்தச் சிறந்த அமைப்பை மேற்பார்வை விடுவதற்கு அரசாங்கமும் இருக்கவே இருக்கிறது. இதனால் சமூக நலன்கள் காப்புப் பெற்று, அவற்றுக்கு விரோதமான காரியங்கள் நிறுத்தப்படும். பொதுவாக இன்றுள்ள பெரிய தொழில் நிறுவனங்கள் தங்கள் சொத்துக்களை மிகவும் பொறுப்புடன் தான் பராமரித்து முதலீடுகள் செய்கின்றன. இவற்றை அளவுக்கு அதிகமாகவே தணிக்கையும் செய்கிறார்கள். ஆனல் சர்க்கார் நிறுவனங்களில் பொதுநலப் பொறுப்பு இந்த அளவு கூடக் கிடையாது. மக்களின் நலனுக்கு மேலாக, ஆளும் கட்சி, அதற்கு உதவுபவர்கள் ஆகியோரின் நலன்தான் சர்க்கார் நிறுவனங்களில் கவனம் பெறுகின்றன. தணிக்கை செய்து ஒழுங்குபடுத்த வேண்டிய ஒரு ஸ்தாபனம், அந்த நடவடிக்கைகளில் தானே ஈடுபடுவதால் பட்சபாதம்தான் ஏற்படும். தன்னலம் கலந்த இந்தச் சர்க்கார் மேற்பார்வையில் நியாயம் கிடைக்காது.

இரு கட்சிகளின் வாதங்களையும் சீர் தூக்கிப் பார்த்து நியாயம் வழங்க வேண்டிய நீதிபதி தாமே ஒரு கட்சிக்காரராக அமைவது போலத்தான் சர்க்காரே தொழில் நடத்த முற்படுவது. சர்க்கார் தொழிலைப் பொருளாதாரச் சந்தை கட்டுப்படுத்தாது; அரசியல் சந்தைதான் கட்டுப்படுத்தும். பொது நலன் என்ற பெயரில் அரசியல்வாதிகள் சர்க்கார் தொழிலைத் தங்கள் கட்சி நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்குவார்கள்.

சர்க்கார் எந்தத் தொழிலுமே மேற்கொள்ளக் கூடாது என்பதற்காக அல்ல இவ்வளவு வாதமும். உதாரணமாக, தனியார் போதிய முதலீடு செய்ய முடியாத — ஆனல் நாட்டு நலனுக்கு அவசியமான —பெரிய தொழில்களைச் சர்க்கார்தான் நடத்த வேண்டும். ரயில்வே, தபால் இலாகா முதலியன அரசாங்கத்தின் பொறுப்பில் இருப்பதுதான் நல்லது. என்ருலும் தனியார் தொழில் பற்றிய தவருன நோக்கம் மாற வேண்டும். சர்க்கார் நிர்வாகம் முழுவதுமே ஊழலும், விரயமும், தாமதமும் நிறைந்தது என எண்ணுவது தவறு என்ருல் தனிநபர்கள் எல்லாரும் சுயநலக்காரர்கள், நாட்டுப் பொறுப்பற்றவர்கள் என்று கருதுவது அதைவிடப் பெரிய தவருகும். மக்கள் தங்கள் விருப்பங்களுக்கு ஏற்பத் தாங்களே இயக்கி வைக்கக்கூடிய நம்பகமான முறை தனியார் தொழிலேயாகும். அதுதான் ஜனநாயகத்துக்கு உகந்த, சிறந்த வழி. தனியாரின் தொழில் உரிமையைப் போற்றி வளர்ப்பது சுதந்திரக் கட்சியின் ஒரு முக்கியமான கொள்கையாகும்.

கோவா: இனிப்பில் ஒரு கசப்பு

பாரதத் தாயின் திருமேனியில் ஒரு முள்ளாகத் தைத்திருந்த போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை எடுத்தெறிந்தாகிவிட்டது. பதினைன்காண்டுகளுக்கு முன் இந்தியா பெற்ற சுதந்திரம் இன்று பரிபூரணமாகி விட்டது; மகிழ்கிறோம். கொடுங்கோன்மைக்கு ஆளாகி இந்நாள் வரை இன்னலுற்றிருந்த கோவா, டையூ, டாமன் சகோதரர்களை நமது குடும்பத்துக்கு அன்புடன் வரவேற்கிறோம். அடிமை வாழ்வை எதிர்த்துப்போராடிய அப்பகுதிப் பெருமக்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம். அதோடு நானூற்றைம்பது ஆண்டுக் காட்டுமிராண்டித்தனத்தை மிகவும் கண்ணியமான முறையில் ஒரே நாளில் அகற்றிய நமது ராணுவத்தினை



ரின் ஆக்கத் திறனையும் அந்தத் திறனோடு மிளிர்ந்த அவர்களுடைய பண்பான நடத்தையையும் போற்றிப் புகழ்கிறோம். இவ்வளவு விரைவில் அங்கு சகஜ நிலையை நிலவச் செய்த அதிகாரிகளின் வினைத் திட்பத்தை எண்ணி மகிழ்கிறோம்.

எனினும் இப்படிப் புகழும் போதும், மகிழும் போதும் அந்த உணர்வினூடே ஒரு தாழ்மை மனப்பான்மையும் இழையோடத்தானே செய்கிறது? ஆம், அந்நிய வாடையை அறவே நீக்கி விட்டோம் என்று இன்று மன நிறைவு காண முடியவில்லை அல்லவா? இங்கே இரண்டாயிரம் சதுர மைல்களை மீட்டுள்ள போதே வட எல்லையில் அதைப் போல ஏழு மடங்கு நிலப் பரப்பினைப் பறி கொடுத்துள்ள துர்ப்பாக்கியத்தை என்னென்பது? அன்னையின் உடலிலிருந்த ஒரு சிறு புண்ணைக் குணமாக்கிய போதே வேறொரு புறத்தில் புற்று நோயைப் பரவவிட்ட ஆட்சியை — அதனைக் குணமாக்க இயலாத ஆட்சியை — எண்ணினால் துயரம்தான் உண்டாகிறது. அதோடு இச்சிறு புண்ணை ஆற்றியதால் புற்று நோயைப் பற்றிய கவலையை மூடி மறைத்து விடலாம் என்று எண்ணும் அதன் சிறுமையைக் கண்டு வெட்கமுறுகிறோம்.

வெட்கம் அதற்கு மட்டும்தானா? கோவா விடுதலை பற்றியே நாடு அவமானப்பட வேண்டிய ஒரு சூழ்நிலையைச் சர்க்கார் உண்டாக்கி விட்டது. சாதனை போற்றப்பட வேண்டியதுதான். ஆனால் அதனைப் பெறுவதற்காகக் கடைப் பிடித்த சாதனம்? பெரிய கேள்விதான் இது. மனச் சாட்சியுள்ளவர்கள், மகாத்மாவின் மணிமொழியை மதித்து நடப்பவர்கள் யாவரும் விடை கூற வேண்டிய வினா இது.

இலட்சியம் சீரியதாக இருந்தால் மட்டும் போதாது; அந்த இலட்சியத்தை அடைவதற்காகக் கைக் கொள்ளும் மார்க்கமும் சீரியதாக இருக்க வேண்டும் என்பதுதான் காந்தியடிகள் காலமெல்லாம் வலியுறுத்திய கொள்கை. அந்நிய ஆட்சி என்ற சாபத் தீட்டை ஒழிப்பது உயர்ந்த லட்சியம். ஆனால் அதற்காக நம் ஆட்சியினர் கையாண்ட வழி முறை அடிகளுக்குச் சற்றும் உகந்ததல்ல. வெறும் ராணுவ பலத்தினால், சமமில்லாத எதிரியை அடிபணிய வைத்த செயலே இது. அஹிம்சைத் தத்துவத்தைக் காற்றிலே பறக்கவிட்ட செய்கையே இது. 'பலாத்காரத்தின் பெருமையை இந்தியா உணர்ந்து விட்டது' என்று இந்தோனீஷியா நமக்குப் 'புகழ் மாலை' சூட்டுவதே நம் சர்க்காரின் போக்குக்கும் காந்தீயத்துக்கும் எவ்வளவு தொலைவு என்பதைக் காட்டுகிறது.

அரக்க குணம் படைத்த போர்ச்சுகல் சர்வாதிகாரி சலாஜரைப் பேச்சு வார்த்தைகளினால் சமரஸத்துக்குக் கொண்டு வர முடியாது என்பது முற்றிலும் உண்மையாகவே இருக்கலாம். நமது

உடைமையான கோவாவைப் பற்றி சலாஜருடன் விவாதம் நடத்துவது அவசியமில்லை என்றும் கருதலாம். ஆனால் எல்லா நாடுகளின் உடைமைகளையும் பாதுகாத்துத் தரவே ஏற்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அந்தஸ்தை இவ்வாறு ஒதுக்கிவிட முடியாது. தார்மீக அடிப்படையில் மட்டுமே உலகத்தையும் இணைக்கும் ஐக்கியநாடுகள் சபைக்கு தர்ம பூமியாகிய இந்தியா என்றும் மதிப்பளித்தே தீர வேண்டும். ஐ. நா. பாதுகாப்புக் குழுவில் இந்தியாவின் ராணுவ நடவடிக்கையை ருஷியா ஆதரித்து மேலைநாடுகளின் எதிர்ப்புத் தீர்மானத்தை முறித்து விட்டதால் இந்தியாவின் நேரடி நடவடிக்கை நியாயமாகி விடாது. ஏனெனில் இந்த விவாதம் நடக்கும் முன்பே, அதாவது ஐக்கிய நாடுகள் நம் செயலைப் பற்றி என்ன கருத்து கொண்டுள்ளது என்பதை அறியுமுன்பே இந்திய ராணுவம் கோவாவில் பிரவேசித்து விட்டது. ஐ. நாவில் இந்தப் பிரச்னை விவாதத்துக்கு வரப்போகிறது என்பதும் இந்திய சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறிருக்க ஐ. நா. வின் தாற்காலிகக் காரியதரிசி ஸ்ரீ ஊ தாண்ட் நேருஜிக்குச் சமாதான வழியில் தீர்வு காண வேணுமென எழுதியிருந்ததையும் பொருட்படுத்தாமல், சர்க்கார் ராணுவ பலத்தைக் கொண்டு நீதியை நிலைநாட்டிக் கொண்டுவிட்டது.

போர்ச்சுகலுடன் மேலை வல்லரசுகள் ராணுவ உடன்படிக்கை செய்து கொண்டிருப்பது உண்மையே. எனவே அவை விடாக்கண்டரான சலாஜருடன் பேசிச் சமாதான முறையிலேயே கோவா விவகாரத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென இந்தியாவை நிர்ப்பந்திக்கக் கூடும் என்று நேரு சர்க்கார் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அதே சமயத்தில் இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ருஷியா தன் ரத்து அதிகாரத்தைப் பிரயோகிக்கும் என்பதையும் இந்திய சர்க்கார் நன்றாக அறிந்திருக்கும். அதோடு கோவா விஷயம் ஐ. நா. பொதுச் சபையில் விவாதத்துக்கு வந்தாலும், அதில் பெரும்பாலான நாடுகள் போர்ச்சுகலின் விதண்டாவாதங்களை ஒரு போதும் ஏற்க மாட்டா என்பதையும் நம் அரசாங்கம் நிச்சயமாக உணர்ந்திருக்கும். எனவே இந்தப் பிரச்னையில் உலகக் கருத்து தனக்குச் சாதகமாகவே இருக்கும் என்பதில் பாரத சர்க்கார் எள்ளளவும் ஐயப்பட்டிருக்க வேண்டியதில்லை. இவ்வாறிருக்கும்போது ஐ. நா. வில் விவாதம் நடக்கப் போகிறது என்பதையே இலட்சியம் செய்யாமல், இந்திய சர்க்கார் இவ்வளவு பரபரப்புடன் கோவா மீட்சியில் இறங்கியதற்குக் காரணம் தேர்தல் ஜுரத்தில் கண்ட ஜன்னி வேகம்தான். சீனாவின் புது ஆக்கிரமிப்பை மழுப்பிவிட வேண்டும் என்று செய்த காரியமே இது.

‘இந்தியாவின் செயல் ஐ. நா. சபையின் மரணத்துக்கு அடிகோலும் முதல் படி’ என்று அமெரிக்கப் பிரதிநிதி ஸ்ரீ ஸ்டீவன்ஸன் கூறினார். போர்ச்சுகலுடன் ராணுவ உடன்பாடு கொண்டுள்ள அமெரிக்கா இவ்விஷயத்தில் பாரபட்சம் காட்டியே இருக்கலாம். எனினும் அதன் பிரதிநிதி இவ்வாறு கூறியது உண்மையில் இந்தியாவைக் குறித்த ஒரு கண்டனமே அல்ல. இந்தியாவே ஐ. நா.வைப் புறக்கணித்தால் அந்த ஸ்தாபனம் மாள வேண்டியது தான் என்று அவர் கூறியிருப்பது இந்நாள் வரை இந்தியா தர்மத்துக்கு எவ்வளவு தூரம் கட்டுப்பட்டு வந்தது என்பதற்கு ஒரு நற்சான்றிதழே ஆகும். சீனாவுக்குக் கோட்டை விட்டதைப் பூசி மெழுகித் தேர்தலில் நல்ல பெயர் எடுக்க வேண்டுமெனச் செய்த வீர தீர பராக்கிரமத்துக்காக அந்தப் பெருமை பலியாகி விட்டது.

‘கோவாவில் தேர்தலைக் கலப்பது எதிர்க்கட்சிகளின் தந்திரம்; அது படுபாதகமானது’ என்று நேரு அவர்கள் முழங்கலாம்; உள் நாட்டுப் பத்திரிகைகள் அவ்விதம் கூறினாலும் அவற்றைப் பயமுறுத்தலாம்; ஆனால் நடுநிலைமைக்குப் பெயரெடுத்த ‘நியூயார்க் டைம்ஸ்’ பத்திரிகைகூட இந்த நடவடிக்கையைத் தேர்தலுடன் பிணைத்துத்தான் பார்க்கிறது. உலக அபிப்பிராயம் என்ன வென்று கூடத் தெரிந்து கொள்ள முடியாமல் அவசரக் கோலத்துடன் கோவாவில் பிரவேசித்ததற்கு நேருஜி வேறு என்னதான் காரணம் சொல்லுகிறார் ?

மிருக பலம் இன்றி தர்ம பலத்தாலேயே இயங்கும் ஐ. நா. வின் மாண்பை மதித்து வந்த நாடுகளில் இந்தியாவுக்கு இணையாக எந்த நாட்டையும் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நாடு தனது புராதனப் பண்பையும், அதற்கு ஓர் உருவகமாகத் திகழ்ந்த அண்ணல் காந்தியின் ஆணையையும் சிதைத்து விட்டதாக இன்று அவப் பெயர் வாங்கிக் கட்டிக்கொண்டு விட்டது. இனி சர்வ தேச சம்பவங்களைப் பற்றிப் பேசும் போது சமாதானத்தையும், சாந்தியையும் உபதேசிக்க நமக்கு ஏது அருகதை? ஐ. நா.வை உலக நாடுகள் மதிக்க வேண்டும் என்று வற்புறுத்த இனி நமக்கு ஏது தகுதி? எல்லாவற்றுக்கும் மேலாக, ‘இன்று

ஒரு நல்ல முடிவை மனத்தில் கொண்டு நீங்கள் பின்பற்றிய அதே கெட்ட பாதையை நாளைக்குத் தவறான குறிக்கோள்களை அடையவும் கடைப் பிடிக்க மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?' என்று உலக நாடுகள் கேட்டால் நாம் என்ன பதில் சொல்வது? ஏன், இன்று துன்மார்க்கமாக வட எல்லையில் ஊடுருவியுள்ள சீனு நமது ராணுவ நடவடிக்கையைப் பாராட்டி விருப்பதே இந்த 'நியாயத்தை' அநுசரித்து வெளியானது தானே? ஒருவேளை நம் வழி முறையையே தானும் மேற்கொள்ளுவதாகக் கூடச் சீனு இனி திரித்துக் கூறலாமல்லவா?

இப்படிப்பட்ட பேச்சுக்கள் — அவற்றின் நியாய அநியாயங்கள் எப்படியிருந்தாலும் — எழுவதற்கு இந்திய சர்க்கார் இடமளித்து விட்டது. இதனைக் கண்டு விசனப்பட்டுத்தான் நாம் இவ்வாறு எழுதுகிறோம். கோவா விடுதலை பெற்றதை இன்று இந்த நாட்டில் வரவேற்காதவர்கள் யாருமே இருக்க முடியாது. எனவே, அந்த விடுதலையைப் பெறுவதற்காக மேற்கொண்ட முறையைக் கண்டிப்பவர்கள் கோவாவின் சுதந்திரத்தையே விரும்பவில்லை என்று யாரும் எண்ண வேண்டாம். அப்படி விஷமப் பிரசாரம் செய்பவர்களை நம்பவும் வேண்டாம். இன்று வெற்றிப் பெருமிதத்தில் திளைத்திருந்து இவ்வாறு விஷமம் செய்பவர்களே ஆழ்ந்து சிந்தித்தால் தவற்றை உணரத்தான் செய்வார்கள்,

உரிமையைக் காக்க ஒரே உபாயம்

பிரிட்டிஷ் ஆட்சியி லிருந்து நாடு விடுதலை பெற்ற பின்பு இந்த நாட்டை எப்படிப் பரிபாலனம் செய்ய வேண்டும் என்பதனை வரையறுத்துக் கூறிய அரசியல் நிர்ணயச் சட்டம் மக்களின் பூரண சுதந்திரத்துக்கும் பாதுகாப்பளித்தது. சட்டங்கள் இயற்றும் சர்க்கார், அவற்றை அமுலாக்கும் நிர்வாக இயந்திரம், அரசியல் நிர்ணயச் சட்டம் கூறியுள்ள விதி முறைகளுக்குச் சர்க்கார் இயற்றும் புதுச் சட்டங்கள் உட்பட்டனவா என்று ஆய்ந்து பார்க்கும் நீதி மன்றங்கள், மக்கள் — இந்த நான்கு துறையினருக்குமுள்ள உரிமைகளையும் சுதந்திரங்களையும் அது திட்டவட்டமாக வரையறுத்திருந்தது. ஆனால் 1950-ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட அந்த உரிமை எல்லைக் கோடுகளையெல்லாம், கடந்த பதினோராண்டுகளில் காங்கிரஸ் ஆட்சி அழித்து விட்டது. தேச சுதந்திரம் என்பது சர்க்கார் தன் இஷ்டப்படி நடக்க வசதி தரும் சர்வாதிபத்திய சுதந்திரமே என்ற நிலையை உண்டாக்கி விட்டது.

இன்று சுதந்திரக் கட்சியானது உடைமையைக் காக்கவும் சுதந்திரமாகத் தொழில் செய்யவும் மக்களுக்குள்ள உரிமையைப் போற்றுகிற தல்லவா? இந்தத் தொழிலுரிமையும், உடைமை உரிமையும் அரசியல் நிர்ணயச் சட்டம் அவர்களுக்கு அளித்திருந்தவைதான். ஆனால் எல்லாவற்றுக்கும் மக்கள் அரசாங்கத்தையே நம்பி வாழுமாறு செய்து தன் ஆதிக்கத்தை வேரூன்றிக்கொள்ளக் கருதிய காங்கிரஸ், பெர்மிட்-லைசென்ஸ முறையைக் கைக்கொண்டு மக்களின் சுதந்திரத் தொழிலுரிமையை நாசமாக்கி விட்டது. இதே போல, பொது நல நோக்கம் என்ற பெயரில் தனியாரின் சொத்துக்களை ஆர்ஜிதம் செய்யவும் அரசாங்கம் தனக்குத்தானே அதிகாரங்கள் வழங்கிக் கொண்டு மக்களின் உடைமை உரிமையையும் சர்வநாசமாக்கி விட்டது.

பொது நலனுக்காகத் தனியாரின் உடைமைகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நேரிடுவதுண்டுதான். உதாரணமாக ஒரு சாலை அல்லது இருப்புப் பாதை அமைக்கும் போதோ, அணைகள் கட்டும் போதோ தனியாரின் நிலங்களைச் சர்க்கார் ஆர்ஜிதம் செய்ய வேண்டி வரும். ஆனால் பொதுநல நோக்கத்துக்காகத் தனி மனிதர்களின் சொத்துக்களை எடுத்துக் கொள்ளலாம் என்ற அரசியல் நிர்ணயச் சட்ட ஷரத்தின் கருத்தைத் தனக்குகந்த வகையில் திரித்துப் பொருள் கொண்டது காங்கிரஸ். சர்க்கார் செய்யும் எந்தக் காரியமும் பொதுநலனை நோக்கமாகக் கொண்டதுதான் என்று அது கூற முடியும். சர்க்கார் நடப்பதே பொது மக்கள் நன்மைக்காகத்தானே? எனவே சிலருடைய நிலத்தைப் பிடுங்கி வேறு சிலருக்குக் கொடுப்பதும் பொது நலனை நோக்கமாகக் கொண்டதுதான் என்று வியாக்கியானம் செய்துகொண்டு நிலவரம்புச் சட்டங்களைக் காங்கிரஸ் சர்க்கார் இயற்றியது. இந்தச் சட்டங்கள் சமூகத்தின் ஒரு பகுதியினருடைய சொத்துக்களை வேறொரு பகுதியினருக்கு மாற்றுபவைதான். இதற்குப் பொது நோக்கம் என்று புனைப்பெயர் சூட்டி அரசியல் நிர்ணயச் சட்ட ஷரத்தை வெறும் கேலிக் கூத்தாகச் செய்து விட்டன ராஜ்ய சர்க்கார்கள்.

இப்போது இரு நல்ல செய்திகள் வந்திருக்கின்றன. உத்தரப் பிரதேச சர்க்காரின் நில ஆர்ஜிதத்தைக் குறித்து இந்நாட்டின் தலைமை நீதி மன்றமாகிய சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்பட்ட ஒரு வழக்கில், பொது நோக்கம் என்பது என்ன என்பதற்கு நீதிபதிகள் ஐயம் திரிபற இலக்கணம் கூறியிருக்கிறார்கள். கல்விச் சாலை, மருத்துவ மனை, நூல் நிலையம் இதுபோல் பொது மக்களுக்கு 'ஸ்தூலமாக' அளிக்கக் கூடிய நலன்களுக்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்வது தான் பொது நோக்கமாகுமே ஒழிய குறிப்பிட்ட ஒரு சாராருக்காக வேறொருவரிடமிருந்து பலவந்தப் பறிமுதல் செய்வது பொது நோக்கமாகாது என்று அவர்கள் தீர்ப்புக் கூறியுள்ளனர். தேர்தல் கண்ணோட்டத்துடன், சிற்சில வகுப்பினருக்கு நன்மை செய்கிறோம் என்று கூறிக் கொண்டு, தங்கள் அதிகாரத்தின் கீழ் விவசாயத்தைச் சிக்க வைக்கும் நிலச் சட்டங்களின் கதி இப்போது என்னவாகும் என்பதே கேள்வி.

இதே போல் கேரள விவசாயச் சட்டத்தைப் பற்றி வெளியாகியுள்ள சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு ஒன்றும் சர்க்காரின் நிலக் கொள்கை அநியாயமானது என்பதைத் தெளிவாக்கி யிருக்கிறது. விவசாயிகளிடமிருந்து வரி பெற்று வந்த ஜமீந்தார்களின் நில உரிமைக்கும், ரயத்து வாரி முறையின் கீழுள்ள நிலச் சொந்தக்காரர்களுடைய நில உரிமைக்கும் உள்ள மாறுபாட்டை இத் தீர்ப்பு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

நீதி முன் சம வாய்ப்புப் பெறுவது, சொத்து சேர்ப்பது, சொத்தைக் காப்பது, சொத்து பறிமுதலாகாமல் பராமரிப்பது இவை குறித்த ஜீவாதார உரிமைகள் ஜமீன்தார்கள் விஷயத்தில் தான் தளர்த்தப்பட்டிருந்தனவே ஒழிய, ரயத்துவாரி நிலச் சொந்தக்காரர்களின் இந்த உரிமைகளைப் பறிக்கச் சர்க்காரின் அரசியல் நிர்ணயச் சட்டத் திருத்தம் இடமளிக்கவில்லை என்பதே இத்தீர்ப்பு. சமீப கால நிலப் பறிமுதல் சட்டத்தினால் பயமுறுத்தப்பட்டவர்களுக்கெல்லாம் இந்தத் தீர்ப்பு பெரும் ஆறுதலாக வெளியாகியுள்ளது. அந்தச் சட்டங்களுக்கு அணை கட்டித் தடுத்து நிறுத்திவிட்டது சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு. மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் அரசியல் சட்ட ஷரத்துக்களை ரயத்துவாரி நிலக்காரர்கள் விஷயத்தில் புறக்கணிக்கவோ மீறவோ அதிகாரம் கிடையாது என்பதால் இனி அவர்கள் நிலங்களை அரசாங்கம் தீண்ட முடியாது. அவர்களுக்குக் காப்பு அளிப்பதில் இந்தத் தீர்ப்பு வெகுதூரம் சென்றுள்ளது.

தங்களுடைய தனிப்பெரும் தத்துவமாகவும், தேர்தலில் குடியானவர்களை மயக்கும் வசிய மருந்தாகவும் இருந்த இந்த நிலச் சீர்திருத்தக் கொள்கையைக் கைவிட்டால் காங்கிரஸ் சர்க்காரின் கதி என்னவது? இனி அது என்ன செய்யப் போகிறது என்று ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள் பலர். நாம் அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை ஊகிக்கிறோம்; அதைச் செய்ய விடாமல் தடுக்க வேண்டியது மக்களின் கடமை என்பதையும் அவர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

தற்போது வெளியாகியுள்ள தீர்ப்புகளில் அரசியல் சட்டத்தின் எந்த ஷரத்துக்களுக்குச் சர்க்காரின் செயல் போக்கு விரோதம் என்று கண்டுள்ளதோ அந்த அரசியல் சட்டத்து ஷரத்துக்களையே தங்கள் நோக்கத்துக்கு இசைவாக மறுபடியும் மாற்றிக்கொள்ளக் காங்கிரஸ் சர்க்கார் முயலும். இதைப் பற்றி அணுவளவும் சந்தேகம் வேண்டாம். இது வரையில் தங்களுடைய புதுச்சட்டங்கள், மூல அரசியல் சட்டத்துக்குப் புறம்பானவை என்று தீர்ப்பானபோதெல்லாம் மூலத்தை மாற்றுவதே சர்க்காரின் காரியமாக இருந்திருக்கிறது. இப்போது மக்களின் ஜீவாதார உரிமைகளைக் கூறும் அரசியல் சட்ட ஷரத்துக்களும் அந்தக் கதியை அடையவிடக் கூடாது. இது ஒன்றுக்காகவே மக்கள் காங்கிரஸுக்கு மீண்டும் அதிகாரம் தரக் கூடாது என்பது நம் கோரிக்கை. ஏனெனில் தேர்தலுக்குப்பின் கூடும் புதுப் பார்லிமெண்டில்தான் புதிதாக அரசியல் நிர்ணய சட்டத் திருத்தங்கள் பிரேரணையாகக் கூடும். இந்தத் திருத்தங்கள் நிறைவேறுவதற்குப் பார்லிமெண்ட் அங்கத்தினர்களில் வெறும் மெஜாரிட்டி போதாது, மூன்றில் இரு பங்கினர் ஆதரவளித்தாக வேண்டும். ஆகவே தங்களுடைய ஜீவாதார ஜனநாயக உரிமையை மக்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றக் கூடாது என்று கருதுபவர்கள் பார்லிமெண்டில் மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்களையாவது பெற்றே தீரவேண்டும்.

அரசியல் நிர்ணயச் சட்டம் மூலத்தில் இருந்தவாறே மீண்டும் உயிர்பெற வேண்டும் என்பதில் அயராத உறுதி பூண்டுள்ள கட்சி சுதந்திரக் கட்சிதான். எனவே, சுதந்திரக் கட்சி அங்கத்தினர்களை மக்கள் பெருவாரியாகத் தேர்ந்தெடுத்தனுப்பி, தங்கள் சுதந்திரவாழ்வு நாளுக்கு நாள் சிதிலமாகி வருவதைத் தடுத்து நிறுத்துவார்களாக!

ஒரு சின்னக் கணக்கு

ராஜாஜி

சோஷலிஸ சித்தாந்தத்தை நடைமுறையாக்கி, வருமானங்களைச் சமமாக விநியோகம் செய்தோமானால் நாம் ஒவ்வொருவரும் மாதம் இருபத்தைந்து ரூபாய்தான் பெறுவோம். இது கட்டுக்கதை அல்ல. சர்க்கார் தந்திருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து போட்ட பிசகில்லாத கணக்கே ஆகும்.

தேசிய வருமானத்தில் மக்களின் சராசரி தலா வருமானம் என்று அரசாங்கம் எதைச் சொல்கிறதோ அதுதான் சோஷலிஸ விநியோகம் சட்டமானால் நம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பங்கு. இந்தத் தலா வருமானம் இன்றைக்கு இருபத்தைந்து ரூபாய்தான்!

இப்படி விநியோகம் நடந்தால் தேசிய வறுமைதான் ஏற்படுமே ஒழிய, தேசிய சுபிட்சம் ஏற்படாது என்பதைச் சொல்ல வேண்டியதே இல்லை. அதோடு இந்த விநியோகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் மாபெரும் நிர்வாக இயந்திரமும் தேசிய வருமானத்தில் ஒரு பங்கை விழுங்கி விடும். மிச்சமுள்ளதுதான் எல்லாருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்; மக்கள் பங்கு மேலும் குறையும்.

பலவந்த முறையில் சம விநியோகம் செய்வது எவ்வளவு கேலிக்கிடமானது என்று கணித ரீதியில் பார்த்து விட்டோம். ஆனாலும் இந்தப் பைத்தியக்காரக் கொள்கைக்கு வேறு சொருபங்கள் கொடுத்துப் பேசுபவர்கள் இருக்கிறார்கள். தேசிய வருமானத்தை ஒவ்வொருவருக்கும் சமமாகப் பங்கிட்டுத் தருவது நகைப்புக்கிடமானபடியால், முற்றிலும் பங்கிடாமல் ஓரளவு செய்யலாம் என்று இவர்கள் சொல்வார்கள். குறிப்பிட்ட ஓர் அளவுக்குமேல் யாருக்கும் சொத்து இருக்கக் கூடாது; எஞ்சியிருப்பதைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பார்கள். இப்படிச் சோஷலிஸம் பேசும் ஒவ்வோர் அரசியல்வாதியும், தாமும் தமக்கு வேண்டியவர்களும் எவ்வளவு சொத்து வைத்திருக்கிறார்களோ அதற்கு மேல் ஒருவரிடம் இருந்தால் அதைப் பறிக்க வேண்டும் என்று தர்மம் சொல்வார்! ஆனால் சோஷலிஸ சித்தாந்தத்தின் இந்தத் 'தழுவல்' பிரதி ஜனநாயகத்தில் செல்லுபடியாகாது. சமத்துவக் கொள்கை என்று சொன்னபின் சிலருக்கு மட்டும் சலுகை காட்டுவது நியாயமாகாதல்லவா?

பலவந்தச் சொத்துப் பங்கீடு நாடு முழுவதையும் ஏற்றத் தாழ்வில்லாமல் தரித்திர மயமாக்குவதோடு நிற்காது; அப்போது நாட்டின் மொத்த உற்பத்தியும் குறைந்து கொண்டே போகும். ஒருவன் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும், கவனத்துடன் தொழில் செய்தாலும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சம்பாதிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டபின் யார் உற்சாகத்துடன் வேலை செய்வார்கள்? வேலை இல்லாமல் உற்பத்தி எப்படி உயரும்? உற்பத்திக்கு முதலும் யாரும் போடமாட்டார்கள்.

எனவே, இனியாவது சம விநியோகம் செய்வது பற்றித் திட்டம் போடுவதை நிறுத்துவோம்; சோஷலிஸத்தால் சுபிட்சம் காணலாம் என்ற சொப்பனத்திலிருந்து விழித்துக் கொள்வோம். மொத்த உற்பத்தி பெருகினால்தான் தேசத்தின் மொத்த வருமானம் அதிகரிக்கும்; அதனால் சுயமாகவே ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய பங்கும் அதிகரிக்கும் என்பதை உணர்வோம்; உணர்ந்து, உற்பத்தியை மக்கள் பெருக்கச் செய்வதற்கான காரியங்களைப் பற்றிச் சிந்திப்போம்.

உழைப்பாலும், உற்பத்தி உயர்வாலும் தங்களுக்கு அதிக நன்மை கிடைக்கும் என்ற ஊக்கத்தை மக்கள் பெறாத வரையில் நம் பொருளாதார நிலை மேன்மை அடையாது. இன்று உற்சாகம் அளிப்பதற்கு நேர்மாறாக, உற்பத்திப் பலனைச் 'சட்டப்படி' அபகரிப்போம் என்று பயமுறுத்துகிறது அரசாங்கம். வரி உயர்வு, பறிமுதல் சட்டங்கள் இவைமூலம் இந்தக் கொள்ளை நடக்கிறது.

வருமானத்தைச் சமப்படுத்துவது நடக்காத காரியம். அப்படி நடைபெற்றாலும் அந்தச் சம நிலை அதிக காலம் தாக்குப் பிடிக்க முடியாது. வருமானம் ஓரிடத்திலும் கூடாமல் குறையாமல் இருக்க வேண்டுமானால் அதற்கு எவ்வளவு கண்காணிப்பு வேண்டும்? ஓயாமல் ஒழியாமல் செல்வத்தை மாற்றி மாற்றி விநியோகம் பண்ணுவது நடக்கிற காரியமா? அதிகாரிகளும், உளவு பார்ப்பவர்களும் ஏராளமாக நியமனமாவார்கள். இவர்களுக்காகத் தேசிய வருமானத்தில் ஒரு பெரிய பங்கு செலவாகும். ஊழலும், கொடுங்கோன்மை

யும் கால நியதியாகி விடும். கம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்து தப்பி வந்தவர்கள்தான் இந்த நிலையை நன்ருகச் சொல்ல முடியும். நிரந்தரமாக உளவு பார்ப்பதிலும், கணக்குகளைத் தணிக்கை செய்வதிலும், சட்டங்களைப் போட்டுத் தள்ளுவதிலும் ஒருகால் வெற்றிகண்டபோமானுலும் தேசிய வருமானம் குறைந்து கொண்டேதான் இருக்கும். புது உற்பத்தி முறைகளைக் கண்டு பிடிக்கவும், புதுப் புதுப் பொருள்களைச் செய்யவும், பழைய உற்பத்தியைப் பெருக்கவும் ஒரு விதமான தூண்டுதலும் இல்லாதபோது பொருளாதார வாழ்வு எப்படி உயரும்? இதே சமயத்தில் ஜனத்தொகையும் ஏறிக் கொண்டே போகும்; அதாவது, தலா வருமானம் இறங்கிக் கொண்டே இருக்கும்.

இதெல்லாம் தெளிவாகத் தெரியும் உண்மைதான். எல்லாருக்கும் இது புரியும். ஆனல் வயது வந்தவர்கள் எல்லாரும் வோட்டுரிமை பெற்றிருக்கும்போது, வஞ்சனைக்கும், அந்த வஞ்சனையை அறியாத அப்பாவித் தனத்துக்கும் எல்லேயே கிடையாது. ஆனபடியால் தான் மோசக்காரர்கள் தங்களுடைய கபடமான வாக்குறுதிகளைத் திரும்பத் திரும்பச் சொல்கிருர்கள். அதைச் சரிக்கட்டவே இந்தச் சாமானிய உண்மையை மீண்டும் மீண்டும் விளக்கி வருகிறேன்.

என்ன சேதி?

வோட்டுரிமைக்கே வேட்டா?-இல்லை

'வாக்காளர் பட்டியலில் ஒவ்வொரு வாக்காளருக்கும் அளிக்கும் வோட்டுச் சீட்டின் இலக்கம் குறித்துக் கொள்ளப் படுவதால் யார் யாருக்கு வோட்டளித்தார் என்பது வெளியாகி விடும்; இந்தத் தேர்தலை எப்படி இரகசியத் தேர்தல் என்பது?' என்று பலர் ஐயப்படுகிருர்கள். இவ்வாறு ஐயம் தெரிவிக்கும் 'வோட்டுரிமைக்கே வேட்டா?' என்ற ஒரு கடிதம் இவ்விதழிலேயே பிரசுரமாகி யுள்ளது.

இப்போது இரகசியத் தேர்தலைப் பற்றிய ஓர் இரகசியத்தை 'அவிழ்க்க' வேண்டியதாகி விட்டது. வாக்காளர் பட்டியலில் வாக்குச்சீட்டின் எண்ணிக்கையைப் பதிவு செய்வது எப்போதுமே இருந்து வரும் வழக்கம் தான். ஆள் மாருட்டம் நடைபெறுவதைக் கண்டு பிடிக்க இம் முறை உதவுகிறது. உதாரணமாக, ஒருவர் வேருெரு வாக்காளர் பெயரைச் சொல்லி வோட்டுப் போட்டு விடுகிருர்; பிறகு உண்மை வாக்காளர் வோட்டுச்சாவடிக்கு வருகிருர் என்று வைத்துக் கொள்வோம். பட்டியலில் அவர் பெயருக்கு எதிரே ஏற்கெனவே வோட்டுப் போட்டவருடைய வோட்டுச் சீட்டின் இலக்கம் குறிக்கப்பட்டிருப்பதால் தான் அதனைச் செல்லாததாக்க முடிகிறது. நியாயமாக வோட்டுரிமை பெற்றவர் அந்த உரிமையைப் பிரயோகிக்க முடிகிறது. ஆகவே இரகசியத் தேர்தலில் இரகசியமாக ஊழல் நடைபெறுவதைத் தடுக்க இந்த வழியைப் பின்பற்றியே ஆகவேண்டியிருக்கிறது.

பெருமளவில் வோட்டுக்கள் பதிவாகி, அவற்றை வேகமாக எண்ணும்போது எந்த இலக்கச் சீட்டு யாருடையது என்று கண்டுகொள்வது அசாத்தியம். கட்சிப் பிரதிநிதிகளை வைத்துக் கொண்டே வோட்டுக்கள் எண்ணப் படுவதால் இந்த அபாயம் மேலும் தவிர்க்கப்படுகிறது. எனவே வாக்காளர் யாவரும் ஒருவிதமான பீதியுமில்லாமல் தங்கள் உள்ளத்தின் ஆணைக்கிணங்க வோட்டளிக்கலாம்.

பரிசைக் கௌரவிக்கிருர்கள்

இசை, நடனம், நாடகம், சினிமா முதலிய துறைகளைச் சேர்ந்த பழம் பெரும் கலைஞர்களுக்குத் தமிழக சங்கீத நாடக சங்கத்தினர் பரிசுகள் வழங்கி வருகிருர்களல்லவா? இந்த 1961-62ம் ஆண்டுக்காக அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள கலைஞர்களின் பெயரைப் பார்க்கும்போது ஆச்சரியம் ஏற்பட்டது — இதற்கு முன்பே இவர்கள் எப்படி இந்தக் கௌரவத்தைப் பெருமல் போனுர்கள் என்றுதான். தத்தம் துறையில் அவ்வளவு தேர்ச்சி பெற்றவர்கள் இந்த விற்பன்னர்கள்.

ஸ்ரீமான்கள் பாபநாசம் சிவன், பி. எஸ். ராமையா, பந்தணை நல்லூர் சொக்கலிங்கம் பிள்ளை, வி.நாகையா, இளங்கோவன், கே. ஆர். ராமசாமி, டி. கே. முத்துசுவாமி, கோமதிநாயகம் பிள்ளை, டி. ஆர். சுந்தரம், ராஜா சந்திர சேகர், ருத்திரபதிப் பிள்ளை ஆகியோரும் ஸ்ரீமதிகள் சரஸ்வதி பாய், எஸ். டி. சுப்புலக்ஷ்மி, டி.பி.ராஜலக்ஷ்மி ஆகியோரும் இந்த ஆண்டு தங்கப் பதக்கம் பெற்று அதனைப் பெருமைப் படுத்துகிருர்கள். கலைஞர்கள் யாவருக்கும் நம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



1. ஆறுமுக நாவலர் அவர்களின் எண்பத்திரண்டாவது குருபூஜை சிதம்பரத்தில் சென்ற மாதம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பொது மக்களும் நாவலர் வித்தியாசாலையின் மாணவ மாணவிகளும் கலந்துகொண்டனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நாவலரின் வாழ்க்கை வரலாறும் சமயத் தொண்டும் பற்றித் திரு மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கள் உரை ஆற்றினர்.

2. இந்திய அரசாங்கக் கலாச்சார இலாகாவின் அழைப்புக்கிணங்கி நம் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த பல்கேரியா கிராமிய நடன கோஷ்டியார் சென்னையில் இம்மாதம் அரிய கலை விருந்தளித்தனர். நமக்குப் பழக்கப்பட்ட புல்லாங்குழலை இசைக் குழுவைச் சேர்ந்த நிகோலா கோஸ்டால் இசைத்தது ரசிக்கும் படி இருந்தது. பல்கேரியா நாட்டுப் பாடல்களும் சில இடங்களில் நமது நாட்டுப் பாடல்களை நினைவூட்டின.

3. புதுதில்லியில் நடைபெறும் இந்தியத் தொழிற் கண் காட்சியில் டால்மியா சிமெண்ட் ஸ்டாலுக்குச் சென்னை முதன்மந்திரி திரு காமராஜ் விஜயம் செய்தார். இந்த ஸ்தாபனத்தின் தலைவர் ஸ்ரீ வி. எச். டால்மியாவையும், டி. வி. எஸ். மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ணாவையும் அவருடன் காணலாம்.

4. தினமணி துணை ஆசிரியர் திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் அவர்களின் புதல்வி சௌ சுசீலாவுக்கும் திரு ஆர். வரதராஜனுக்கும் சென்னையில் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. வாழ்க மணமக்கள்.

5. சென்னை சர்க்கார் புதுக்கோட்டையில் நடத்தும் தாய்முறை கறவை நிலையங்களை மராமத்து அமைச்சர் திரு கக்கன் அவர்கள் திறந்து வைத்தார்.

6. டாக்டர் வே. ராகவன் அவர்களின் புதல்வி பிரியம்வதா மயிலாப்பூர் சாயிகான சபாவில் டிசம்பர் 10-ந் தேதி நடன விருந்தளித்தார். தலைமை வகித்த திரு எஸ். வேங்கடேசுவரன் குமாரி பிரியம்வதாவின் நடன ஆசிரியை ஸ்ரீமதி பாலசரஸ்வதிக்குத் தங்கத் தோடாவும், நடன ஆசிரியர் திரு கணேசனுக்குப் பொன்னாடையும் வழங்கினர்.



2




3



4



6



5

உத்தரப் பிரதேசத்தில் நான்கு நாட்கள்

எஸ்.வி.எஸ்.

பஞ்சாப் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு தில்லிக்கு ராஜாஜி வந்து சேர்ந்தால் அங்கு உத்தரப் பிரதேசச் சுற்றுப் பிரயாணத் திட்டம் தயாராகக் காத்துக் கொண்டிருந்தது. தில்லியில் ஒருநாள் தங்கிவிட்டு டிசம்பர் 5ம் தேதி காலை உத்தரப் பிரதேசத்தில் முதன் முதலில் மீரட்டுக்குச் சென்றார்.

மீரட் வக்கீல் சங்கத்தில் ஐந்நூறு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்றால் அது எவ்வளவு முக்கியமான சங்கம் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இங்கு பேசும்போது ஒரு முக்கியமான விஷயத்தை ராஜாஜி வலியுறுத்தினார்.

''அரசியல் நிர்ணயச் சட்டம் பொதுநலனைக் கருதி ஆர்ஜிதம் செய்யும் சொத்துக்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று கூறுகிறது. நம் சர்க்கார் 'நியாயமான' நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்ற புதுத் திருத்தத்தைச் சேர்த்து அநியாயமான நஷ்ட ஈடு வழங்கத் தொடங்கி யிருக்கிறார்கள்.

''பால் என்று சொன்னால் தண்ணீர் கலவாத பால் என்று விளக்க வேண்டுமா, என்ன? உண்மை என்றால் பொய் கலவாத உண்மை என்று சொல்வார்களா என்ன? அதேபோல் நஷ்ட ஈடு என்றாலே நியாயமான நஷ்ட ஈடு என்பதைத்தான் குறிக்கும்! அதாவது அன்றைய தேதியில் ஒரு பொருளுக்கு மார்க்கெட்டில் என்ன விலையோ, அதைக் கொடுக்க வேண்டும் என்றுதான் பொருளாகும். ஆனால் 'நியாயமான' என்ற அடைமொழி சேர்த்து அதற்குப் பலவித வியாக்கியானங்களும் விளக்கங்களும் ஏற்படுத்தி அநியாயமான நஷ்டஈடு தர ஏற்பாடு செய்திருக்கிறார்கள்'' என்றார் ராஜாஜி.

அன்று மாலை மிகப் பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தப் பொதுக் கூட்டத்தில், லைசென்சு, பெர்மிட்டுகள் மூலம் நடைபெறும் ஆட்சி எவ்வளவு கொடுமையானது என்பதை மிகத் தெளிவாக விளக்கினார்.

''முன் காலத்தில் யாரும் எந்தத் தொழிலும் நடத்தலாம். யாரையும் கேட்டு அனுமதி பெற வேண்டியதில்லை. நகரசபைக்கு ஒரு சிறு தொகை கட்டணம் செலுத்த வேண்டியிருக்குமே தவிர மற்றப்படி எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. ஆனால் இன்று எந்தத் தொழில் நடத்த வேண்டுமென்றாலும் சர்க்காரின் அனுமதி, பெர்மிட், லைசென்சு பெற்றாக வேண்டும். சிறையிலிருக்கும் கைதிகள், ஒவ்வொரு சமயம் சிறை அதிகாரிகளின் அனுமதி பெற்றுப் பத்து நாட்கள் பதினைந்து நாட்கள் வெளியில் (பரோலில்) இருந்துவிட்டு வரலாம். அதேபோல் இன்று காங்கிரஸ் ஆட்சி நாட்டையே ஒரு சிறைக்கூடமாக்கி, காங்கிரஸ்காரர்களையும் அதிகாரிகளையும் சிறை அதிகாரிகளாக்கி யிருக்கிறது. தொழில்களிலும் வியாபாரங்களிலும் ஈடுபட்டுள்ள மக்கள், இந்த அதிகாரிகளின் அனுமதி பெற்றே வியாபாரமும் தொழில்களும் நடத்த வேண்டியிருக்கிறது! பரோல் கைதிகளைப் போல் வாழ வேண்டியிருக்கிறது! இந்த அவல நிலையைப் போக்கி, சுதந்திர வாழ்வைத் தரவே சுதந்திரக் கட்சிக்கு வோட்டுப் போடுங்கள் என்கிறேன்'' என்றார்.

அலிகர் சமீபத்தில் மிகவும் பிரபலமடைந்தது நினைவிருக்கும். டிசம்பர் 6-ம் தேதி பிற்பகல் அங்கு ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இங்கு ராஜாஜியுடன் ஸ்ரீ ரங்காஜியும் பேசினார். இருவரும், வட எல்லையில் சீனாவின் ஆக்கிரமிப்பு அதிகமாகி வரும் போது, இந்திய சர்க்கார் கோவாவுக்கு இந்தியத் துருப்புக்களை அனுப்பி வருவதன் பேதைமையைச் சுட்டிக் காட்டினார்கள்.

மறுநாள் 7-ம் தேதி மாலை கான்பூரில், நடுக்கும் குளிரில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. அங்கு ராஜாஜி பின்வருமாறு கூறினார்: ''உலகிலேயே மிக உயர்ந்த மலை இமயமலை என்பார்கள். ஆனால் அதை விட உயர்ந்தது காங்கிரஸ் சர்க்கார் வாங்கியுள்ள கடன் சுமை!''

சர்க்கார் துறைத் தொழில்களைப் பற்றிச் சொல்லி வரும்போது, ''சில செடிகளில் பழங்களைவிட முட்கள் அதிகமாக இருக்கும்; அதே போல் சர்க்கார் ஏற்று நடத்தும் தொழில்களிலும் வியாபாரங்களிலும் ஏராளமான அதிகாரிகள் இருப்பார்களே தவிர மக்களுக்குப் பயன் விளைவிக்கக்கூடிய காரியம் ஒன்றும் நடைபெறாது!'' என்று கூறினார்.

கான்பூர் கூட்டம் முடிந்தவுடனேயே தம் சுற்றுப் பிரயாணத்தை மேலும் தொடரப் புறப்பட்டு விட்டார். மறு நாள் கோண்டா என்ற ஊரை அடைந்தார்.

கோண்டா சிறிய ஊராயினும் ஏராளமான விவசாயப் பெருங்குடி மக்கள் ராஜாஜியின் பொன்னுரைகளைக் கேட்கக் காலையிலிருந்தே அக்கம் பக்கம் கிராமங்களிலிருந்து வந்துகூடி விட்டனர். சுதந்திரக் கட்சி நிலவரியை ரத்து செய்யத் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னவுடன் அவர்கள் உள்ளத்தில் ஒரு புது உற்சாகமும் ஏற்பட்டு நிமிர்ந்து உட்கார்ந்தனர்.

அன்று மாலை மன்காபூர் போய்ச் சேர்ந்தோம். மன்காபூரில் ஸ்ரீ ராகவேந்திர பிரதாப் சிங் இல்லத்தில் ஆரத்தி சுற்றி, நெற்றியில்

திலகமிட்டு ராஜாஜியை வரவேற்றனர். மறு நாள் காலை ராஜாஜியின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் வகையில் ஒரு பெரும் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஏழாயிரம் எண்ணாயிரம் கிராம மக்கள், இந்நன்னாளில் உலகம் போற்றும் உத்தமரைக் காணும் பேறும், பாக்கியமும் பெற்றோமே என்று மகிழ்ந்தனர்.

மன்காபூரிலிருந்து பஸ்தி என்ற ஊருக்குப் போனோம். அது கனி வள மந்திரி ஸ்ரீ கே. டி. மாளவியாவின் ஊர். ராஜாஜி வருகிறார் என்று அறிந்து அவர் தில்லியிலிருந்து சுதந்திரக் கட்சியைத் தாக்கி அறிக்கை அனுப்பியிருந்தார். மக்கள் அதனைச் சற்றும் பொருட்படுத்தவில்லை என்பதற்கு அன்று அங்கு அமைதியுடன் நடந்த பெருங் கூட்டமே அத்தாட்சி. பதினாயிரம் பேர்கள் ராஜாஜியின் பொன் உரைகளைக் கேட்டனர்.

''இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன், பாரத நாட்டில் யாரும் செய்யத் துணியாத போது நான் எங்கள் ராஜ்யத்தில் ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தேன்.

''ஏழை விவசாயிகள் கடன் சுமை தாங்காமல் கஷ்டப்பட்டு வந்த போது, அசலை விட இரண்டு பங்கு வட்டி செலுத்தி யிருந்தால், அந்த விவசாயி கடன் செலுத்தி விட்டதாகக் கொள்ள வேண்டும் என்று கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்தேன். இப்படிப்பட்ட என்னை ஜமீன்தார்களின் தோழன் என்று காங்கிரஸ்காரர்கள் பொய்யும் புனை சுருட்டும் கட்டி விடுவதைக்கண்டு சிரிக்கத்தான் வேண்டியிருக்கிறது'' என்றார்.

''காங்கிரஸ்காரர்கள் கூட்டுப் பண்ணை ஏற்படுத்தப் போவதாகச் சொல்லுகிறார்கள். அப்பண்ணையில் அவரவர்களின் நில உரிமை பாதுகாக்கப்படுவதற்கு அத்தாட்சியாகக் காகிதம் எழுதித் தருவார்களாம். ஒரு காலத்தில் ஒரு ரூபாய் நோட்டுக்கு உண்மையில் ரூபாய் மதிப்பு இருந்தது. அது எப்படிக் குறைந்து நாலணா மதிப்புக்கு வந்து விட்டதோ அதே போல் இந்த நிலவுரிமைக் காகிதத்தின் மதிப்பு ஒரு சில ஆண்டுகளில் ஒன்றுமில்லாமல் போய் விடும்!'' என்று கூறிக் கூட்டுப் பண்ணையின் மோசடியைப் பளிச்சென்று விளக்கிக் காட்டினார் ராஜாஜி.

பஸ்தியுடன் தம் உ. பி. சுற்றுப் பிரயாணம் முடிந்து விட்டது என்றுதான் கருதினார் ராஜாஜி. ஆனால், பஸ்தியிலிருந்து கோரக்பூர் சென்று ரயில் ஏற வேண்டியிருந்ததால், கோரக்பூர் சுதந்திரக் கட்சியினர் வற்புறுத்தியதன்மீது அங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு மட்டும் ராஜாஜி ஒப்புக் கொண்டார்.

அங்கு அந்நியக் கடன்களைப் பற்றிக் கூறும் போது, ''இக்கடன்களைத் தீர்ப்பது என்பது, நாளுக்குநாள் நான் இளமையடைவது எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு சாத்தியம்'' என்றார். இதன் உண்மையைப் புரிந்து கொண்டு மக்கள் 'கொல்' என்று சிரித்து விட்டனர். இந்தக் கூட்டத்தில் ராஜாஜி, 'கத்திரிக்கோலின் இரு பாகங்களுக்கிடையே சிக்கிய நூலைப்போல, வரிக்கொடுமை, விலைவாசி உயர்வு இவற்றிடையே மக்கள் சிக்கிக் கொண்டு தவிக்கிறார்கள்' என்றும் கூறினார்.

''உஷ்ணமானியின் உயர்வு எப்படி ஜுரத்தின் வேகத்தைக் குறிக்கிறதோ, அதே போல் பிரதமரின் கோபம், சுதந்திரக் கட்சியின் வளர்ச்சியைக் காட்டும் உஷ்ணமானி'' என்று அவர் சொன்ன போது மக்கள் பலத்த கரகோஷம் செய்து வரவேற்றனர்.

மறுநாள் ஹஸாரி பாக்கில் பீகார் ராஜ்ய சுதந்திரக் கட்சி மகாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது.

இரண்டு லட்சம் மக்கள் திரளாகக் கூடிக் கட்சிக் கொள்கைகளைக் கூர்ந்து செவிமடுத்து ஆதரவளித்த மாபெரும் விழாவாகவே இந்த ராஜ்ய சம்மேளனம் நடந்தேறியது. அது வட இந்திய சுற்றுப் பிரயாணத்துக்கே சிகரம் போல் விளங்கியது.



எண்ணெய் எடுப்போம் ஏற்றமடைவோம்

கி.ராஜேந்திரன்

பம்பாயில் வசிக்கும் சிறுமி ஸுஜாதா. தன் சிநேகிதியின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளப் போகிறாள் அவள் ஒரு நாளைக்கு. கிறிஸ்தவ சம்பிரதாயப்படி அந்தச் சிநேகிதி கேக்கின் மீது ஏற்றி வைக்கப்பட்ட எட்டு மெழுகுவத்திகளை ஊதி அணைப்பதைக் காண்கிறாள் ஸுஜாதா. கேக்கையும் ஐஸ்கிரீமையும் ஒரு கை பார்த்து விட்டுச் சப்புக் கொட்டிக் கொண்டே வீடு திரும்புகையில் மேலே விமானம் பறக்கும் ஓசை கேட்கிறது. ஒலியின் தன்மையைக்கொண்டே அது போயிங் ஜெட் விமானம்தான் என்று தீர்மானிக்கும் ஸுஜாதா அண்ணாந்து நோக்கித் தன் ஊகம் சரிதான் என்று உறுதிப் படுத்திக் கொள்ளவும் செய்கிறாள். தலையைத் தாழ்த்தினால் எதிரே சிலர் சாலையைச் செப்பனிட்டுக் கொண்டிருப்பது அவள் கவனத்தைக் கவருகிறது. கரிய நிறத்திலிருக்கும் பிசின் போன்ற ஒன்றை உருக்கி, அத்துடன் சிறிய சிறிய கற்களையும் ஒன்றாகக் கலந்து சாலையின் மேல் ஒரே சீராகப் பரப்புகிறது ஒரு ராட்சத யந்திரம். சற்று நேரம் அதை வேடிக்கை பார்த்து விட்டு மேலே நடக்கிறாள் ஸுஜாதா. அருகே உள்ள பெட்ரோல் பங்கில் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும் தன் தகப்பனார் காரை நிறுத்தி யிருப்பதைக் கண்டு குதூகலத்துடன் அந்தப் பக்கமாகத் துள்ளி ஓடுகிறாள். மோட்டாரின் பின்புறம் பெட்ரோலும் முன் புறம் எஞ்சினுக்குத் தேவையான அளவுக்கு எண்ணெயும் நிரப்பிக் கொண்டு தந்தையும் மகளும் ஒன்றாக வீட்டை அடைகிறார்கள். 'அம்மா!' என்று தான்வந்து விட்டதை அறிவித்துக் கொண்டே ஓடிச் செல்லும் சிறுமி தாயார் சமையலறையில் 'காஸ்' அடுப்பில் உணவு தயாரித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறாள். இந்தச் சமயத்தில் திடீரென்று மின்சார விநியோகம் தாற்காலிகமாக நின்றுபோகிறது. தாயாரின் வேண்டுகோளுக்கு இணங்கி அரிக்கன் விளக்கை ஏற்ற முற்படும் தந்தைக்குத் தீப்பெட்டியைக் கொண்டு வந்து கொடுத்து உதவுகிறாள் ஸுஜாதா.

ஒரு மணி நேரத்துக்குள் அந்தச் சிறுமி பூமியின் ஆழத்திலிருந்து தோண்டி எடுக்கப்படும் பெட்ரோலியம் எண்ணெயின் எட்டு வித உபயோகங்களைக் கண்டிருக்கிறாள் என்று சொன்னால் ஆச்சரியப்படக் கூடிய காலமில்லை இது. ஆகவே இன்னும் கொஞ்சம் விவரமாகவே பெட்ரோலியத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முயலுவோம்.

ஸுஜாதாவின் சிநேகிதி ஊதி அணைத்த மெழுகுவத்தியின் மெழுகு; ஜெட் விமானம் பறப்பதற்குப் பயன்பட்ட 'ஸுபர் கெரோஸின்' (சாதாரணமாக நம் வீடுகளில் புழங்கும் கெரோஸினில் கொஞ்சம் உயர்ந்த ரகம் தான் ஜெட் விமானங்கள் இயங்கவும் உபயோகமாகிறது); ரோடுகள் போடுவதற்கு இன்றியமையாத கரிய நிறப் 'பிட்டுமின்', பெட்ரோல் பங்கில் மோட்டாரின் பின்புறம் ஊற்றப்பட்ட பெட்ரோல்; முன்னால் இஞ்சின் திறமையாகச் செயல்படுவதற்கு என்று விடப்பட்ட 'லூப்ரிகேட்டிங்' எண்ணெய்; ஸுஜாதாவின் தாயார் சமையல் செய்த அடுப்பிலே பற்றி எரிந்த பியூடேன் வாயு; அரிக்கேன் விளக்கில் முன் எச்சரிக்கையுடன் நிரப்பி வைக்கப்பட்டிருந்த கெரசின் எல்லாம் பூமியினடியில் இருந்து கிடைக்கும் பெட்ரோலியத்திலிருந்து தனித் தனியாகப் பிரித்து எடுக்கப்பட்டவைதான். அல்லது இவையெல்லாம் கலந்த ஒன்றே எண்ணெய்க் கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் 'குருடாயில்' என்றும் சொல்லலாம். ஸுஜாதா தன் தகப்பனாரிடம் கொண்டு வந்து கொடுத்த தீக்குச்சிகளைத் தயாரிக்கும் தொழிலிலே கூட பெட்ரோலியத்துக்கு முக்கிய பங்கு உண்டு என்று சொன்னால் பூமித்தாய் நமக்கு அளித்துள்ள வரப்பிரசாதமாகப் பெட்ரோலியத்தைக் கருதத் தோன்றும் என்பது நிச்சயம். கூடவே பூமியின் ஆழத்தில் இந்த எண்ணெய் எப்படி உருவாயிற்று என்றும் யோசிக்கத் தொடங்குவோம்.

கவிகளின் கற்பனை உள்ளங்களிலிருந்து பிரவாகமாகப் பெருகும் காவியங்களில், சமுத்திர ராஜனிடம் மையல் கொண்ட ஆறு அவனைச் சென்றடையப் போகும் ஆர்வத்தில் விரைந்து பாய்வதாகவும், கடலரசன் அலைக் கரங்களை விரித்து நதியை வரவேற்றுத் தீராத ஆசையுடன் ஆலிங்கனம் செய்து கொள்வதாயும் படித்திருக்கிறோம். ஆனால் இந்தப் பொல்லாத நதிகளின் உண்மையான நோக்கம் என்ன தெரியுமா? சமுத்திரத்தையே தூர்த்து விட வேண்டுமென்பதுதான்! அசாத்தியமான காரியமுமல்ல அது; நடக்கக் கூடியதுதான். ஆனால் ஒன்றே ஒன்று; விடா முயற்சியுடன், இரவு பகலென்றெல்லாம் பாராமல் சதா சர்வ காலமும் பாயும் வேகத்தில் மண்ணை அடித்துச் சென்று கடலில் சேர்ப்பித்துக் கொண்டே இருக்கும் ஆறுகள் அசட்டுத்தனமாகத் தாங்களும் சமுத்திரத்திலேயே விழுந்து விடக் கூடாது! பல ஆயிரம் வருஷங்களில் இப்படிக் கடலில் போய் விழும் மண்ணின் கன பரிமாணம் நினைத்துப் பார்க்க முடியாத அளவினதாய் இருக்கும்! ஆதி காலம் தொட்டுக் கடலின் அடிவாரம்

கொஞ்சம் கொஞ்சமாக மேடிட்டுக்கொண்டே வந்தபோது மண் திட்டுக்களினிடையில் நண்டு, மீன், நத்தை போன்ற கடல் வாழும் பல வகையான ஜந்துக்களும் தாவர வர்க்கமும் அகப்பட்டுக் கொண்டு உயிர் துறந்தன. மேலே மேலே மண் வந்து குவியக் குவிய உயிரிழந்த அந்த ஜீவராசிகளின் மேல் பூமியின் அழுத்தம் மிக அதிகமாகியது. வெப்பம் மிகுந்தது. பல ஆயிரம் ஆண்டுகளில் செத்துப் போன அந்த ஜீவராசிகள் அழுகி, உருமாறி, பெட்ரோலியம் எண்ணெயாகின. பூமியின் அடிவாரத்தை நோக்கிச் செல்கிறது எண்ணெய். மேற்கொண்டு கீழே போக முடியாதபடி ஏதேனும் பாறை தடுத்தால் எண்ணெய் அவ்விடத்தில் பெருமளவுக்குத் தேங்கி விடுகிறது. இன்னும் பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பூகம்பம் அல்லது நில அதிர்ச்சியின் போது கடல் நிலப் பரப்பாகிறது. நிலம் நீருக்குள் மூழ்குகிறது. முன்பொரு சமயம் எத்தனை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் கடல் இருந்த இடத்தில் இன்று மனிதன் நடமாடுகிறான். நிலப் பரப்பின் அடிவாரத்தில் மிகுந்த அழுத்தத்துக்கு உட்பட்டு, பூமிக்கு வெளியே திறந்த வெளிக்கு வரத் துடித்துக் கொண்டிருக்கும் பெட்ரோலியத்தைப் பற்றி அறிந்து கொள்கிறான். அவ்விடத்தில் ஒரு துவாரம் போடுகிறான். கரிய நிற எண்ணெய் பீறிட்டுக் கொண்டு பூமி மட்டத்துக்கு வருகிறது.

முதன் முதலில் எண்ணெய்க் கிணற்றைக் கர்னல் டிரேக் வெற்றிகரமாகத் தோண்டி இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. கர்னல் டிரேக் என்றதால் அவர் ஒரு பெரிய ராணுவ வீரரென்றோ அசகாய சூரரென்றோ யாரும் எண்ணி விட வேண்டாம். ரயில் வண்டியில் கண்டக்டராகப் பணியாற்றிய பரம சாது அவர். ஆனால் அந்தக் கர்னல் என்ற பட்டப் பெயர் அவருக்கு ரொம்ப ரொம்பப் பிடித்திருந்ததாம். அதனால் யாரும் அதனைத் தமக்குச் சூட்டும் வரையில் காத்துக் கொண்டிராமல் தாமாகவே கர்னல் என்ற பதத்தைத் தமது பெயருக்கு முன்னால் இணைத்துக் கொண்டாராம். நூறு வருஷங்களில் மனிதனுடைய ஆசாபாசங்கள் அப்படியொன்றும் அதிகமாக மாறி விடவில்லை என்பது புரிகிறதோ இல்லையோ? இன்றைக்குப் பரவலாக இருந்து வரும் அற்ப ஆசைகள்தாம் அன்றைக்கும் மனிதனை ஆட்டிப் படைத்திருக்கின்றன என்பதற்கு இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்? 'ஐயோ பாவம்! கர்னல் என்ற ஒரு பட்டப் பெயர்தானா அகப்பட்டது உமக்கு? இன்னும் மகாராஜாதிராஜ ராஜ மார்த்தாண்ட சத்ரு சம்ஹார ஏக சக்ராதிபதி பத்ம பூஷண் கர்னல் டிரேக் என்பது போல் ஏதாவது சேர்த்துக் கொண்டிருக்கலாமே? முதன் முதலில் எண்ணெய்க் கிணற்றை இறக்கிய உமக்கு எந்தப் பட்டத்தைத்தான் மனமுவந்து அளிக்கக் கூடாது?' என்று பட்டங்கள் படும் பாட்டைப் பார்க்கும் நமக்குக் கேட்கத் தோன்றுகிறதல்லவா?

இது ஒருபுறமிருக்க நூறு ஆண்டுகளுக்குள் பெட்ரோலியம் உற்பத்தித்துறையில் மனிதன் அடைந்திருக்கும் முன்னேற்றத்தையும் நாட்டின் தொழில் வளம் பெருகவும், அன்றாட வாழ்க்கைக்கும் மண்ணிலிருந்து கிடைக்கும் இந்த எண்ணெயின் அவசியத் தேவையையும் உணரும் நாம் நூறு வருஷங்களுக்கு முன்னால், பெட்ரோலியம் கண்டு பிடிக்கப்படாத அந்த உலகில் மக்கள் எப்படித்தான் காலத்தை ஓட்டினார்களோ என்று ஆச்சரியப் படுவது இயல்புதான்.

நம் நாட்டினர் தாவர எண்ணெயையும் மேல் நாடுகளில் பெரும்பாலும் திமிங்கிலத்தின் உடலிலிருந்து கிடைக்கும் கொழுப்புச் சத்தைத் திமிங்கில எண்ணெய் என்ற பெயரிலும் விளக்குகள் எரிக்கப்பயன்படுத்தினார்கள். திமிங்கிலத்தை வேட்டையாடுவதென்பது இலேசான காரியமா? திமிங்கில எண்ணெயின் விலையும் அதற்கு ஏற்பத்தான் இருந்தது. நாளடைவில் புதியதோர் அபாயம் வேறு ஏற்பட்டது. திமிங்கிலங்களின் எண்ணிக்கையே குறைந்து கொண்டு வந்தது! மனிதன் புதியதோர் எரிபொருளைத் தேடி அலைந்தான். இந்தச் சமயத்தில் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக, உப்பு எடுப்பதற்குப் பூமியைத் தோண்டிய சிலர் கரு நிற எண்ணெய் வெளிப்படுவதைக் கண்டார்கள். ஆனால் இந்த எண்ணெய் பூதம் பயங்கரத் தன்மை கொண்டதல்ல என்பதையும் அலாவுதீனின் அற்புத விளக்கிலிருந்து கிளம்பிய பூதத்தைப் போல மனிதனுக்கு அடிமையாகி அவன் நிலையை உயர்த்தப் புறப்பட்ட பூதம் என்பதையும் அன்றைக்கு யாரும் புரிந்து கொள்ளவில்லை. அதற்குப் பல வருஷங்கள் பிடித்தன.

உப்புக்காகப் பூமியைக் குடையாமல், எண்ணெய்க்காகவே எண்ணெய்க் கிணறு தோண்டிய முதல் மனிதர் கர்னல் டிரேக். 1858-ல் செனிகா எண்ணெய்க் கம்பெனி என்ற ஸ்தாபனத்தின் சார்பிலே பழைய நீராவி எஞ்சின் ஒன்றின் உதவியுடன் பூமியைத் துளைக்க எண்ணினார். தமக்குத் தேவையான தளவாடங்களைச் சேகரித்துக் கொள்ளவே அவருக்கு ஒரு வருஷமாயிற்று. உப்புக் கிணறு தோண்டுவதில் பழக்கப்பட்ட பில்லி ஸ்மித் என்பவரின் துணையுடன் பூமியைத் தாக்கத் தொடங்கினார். 1859-ம் வருஷம் ஆகஸ்டு

தனி மனிதனின் ஆற்றலையும், தன்னம்பிக்கையையும் பறி கொடுத்து விட்டோமானால் பிறகு இந்த நாட்டில் காப்பாற்ற வேண்டிய பொருள் எதுவுமே கிடையாது. தனி மனிதனுடைய ஆற்றல் அழிந்தால் பிறகு சமூகத்துக்கு ஆற்றல் ஏது? பாரத சமுதாயத்தின் ஆற்றல் அந்தச் சமுதாயத்திலுள்ள மக்களுடைய தனி ஆற்றல்கள் ஒன்று கூடினதேயாகும். மணிகள் அழிந்தால் பிறகு மாலை ஏது?

வந்த சுதந்திரம் அழிந்து போயிற்று. சுதந்திரத்தை மறுபடியும் சம்பாதிக்க வேண்டும். அதுவே தற்போது நமது முயற்சி. – ராஜாஜி

மாதம் 27ந் தேதி நல்ல சுபயோக சுப தினத்தில் கிணற்றில் எண்ணெய் நிரம்பியது. தினந்தோறும் பதினைந்து முதல் இருபது பீப்பாய்கள் வரை இறைத்தார்கள்.

கர்னல் டிரேக்குக்கு அடித்த அதிர்ஷ்டத்தைப் பற்றிய தகவல்கள் காட்டுத் தீ போல் பரவியதும் அமெரிக்காவில் உண்டான பரபரப்பு கொஞ்ச நஞ்சமல்ல. தொடர்ந்து எல்லாருமே தங்களுக்கு எண்ணெய் கிடைக்கும் என்ற ஆவலில் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் குழாய் இறக்கினார்கள். மனம் போன போக்கில் நினைத்த இடத்தில் இப்படிக் குடைந்த போதிலும் சிலருக்குக் கனவு நிறைவேறியது. வேறு பலர் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார வேண்டியதாயிற்று. எண்ணெய் உள்ள நிலம் என்ற கூற்றை நம்பி ஏராளமாகப் பணம் போட்டு அதனை வாங்கி ஏமாந்து போனவர்கள் அநேகர்.

இப்போதெல்லாம் இந்த மாதிரி சுலபமாய் ஏமாந்து போய்விடுவதில்லை எண்ணெய்க் கம்பெனிக்காரர்கள். விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சிகள் நடத்தி எண்ணெய் இருக்கும் இடத்தை அரும்பாடு பட்டுக் கண்டு பிடித்துப் பூமியைக் குடைந்து. பிறகுதான் ஏமாந்து போகிறார்கள்!

அதாவது, எத்தனைதான் ஆராய்ச்சிகள் நடத்தியபோதிலும் அடிவாரத்திலெண்ணெய் இருக்கும், அதுவும் லாபகரமாக உற்பத்தி செய்யக் கூடிய அளவுக்கு நிறைய எண்ணெய் இருக்கும் என்று முன்கூட்டியே நிச்சயமாகக் கூற முடிவதில்லை. 'இந்த இடத்தில் எண்ணெய் இருக்கலாம்' என்ற அளவுக்குத்தான் பூமி சாஸ்திர நிபுணர்கள் சொல்ல முடியும். பிறகு முதலீடு செய்பவர்களுடைய தலையெழுத்துப்படி நடக்க வேண்டியதுதான்!

பூமியின் மேல் பரப்பில் இருக்கும் சில விதமான தொன்மையான பாறைகளும், மண்ணில் வாயு, எண்ணெய், மெழுகு இவை கலந்திருக்கின்றனவா என்று ஆராயும் போது கிடைக்கும் தகவல்களும் விஞ்ஞானிக்கு எண்ணெய் இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க உதவுகின்றன. அடுத்து விமானத்திலிருந்த படி பூமியின் மேல் மட்டத்தைப் போட்டோ பிடிக்கிறார்கள். இந்தப் புகைப் படங்களை வைத்துக் கொண்டும் சில முடிவுகளுக்கு வருகிறார்கள். பூமியின் ஆழத்தில் குறிப்பிட்ட அளவுக்கு வெடி மருந்தை வெடிக்க, அப்போது ஏற்படும் நில அதிர்ச்சியின் சக்தி அலைகளைக் கணக்காகக் கருவிகள் அளந்து விடுகின்றன. இவ்வளவுக்கும் பிறகு எண்ணெய்க்காகப் பூமியைக் குடைந்தால்....; அந்தோ பரிதாபம்!

உதாரணமாக, நைஜீரியா தேசத்தில் பதினெட்டு வருஷங்கள் அரும் பாடுபட்டுப் பன்னிரண்டு மிலியன் பவுன்களைச் (ஒரு பவுன் என்பது பதின்மூன்று ரூபாய்) செலவழித்தார்கள். பலன்? பூஜ்யம்தான்! இப்படி எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதில் உண்டாகும் ஏமாற்றங்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை எனலாம்.

ஆகவே, நாம் சிம்னி விளக்குக்குக் கெரசினோ, அல்லது மோட்டார்காருக்குப் பெட்ரோலோ வாங்கும்போது அதைப் பூமியின் கீழ் மட்டத்திலிருந்து வெளிக் கொணர்ந்து பிரித்தெடுத்துக் கொடுப்பதற்கான செலவை மட்டும் ஈடுகட்ட வில்லை; எண்ணற்ற ரூபாய்களைக் கொண்டு பலனளிக்காத எண்ணெய்க் கிணறுகளில் கொட்டினார்களே அந்த நஷ்டத்தையும் ஈடு செய்கிறோம்!

சரி. அதிர்ஷ்டமிருந்து பூமிக்குள்ளே 20,000 அடி ஆழத்தில் இருக்கும் எண்ணெய் பீறிட்டுக் கொண்டு வெளியே வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அடுத்தாற் போல் என்ன? இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி குரூடாயிலிலுள்ள பல்வேறு பொருள்களையும் தனித் தனியே பாகுபாடு செய்ய வேண்டும். இதைத்தான் எண்ணெய் 'ரிபைனரி'கள் செய்கின்றன.


பம்பாயிலுள்ள பர்மாஷெல் ரிபைனரியை நேரில் பார்த்து வரும் வாய்ப்பு சமீபத்தில் எனக்குக் கிட்டியது. அதைப் பற்றிய அநேக விவரங்களை அறிந்து கொண்டதுடன் இன்று மண்ணெண்ணெய்த் தொழிலில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள், பிரச்னைகள் பலவற்றைப் பற்றியும் சுவையானதும் காரசாரமானதுமான விவாதங்கள் நடத்த முடிந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

கோள் வினை தீர்க்க ஒரு வேள்வி

பிப்ரவரி ஐந்தாம் தேதியன்று எட்டுக் கிரகங்கள் ஒன்று கூடுவதால் உற்பாதம் ஏதும் ஏற்படாது தவிர்ப்பதற்காக, மைசூர் ராஜ்யம், ஹாஸன் மாவட்டத்தில் புனித காவிரிக்கரையில் உள்ள ருத்திரப் பட்டணத்தில் டிசம்பர் 20-ந் தேதியிலிருந்து அதிருத்ர மகா யாகம் நடைபெற்று வருகிறது. டிசம்பர் 30-ந் தேதி அது சமாப்தி பெறுகிறது. ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படியும், அவர்களது சந்நிதானத்திலும் நடைபெறும் இந்தப் பெரு வேள்வியில் 121 கலசங்களை வைத்து 121 வேதியர்கள் ஜபமும், பூஜையும் செய்கிறார்கள். ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் நடைபெறும் இந்தப் புனித யாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள விரும்புவோர் கலசம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு ஐம்பத்தொரு ரூபாய் செலுத்த வேண்டும். பதினொரு ரூபாய் செலுத்துபவர்களுக்குப் பூஜையில் வைத்த உமாமகேசுவரப் பிரதிமை அனுப்பப்படும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ பி. ஆர். ஹரிஹரன், பொருளாளர், அதிருத்ர மகாயாகக் கமிட்டி, 'கோமதி', நரசிம்ம ராஜ மொகல்லா, மைசூர்.


டிசம்பர்
29
முதல்
சென்னை
மற்றும்
தென்னாடெங்கும்
காவியத்தில் பெண்மையினைக்
கடவுளெனக் காண்பார்
கண்ணெதிரே வந்த பெண்ணை
பாவியெனச் சொல்வார்
முக்தா
பிலிம்ஸ்
பனித்திரை
திரைக் கதை, வசனம்
ஜி. பாலசுப்பிரமணியன்
பாடல்கள்
கண்ணதாசன்
கொத்தமங்கலம் சுப்பு
சங்கீதம்
கே. வி. மஹாதேவன்
டைரக்ஷன் · வி. ஸ்ரீனிவாசன்
SANTI




கெஜத்திலிருந்து மீட்டருக்கு மாறுதல்

அக்டோபர் முதல் தேதியிலிருந்து நீட்டலளவுகள் மீட்டர் கணக்கில் அளவிடப்பட்டு வருகிறது. கெஜம், அடி, அங்குலம் என்ற அளவுகள் ஓராண்டிற்குப்பின் சட்டப்படி அமுலில் இருக்காது.

ஏற்கனவே மீட்டர் அளவில் துணிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விலையும் மீட்டர் அளவுக்கே கூறப்படுகிறது.

ஒரு மீட்டர் ஒரு கெஜத்தைவிட 3½" நீளமானது



மெட்ரிக் நீட்டலளவு-களை உபயோகி-யுங்கள்

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA 41/532

வாக்குரிமை பறிக்கும் திட்டம்

கொழும்பு டிச. 15—

இந் நாட்டிலுள்ள சுமார் பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்கள் படாதபாடுபட்டும் கூடச் சுமார் ஒன்றரை லட்சம் பேர்களுக்கு மட்டுமே இந்தியர் - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி இந்த நாட்டின் பிரஜைகள் என்ற அந்தஸ்து கிட்டியது. அவர்களிலும் ஆயிரக் கணக்கானவர்களின் வோட்டுரிமையைப் பறிக்க இப்பொழுது நாசூக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வாக்காளர் ஜாபிதா இப்பொழுது திருத்தி யமைக்கப்பட்டிருக்கிறது. பதிவுப் பிரஜைகளில் ஏராளமானவர்களுக்கு அவர்கள் இலங்கையில் தற்சமயம் வசிக்கும் வீடுகளில் தொடர்ந்து வசிக்காத காரணத்தால் வாச கால யோக்கியதாம்சத்தை இழந்து விட்டதாகவும் ஆகையால் அவர்களுடைய பெயர்கள் வோட்டர்களின் ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாயும் நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

உங்கள் நிருபர் ரஜனி இலங்கையை விட்டுச் செல்லாமல் தற்பொழுது வசிக்கும் வீட்டிலேயே பல்லாண்டுகளாகத் தொடர்ந்து வசித்து வந்திருந்தும் அவருக்கே இதேமாதிரி நோட்டீஸ் கிடைத்திருக்கிறதென்றால் அரசாங்கம் செய்துவரும் நாசூக்கான முயற்சிகளை ஊகிக்கலாம். இப்படி நோட்டீஸ் கிடைத்தவர்கள் எவ்வளவு பேர்கள் ஆட்சேபனை செய்து விசாரணைக்கு ஏற்பாடு செய்து தங்கள் பெயர்களைத் திரும்பவும் வோட்டர்களின் ஜாபிதாவில் பதிவு செய்து கொள்ள முயற்சி செய்யப் போகிறார்கள்? பெரும்பாலானவர்கள் அதிகம் படிக்காத தோட்டத் தொழிலாளர்களென்பதைக் கவனிக்கும் போது அடுத்த பொதுத் தேர்தலில் வாக்குரிமை பெற்ற ஏராளமான இந்திய வம்சாவளியினர்கள் வோட்டுக் கொடுக்க முடியப் போவதில்லை என்றே தோன்றுகிறது. இந்த அநீதியைப்பற்றி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தினிடம் கடுமையான ஆட்சேபம் தெரிவித்துக் கொள்ளவிருக்கிறது.

ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்

கொழும்பில் ஜயந்தி நகர் என்ற ஜிந்தும்பிட்டித் தெரு சிவசுப்பிரமணிய ஸ்வாமி கோவிலில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள யாத்ரீகர் விடுதி மண்டபத்தில் இருபது தினங்கள் சொல்லின் செல்வர் ஸ்ரீ வில்லிபுத்தூர் டி. இராமானுஜ அய்யங்கார் நடத்தி வந்த ஸ்ரீ ராமாயண கதா காலட்சேபம் சென்ற வாரம் ஸ்ரீ ராம பட்டாபிஷேகத்துடன் முற்றுப் பெற்றது. பட்டாபிஷேக தினத்தில் ஆஸ்திகர்கள் ஆயிரக்கணக்கில் திரளாக வந்து வைபவத்தைச் சிறப்பித்தார்கள். தட்சிணைத்து வேளாளர் மகமை பரிபாலன சபைத் தலைவர் திரு ஏ. எஸ். எஸ். சங்கரலிங்கம் பிள்ளை, காரியதரிசி திரு கனகசபாபதிப் பிள்ளை, வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு கே. வி. எஸ். வாஸ் முதலானோர் இலங்கை மக்களின் பக்திப் பண்பையும் திரு அய்யங்காரின் பாண்டித்தியத்தையும் பாராட்டிப் பேசினார்கள். ஜிந்தும்பிட்டி சிவ சுப்பிரமணிய ஸ்வாமி கோவிலில் ஒதுக்கப்பட்டுக் கிடந்த திருமாலின் விக்கிரகத்துக்குக் கதா காலட்சேபத்தின் பொழுது தினசரி 22 தினங்கள் திருமஞ்சனமும் கருட வாகனத்துடன் புறப்பாடும் நடத்தப்பட்டன. இலங்கையில் திருமாலுக்கு இப்படிச் சேர்ந்தாற்போல 22 தினங்களுக்குப் புறப்பாடு நடத்தி உற்சவம் கொண்டாடியது சரித்திரத்திலேயே இதுதான் முதல் முறையாகும். சைவமும் வைணவமும் துவேஷமின்றி இணைந்திருக்க இந்த உற்சவமும் கதா காலட்சேபமும் பெருமளவு உதவி விருப்பது விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இலங்கையில் ககாரின்

சோவியத் வானவெளி வீரர் யூரி ககாரின் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த பொழுது அவருக்கு மிகமிக உற்சாகமான வரவேற்பு அளிக்கப் பட்டது. ககாரினை யாழ்ப்பாணத்துக்கும் அழைத்துச் சென்று தமிழ் மொழியில் அவருக்கு ஒரு வரவேற்பு உபசாரப் பத்திரத்தை வாசித்துக் கொடுக்கச் சந்தர்ப்பம் அளித்திருந்தார்கள். அவருக்கு ஏராளமான தமிழ் மக்கள் குதூகலமான வரவேற்பு அளித்தனர். இந்த வரவேற்பில் தமிழ் அரசுக் கட்சி பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. வானத்தில் ஏறிய வீரருக்கு யானை மீது ஏறப் பயமென்றால் யாராவது நம்புவார்களா? கண்டியில் ஒரு யானைக் குட்டியின் மீது ஏறி உட்காருமாறு கேட்கப்பட்ட பொழுது அவர் பயந்துகொண்டு பின்வாங்கிவிட்டார். -ரஜனி

கோடி அர்ச்சனையில் ஒரு கோடி மீதி

தமிழ் மக்களின் பக்தியில் முதல் பாத்தியதை கொண்டாடும் பழனி தண்டாயுதப் பெருமானுக்குக் கடந்த ஜூன் 26-லிருந்து நடத்தப் பெறும் கோடி அர்ச்சனையில் இன்னும் சுமார் பதினைந்து லட்சம் அர்ச்சனைகள் எஞ்சி நிற்கின்றன. ஜனவரி 31-ந் தேதிக்குள் ஒரு கோடியும் பூர்த்திபெற வேண்டியிருப்பதால் அன்பர்கள் யாவரும் பழனி ஆண்டவனுக்கு விரைந்து அர்ச்சனை செய்வித்துத் தங்கள் விருப்பங்களைப் பழுக்கச் செய்து கொள்ள வேணும். பத்து ரூபாய் கட்டணம் செலுத்தி ஆயிரம் திருநாமங்களாலோ, ஐந்நூறு ரூபாய் செலுத்தி நூறாயிரம் நாமங்களாலோ தண்டபாணி தெய்வத்தை அர்ச்சிக்கலாம். தொகை அனுப்பவேண்டிய முகவரி: **ஸ்ரீ எஸ். ஏ. சேஷ அய்யர், பொருளாளர், பழனி ஸ்ரீதண்டாயுதபாணி ஸ்வாமி கோடி அர்ச்சனை விழாக் குழு, பழனி.**

கேட்டீர்களா சேதி



செய்தி சேகரன்

''சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் 5,250 படுக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப் போவதாகச் சுகாதார மந்திரி மாணிக்கவேலர் கூறினார். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சேர்க்கப் படும் எனத் தெரிகிறது.''

நோய் வந்த பிறகு சிகிச்சை செய்வதற்கு ஏற்பாடு செய்வது நல்லதுதான் என்றாலும் நகரத்தின் ஆரோக்கிய நிலையை அபிவிருத்தி செய்து நோயே வராமல் தடுக்க முன் வரமாட்டேன் என்கிறார்களே!

ஃ ஃ ஃ

''குடும்பக் கட்டுப்பாடு மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்று வருகிறது. அந்தத் திட்டம் வளர்ந்து வரும் வேகத்தைப் பார்க்கும்போது அதற்காகவே தனி அமைச்சர் ஒருவரை நியமிக்கலாம் எனத் தோன்றுகிறது'' என்று டில்லி சர்க்கார் சுகாதார மந்திரி பெருமிதத்தோடு கூறியிருக்கிறார்.

குடும்பக் கட்டுப்பாட்டை வளர்ப்பதற்கு முன்பு மந்திரிகளை நியமிப்பதில் ஒரு கட்டுப்பாடு விதிப்பது நல்லதென்று தோன்றுகிறது!

ஃ ஃ ஃ

''திறப்பு விழாவுக்கு மந்திரிகளை அழைக்கும் வழக்கம் நோய் போலப் பரவி விட்டது. கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்ட பிறகுங்கூட மந்திரி வந்து திறக்க வேண்டும் என்பதற்காக மூடிக் கிடப்பதுண்டு. முக்கியமான சந்தர்ப்பங்களைத் தவிரப் பிற நிகழ்ச்சிகளுக்கு மந்திரிகளை அழைக்கும் வழக்கத்தைக் கைவிட வேண்டும்'' என்று சென்னை நிதியமைச்சர் சட்ட சபையில் கூறினார்.

புதுக்கட்டடத் திறப்பு விழாப்படம் பத்திரிகைகளில் வெளியாக வேண்டும் என்றால் மந்திரிகளைக் கூப்பிட்டுத்தானே ஆக வேண்டியிருக்கிறது. மேலும், மந்திரிகளுக்குப் பிரசித்தியும், பொது மக்களிடையே தங்கள் கருத்துக்களைப் பிரசாரம் செய்யும் வாய்ப்பும் அளிக்கும் திறப்பு விழாக் கூட்டங்களை அவர்கள் பகிஷ்கரிப்பது அறிவுடைமையாகாது.

ஃ ஃ ஃ

''1959 - 60-ல் 243 கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டனவாம். செயலற்ற நிலைமையும், மோசமான நிர்வாகமும், பணக் கையாடலும்தான் இதற்குக் காரணமாயிருந்தனவாம்.''

எதிலும் கூட்டுறவு முறையை ஆதரிக்கும் சர்க்கார் கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவு முறையில் நடந்த மோசடிகளையும், ஊழல்களையும் ஆதரிக்காத காரணம் என்னவாயிருக்கும் என்று புரியவில்லையே!

ஃ ஃ ஃ

'பல வீடுகளில் பல பாத்திரங்களைத் திருடியதாகக் கைது செய்யப்பட்ட ஆசாமியிடம் ஒரு பாத்திரங் கூடக் காணப்படவில்லையாம்.''

ஒரு வேளை அவர் திருடியவைகளெல்லாம் நாடகப் பாத்திரங்களாயிருக்குமோ என்னவோ!

ஃ ஃ ஃ

''ஒரு கிராமத்தில் பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான ஓர் ஆரம்பப் பள்ளிக்கு மாணவர்கள் சரியாய் வருவதில்லை என்ற காரணத்தினால் அதை மூடி விடுவதென்று முடிவு செய்து விட்டார்கள். அந்த ஓராசிரியர் பள்ளியில் ஒரு மாணவன்தான் படித்து வந்தானாம்.''

'ஓராசிரியர் பள்ளி' என்னும் பெயரை மாற்றி 'ஒரு மாணவன் பள்ளி' என்று பெயரிட்டுப் பள்ளியைத் தொடர்ந்து நடத்தி வரலாமே!

ஃ ஃ ஃ

''சுமார் 94 லட்சம் ரூபாயைச் சாக்கடை அபிவிருத்தியில் போடச் சென்னை நகரசபை தீர்மானித்திருக்கிறது. அதற்காக விரிவான சாக்கடைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.''

சாக்கடையில் போட வேண்டிய வெறும் சாக்கடைத் திட்டமாயிராமல் நல்ல அபிவிருத்தித் திட்டமாயிருக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்!

ஃ ஃ ஃ

''பெல்ஜியம், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளிலும் பண்டங்களின் விலை உயர்வு 100க்கு 1 என்ற அளவில்தான் இருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ 100க்கு 33 என்ற அளவில் விலைவாசிகள் கண்மூடித்தன

மாக உயர்ந்திருக்கின்றன'' என்று ஒரு பொருளாதார நிபுணர் கூறியிருக்கிறார்.

மற்ற நாடுகளை யெல்லாம் விட, பாரத நாடு எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று இந்தப் புள்ளி விவரங்களைக் கண்டு நாம் பெருமிதம் அடையலாம்!

ஃ ஃ ஃ

''அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் பறக்கும் கார் இந்தியாவுக்கு வந்து விட்டால் பிரயாணம் எளிதாகி விடும். ஊர்விட்டு ஊர் போகச் சாலைகள் தேவையில்லை. ஆறுகளைக் கடக்கப் பாலங்கள் தேவையில்லை. வயலானாலும் அது நல்ல சாலைதான்; வெறும் கடற்கரையானாலும் அது நல்ல துறைமுகந்தான்! விவசாயிகள் தங்கள் விளைபொருள்களையும், வியாபாரிகள் தங்கள் சரக்குகளையும் எளிதில் எந்த ஊருக்கும் கொண்டு போய்ச் சேர்க்கலாம்.''

இத்தனை காலமாக விபத்துக்கள் சாலைகளில் மட்டும்தான் நேரும் என்றிருந்தது. இனிமேல் அந்தரத்தில் கூட விபத்துக்கள் நிகழும். ஆமாம்! டிராபிக் போலீஸ்காரர் எங்கே நிற்பார், பாவம்?

ஃ ஃ ஃ

''அடுத்த பிப்ரவரி, மாதம் 3, 4, 5 தேதிகளில் எட்டுக் கிரகங்கள் ஒன்று சேரவிருப்பதை யொட்டி மதுரையில் நடந்தகூட்டத்தில் மேற்படி கிரகங்களின் சேர்க்கையினால் ஏற்படும் தீங்குகளைத் தடுக்க வேள்வி முதலியவைகளைச்செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.''

'ஒரே இடத்தில் பல கிரகங்களும், அந்தக் கிரகங்களில் பல குடித்தனங்களுமாக மூச்சு விடவும் வசதியின்றிச் சென்னை நகரில் எத்தனையோ குடும்பங்கள் எத்தனையோ காலமாகத் தவிக்கின்றனவே, அவர்கள் காணாத தீமை இப்பொழுது என்ன வந்துவிடப் போகிறது?' என்று ஆச்சரியப்படுகிறார் ஸ்ரீமான் குடும்பராயர்.

ஃ ஃ ஃ

''ஒரு சிறந்த நடிகனுக்கோ, நடிகைக்கோ ஜப்பானில் ஏழாயிரம் ரூபாய்க்கு அதிகமாகக் கொடுப்பதில்லை. ஆனால் ஜப்பானின் படப்பிடிப்பும், படங்களின் தரமும் உயர்ந்திருக்கின்றன.''

இந்தியாவில் படப் பிடிப்பில் அதிக உயர்வைக் காண முடிகிறதோ, இல்லையோ, நடிகர்கள் வாங்கும் பணத்தொகை மிக மிக உயர்ந்து கொண்டே போகிறது. எப்படியோ ஒரு விதத்தில் உயர்வு ஏற்பட்டால் சரிதானே?

ஃ ஃ ஃ

''கால்நடை அபிவிருத்தியினால்தான் நாடு வளம்பெற முடியும். கால் நடை நம் நாட்டில் இப்பொழுது அபிவிருத்தி அடைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. முழுமூச்சுடன் கால்நடை அபிவிருத்தியில் அக்கறை செலுத்தினாலன்றி அந்தத் துறையில் முன்னேற முடியாது'' என்கிறார் ஒரு பிரசங்கி.

வருஷக்கணக்காகக் கால் நடையாகவே ஆபீசுக்கும், கடைத் தெருவுக்கும் சென்று சோர்ந்து விட்ட ஆபீஸ் குமாஸ்தா தம் கால்நடையை மேலும் அபிவிருத்தி செய்து கொள்ளுவது எப்படி என்று தெரியாமல் தவிக்கிறார்!

சுதந்திர நிதி

26-11-61 லிருந்து 21-12-61 வரை

சி. சுப்பையா முதலியார்	50	00
எஸ். நடராஜ அய்யர்	15	00
ஆர். சுப்பாராவ்	10	00
எஸ்வி. என்வி. குளத்துஅய்யர்	101	00
நாரணமங்கல நண்பர்	50	00
கே. வெங்கடராமன்	50	00
எஸ். நடராஜன்	100	00
ஓர் அன்பர்	50	00
வி. துரைசாமி அய்யர்	10	00
எஸ். ஞானலக்ஷ்மி	100	00
கே. ஆர். நாராயணன்	2	00
திருச்சி அன்பர்	100	00
வி. எஸ். நரசிம்மய்யர்	25	00
எஸ். ராமசாமி	10	00
வி. பி. வாசவதத்தா	5	00
ஜி. மருதமுத்து நாடார்	101	00

சி. ரங்கநாதராவ் சாஹேப்	50	00
ஜெ. எஸ். ராஜகோபால்	20	00
கே. சாமிநாத அய்யர்	101	00
எஸ்.வி. மாணிக்கவாசகம்பிள்ளை	11	00
ஸ்ரீ ஹரி	101	00
நெல்லை அன்பர்	500	00
கே. ஜி. ராமசாமி அய்யர்	500	00
வி. ராஜகோபாலன்	200	00
டி. எம். தகநூக்கா	1001	00
ஜி. பஞ்சாபகேசன்	150	00
ஜி. ராஜாராமய்யா	50	00
10-1-61 லிருந்து 25-11-61 வரை	12829	11
	16292	11

சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி C/O கல்கி காரியாலயம் சென்னை - 10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

சக்தி பிறந்தது

ஹீரவல்லி



மைதிலி ஜன்னல் அருகே உட்கார்ந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மனத்தில் நிரம்பியிருந்த இன்பம் அவள் பார்த்த இடங்கள் எல்லாவற்றிலிருந்தும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. வீட்டுக்குச் சற்றுத் தள்ளியிருந்த புஷ்பப் புதரும், அதில் பூத்துக் குலுங்கிய பூச்செடிகளின் மணமும் அவளுடைய இன்பச் சிந்தனைகளைக் கிளறி விட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அவள் நினைவுகள் எல்லாம் ஸ்ரீதரிடமிருந்துதான் ஆரம்பித்தன. அவனைச் சுற்றியே நின்றன. அவன் நினைவிலேயே வந்து நின்றன.

ஸ்ரீதர் அவளுடைய கணவன். அவர்களுக்கு மணமாகி இரண்டு வருஷங்கள்தான் இருக்கும். பெரிய வீட்டுப் பிள்ளை. டாக்டருக்குப் படித்துவிட்டு இப்பொழுது தொழிலிலும் நல்ல பெயர் பெற்றுக் கொண்டிருந்தான் ஸ்ரீதர். மைதிலி ஸ்ரீதர் திருமணம் இயல்பாக நேர்ந்த காதல் கல்யாணம்.

மைதிலி நல்ல அழகி. நல்ல உயரம். செக்கர் கலந்த மேனி. எப்போதும் புன்னகை தவழும் முகம். கலகலப்பாகப் பழகும் குணம். இப்போது இயற்கை அவளுடைய அழகுக்கு அழகு செய்து வந்தது. அவள் கருவுற்றிருந்தாள்.

பிறக்கும் குழந்தை துறுதுறு வென்று அவர் மாதிரிதான் இருப்பான். 'கண்ணு பால் சாப்பிட வாடா' என்றும் 'நான் மாத்தேன் போ' என்று ஓடுவான். நான் அவனைத் துரத்திக் கொண்டு ஓடுவேன். அதைப் பார்த்து இவர் விழுந்து விழுந்து சிரிப்பார். அவளுடைய எண்ண ஓட்டம் இப்படி வளர்ந்து தடைப்பட்டது. ஆமாம் காலையில் போன இவர் ஏன் இன்னும் வரவில்லை? ஒரு வேளை எக்ஸ்ரேயில் ஏதேனும் விபரீதமோ என்னவோ தெரியவில்லையே?'

அன்று காலையிலேயே ஸ்ரீதர் வெளியே சென்று விட்டான். அதற்கு முன் தினம் தான் மைதிலிக்கு ஓர் எக்ஸ்ரே எடுத்திருந்தது. ஸ்ரீதர் எப்போதுமே எந்தக் காரியத்தையுமே குறைவின்றிச் செய்வான். மைதிலி உண்டாயிருக்கிறாள் என்று தெரிந்த நாளிலிருந்து அவன் அவளுக்குச் செய்த உபசாரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. கால்மணிக்கு ஒரு மாத்திரை அரை மணிக்கு ஒரு டானிக் இருந்து நிமிஷங்களுக்கு ஒரு பழரசம் இப்படியாக அவளுக்குப் போஷாக்கு ஊட்டிக் கொண்டிருந்தான். இதெல்லாம் மைதிலிக்குப் பிடிக்கவே யில்லை. பெண்களுக்குப் பிள்ளைப்பேறு

இயற்கை. இதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் எதற்கு என்பது அவளுடைய கேள்வி. ஆனாலும் ஸ்ரீதரின் கோபத்துக்கு அஞ்சி அவள் அவன் சொல்லுக்கெல்லாம் ஆடும் பொம்மையானுள். இப்போதும் ஸ்ரீதரின் வரவை எதிர்நோக்கித்தான் மைதிலி காத்திருந்தாள்

கார் வரும் சத்தம் கேட்டு மைதிலி எழுந்தாள். காரை ஷெட்டில் விட்டு விட்டு வந்தான் ஸ்ரீதர். வழக்கம் போல் காணப்படும் குதூகலம் அவனிடம் இல்லே. ஆனாலும் மேலுக்காகச் சிரித்துக் கொண்டே தன் அறைக்குச் சென்றான். அவன் மன நிலே அப்போதும் சரியில்லே என்று தெரிந்து கொண்ட மைதிலி நேராகச் சமையல் அறைக்குச் சென்று சாப்பிடத் தட்டை எடுத்து வைத்தாள். ஸ்ரீதர் சாப்பிட உட்கார்ந்த பிறகும் கூட மைதிலியிடம் சரியாகப் பேசவில்லே. சாப்பிட்டேன் என்று பெயர் செய்து கை கழுவி விட்டு, வராந்தாவில் வந்து ஈஸிசேரில் பொத்தென்று விழுந்தான். தனது பிரச்னைகளுக்கெல்லாம் முடிவு காணுவது போல் ஸ்ரீதர் வானத்தை நோக்கிச் சிந்தனைகள் செய்து கொண்டிருந்தான். மைதிலி அவன் பக்கலில் வந்து உட்கார்ந்து வெற்றிலேயை மடித்து வைத்துக் கொண்டே மெல்ல, "பாக்கு இந்தாருங்கள்" என்ருள்.

தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பப்பட்டவன் போல் ஸ்ரீதர் பதறி "என்ன?" என்ருன்.

"பாக்கு இந்தாருங்கள்."

ஸ்ரீதர் அவளிடமிருந்து பாக்கை வாங்கிப் போட்டுக் கொண்டான்.

"ஏன் என்னவோ போல் இருக்கிறீர்கள்?"

"..............."

"உடம்பு சரியில்லேயா?"

"..........."

"உடம்புக்கு ஒன்றுமில்லேயே."

"..........."

"பின் ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? அது சரி, எக்ஸ்ரேயைப் பார்த்தீர்களா?"

"............"

"நான் கேட்டதற்குப் பதில் இல்லேயே!"

"என்னேத் தொந்தரவு செய்யாதே, மைதிலி!"

"நான் தொந்தரவு செய்யவில்லே. தயவு செய்து இதை மட்டும் சொல்லி விடுங்கள், எக்ஸ்ரேயைப் பார்த்தீர்களா?"

"பார்த்தேன் பார்த்தேன். வேறு என்ன வேண்டும்?" ஸ்ரீதருக்குக் கோபம் வந்து விட்டது என்று மைதிலிக்குத் தெரிந்தது. ஆனாலும் அவள் வாயிலிருந்து அடக்க முடியாமல் அடுத்த வார்த்தைகளும் வந்துவிட்டன. "எக்ஸ்ரேயில் கோளாறு ஒன்றும் இல்லேயே?"

கோபத்தின் எல்லே துக்கம் என்ருர்கள்; ஸ்ரீதரின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. விக்கி விக்கி அழ ஆரம்பித்தான்.

"என்ன சொல்லுங்களேன். தயவுசெய்து சொல்லி விடுங்களேன்."

மைதிலி 'ஓ'வென்று கத்திவிட்டாள்.

"நம் குழந்தை தலே பெரிதாய்....ராட்சதன் மாதிரி கோரமாய்........"

"இருக்க முடியாது..... முடியாது."

"இல்லே, மைதிலி. உண்மைதான். எக்ஸ்ரேயில் தவறு ஏற்படாது மைதிலி. இந்த மாதிரி குழந்தைகளுக்குத்தான் 'மான்ஸ்டர் சைல்ட்' என்று பெயர். அந்தக் குழந்தை பிறந்த பிறகு உயிருடன் இருப்பதே சந்தேகம்...."

"ஐயோ.... என்னவெல்லாம் சொல்லுகிறீர்கள்?...."

"ஆம் மைதிலி. உண்மைதான். தீவிர ஆபரேஷன் செய்து குழந்தையை வெளிப்படுத்தாவிடில் நீயே எனக்கு இருக்க மாட்டாய், மைதிலி! உன் உயிரைக் குடிக்க வந்த எமன் இந்தக் குழந்தை....."

"இல்லே. இது தவறு... இது நடக்க முடியாதது. நான் நம்ப மாட்டேன்."

ஸ்ரீதர் பதிலே பேச வில்லே. ஈஸிசேரைக் காலால் பின் பக்கம் உதைத்துத் தள்ளி விட்டு மாடிக்குச் சென்றான்.

கோபம் துக்கம், ஏமாற்றப்பட்ட உணர்ச்சி எல்லாமாகச் சேர்ந்து அவனே அழத்தான் வைத்தன.

மைதிலிக்கு ஒன்றுமே புரியவில்லே. தன்னேச் சுற்றி ஓர் இருள் சூழ்வது போல் தோன்றியது அந்த இருளினூடே சினிமா சித்திரம் மாதிரி......

"அதோ, என் கண்ணன் ஓடி வருகிருனே. என்ன அவன் தலே மட்டும் பெரிதாக வளர்கிறதே... ஐயோ இதென்ன கோரம்! அவலட்சணத்தை வடித்துப் பிம்பம் செய்தாற் போல்.....இதுவா என் கண்ணன்? ....இல்லே.... அதோ பக்கத்து வீட்டுப் பையன்கள் கைகொட்டிச் சிரிக்கிருர்களே... என் கண்ணனேக் கேலி செய்கிருர்களே..... இதைப் பாருங்களேன்........"

மைதிலி மயங்கித் தரையில் விழுந்தாள்.

* * *

எவ்வளவு நேரம் படுத்திருந்தாள் என்று தெரியாது. குரல் கேட்டு எழுந்தாள். ஸ்ரீதர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். சட்டென்று

எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.
''மைதிலி!...'' என்று குரல் கொடுத்தான் ஸ்ரீதர்.

''என்ன அத்தான்?''

இருவருக்கும் மேலே பேசத் தோன்றவில்லை. ஆனால் அந்த மௌனம் சொல்லாத கதைகளையெல்லாம் சொல்லிப் பரிகசித்தது இருவரையும். இருவரும் ஏதோ ஓர் உணர்ச்சியை மனத்தின் அடித்தளத்தில் வைத்து அமுக்கிவிட முயன்றார்கள். ஒருவர் மனநிலை மற்றவருக்குப் புரிந்தது. ஆனாலும்......

''நான் குழந்தையைப் பற்றிக் கவலைப்படவில்லை, மைதிலி. உன்னைப் பற்றித்தான்....''

மைதிலி பதில் பேசாது அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீ இல்லாமல் நான் எப்படியிருப்பேன், மைதிலி? வாழ்க்கையெல்லாம் பித்துப்பிடித்த வனாக அலையச் செய்யப் போகிறாயா என்னை?''

''ஏன் இப்படி யெல்லாம் பேசுகிறீர்கள்... என்ன வந்து விட்டது இப்போது?''

'இல்லை, மைதிலி. ஆபரேஷனுக்குத் தயார்தானே!''

''ஆபரேஷனா? எதற்கு? எனக்கா...ஐயோ வேண்டாம். 'பிறக்கு முன்பே என் கண்ணன் மேல் கத்திபட விடமாட்டேன்.....''

''கண்ணனா அவன்..... நம் வாழ்வைக் குலைக்க வந்த அவலட்சணப் பிண்டம்....'' ஸ்ரீதரின் மனத்துள் வளர்ந்திருந்த வெறுப்பு விஷ வார்த்தைகளாய்க் கொட்டியது.

''என்ன சொன்னீர்கள்! இல்லை... இது நிஜமில்லை..... இது உண்மையில்லை....'

கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள் மைதிலி. ஸ்ரீதர் மெள்ள அவள் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய்ப் படுக்கையில் விட்டான்.

நீண்ட மௌனத்துக்குப் பிறகு ஸ்ரீதர் மறுபடியும் 'மைதிலி'' என்றான்.

''என்ன அத்தான்?''

''நம் குழந்தையைப் பற்றி.....''

''குழந்தையைப் பற்றி என்ன அத்தான்?''

''உன் தீர்மானம்......''

''என்ன தீர்மானம் இருக்கிறது? நாம் யாருக்கும் கெடுதல் எண்ணியதில்லை. ஆனாலும் கடவுள் நம்மைச் சோதிக்கிறார்.'

'அவ்வளவு சீக்கிரம் மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு விட்டாயா, மைதிலி!''

''வேறு என்ன செய்ய முடியும் நம்மால்? கடவுள் என்றைக்குமே மனித உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளித்ததில்லை. நாம் செய்த பாவம்......''

''இல்லை, மைதிலி. விதியை எப்போதும் மதியால் வெல்லலாம் என்பார்கள்.''

''என்ன அத்தான், நம் குழந்தை கோரமாக இல்லாமல் பிறக்க வழி யிருக்கிறதா? சொல்லுங்கள், அத்தான். என் செல்வத்தின் குறையைத் தீர்க்க என்ன வேண்டுமானாலும் செய்து விடுகிறேன்.''

''இல்லை.......''

''பின் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

''..........''

''சொல்லுங்கள், அத்தான்! நாம் என்ன செய்யலாம் இதற்கு?''

''.............''





''ஏண்டாப்பா! நீ கறிகாய் விற்கிற கந்தசாமிதானே!''
''ஆமாங்க!''
''இது என்னடாப்பா கோலம்?''
''நான் இப்ப இங்கிலீஷ் கறிகாய் தானுங்க விற்கிறது. அதனாலேதான் இப்படி....!''

''ஏன் இந்த மௌனம்? தயவுசெய்து பதில் சொல்லுங்களேன்.'

வாழ்க்கைப் பாதையில் இடைப்பட்ட தடங்கலை மறந்து வாழ்வு நடத்த வேண்டும். பெரிய உயிர் பிழைக்க, அழகற்ற சிறு உயிரைத் தியாகம் செய்வது சாதாரணம்.—இது ஸ்ரீதரின் வாதம்.

அழகற்ற குழந்தையின் மேலும் தாய்க்குப் பாசம் உண்டு. பால் கொடுத்து வளர்க்காவிட்டாலும் அது தன் குழந்தைதான். உயிர்த் தியாகம் செய்து உயிர் காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை என்று அழுதாள் மைதிலி.

வாதம், எதிர்வாதம், அழுகை, தீர்மானம் எல்லாவற்றுக்கும் பிறகு ஆண் மகனே வெற்றி பெற்றான். பாரத சமுதாயமல்லவா? மனமொப்பாமல் வார்த்தையில் கணவனுக்குவிட்டுக் கொடுத்து ஒப்புக் கொண்டாள் மைதிலி.

* *

ஸ்ரீதர் மைதிலியை ஒரு பெரிய டாக்டரின் நர்ஸிங் ஹோமில் சேர்த்துவிட்டான். மாதம் கடந்து செய்யும் சிகிச்சையாகையால் நர்ஸிங் ஹோமில்தான் செய்ய முடியும் என்று சொல்லி விட்டார் டாக்டர். கடமையை நிறைவேற்றும் வீரனைப் போலவே நடந்து கொண்டான் ஸ்ரீதர். அவன் மனத்துக்குள்ளிருந்து ஓர் உணர்ச்சி அவன் செய்கைகளுக்கு 'சபாஷ்' கொடுத்துக் கொண்டிருந்தது. தான் ஓர் ஆதர்ச புருஷன் என்று தனக்குத்தானே நம்பினான் அவன்.

நர்ஸிங்ஹோமிலிருந்த மருந்துகளும் அங்கு நடமாடிய நர்ஸ் முதலிய எல்லாரும் விதியை மாற்றி விடும் விஞ்ஞானிகளாகத் தோன்றினர் ஸ்ரீதருக்கு. அந்த டாக்டரோ... உலகத்தையே தம் இஷ்டப்படி நடத்தி வைக்கக் கூடிய அறிவாளியாகத் தோற்றமளித்தார்.

சிகிச்சை நடக்கும் அறையின் வெளியிலேயே நடமாடிக் கொண்டிருந்தான் ஸ்ரீதர். மனத்தில் இனம்புரியாத ஒரு வேதனை.

'ஆனாலும் மைதிலிக்குத்தான் சற்று ஏமாற்றமாக இருக்கும். அவளை எப்படியும் தேற்றி விடலாம்.' இது அவன் தனக்குத் தானே சொல்லிக்கொண்ட தேறுதல். மூடி வைக்கப்பட்டிருந்த சிகிச்சை அறையின் கதவுகள் ஏதோ மறைத்து வைத்துக் கதை சொல்லிக் கொண்டிருந்தன.

உள்ளிருந்து ஒரு நர்ஸ் வெளியே வந்தாள். ஸ்ரீதர் அவள் முகத்தையே பார்த்தான்.

''டாக்டர் உங்களை உள்ளே கூப்பிடுகிறார்'' என்று ஸ்ரீதரிடம் சொல்லி விட்டு நகர்ந்தாள் நர்ஸ். தான் சொல்லவேண்டிய கஷ்டமான வார்த்தைக்குத் தன்னிடம் வார்த்தைகள் இல்லாமல் திணறுவதுபோல் தோன்றினாள் நர்ஸ்.

உள்ளே சென்ற ஸ்ரீதருக்கு ஒன்றுமே புரியவில்லை. அங்கே தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்த டாக்டர் ''ஸ்ரீதர் தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நடக்கக் கூடாதது நடந்து விட்டது'' என்றார். அவரும் சொல்லும் வார்த்தைகளுக்குத் திணறினார். அங்கு............?

ஆபரேஷன், மைதிலியின் உயிரைப் பலி கொண்டு விட்டது. அழகுத் தெய்வம் மைதிலி இறந்து கிடந்தாள்.

பக்கத்தில்...அழகே உருவான ஓர் ஆண் குழந்தை! ஸ்ரீதர் அதன் முகத்தையும் தலையையும் சட்டென்று பார்த்தான். குழந்தை தனது நீண்ட அழகிய கண்களால் அவனைப் பார்த்தது. இவ்வளவு அழகான குழந்தையா ஸ்ரீதருக்கு? அது, குழந்தைகள் உணவு விளம்பரத்தில் வரும் அயல்நாட்டுக் குழந்தைகளைத்தான் நினைவுறுத்தியது. ஸ்ரீதரைப் பார்த்து அவனது அழகிய குழந்தை அழுதது.

படபடவென்று ஓடித் தன் கைப் பையைத் திறந்து எக்ஸ்ரே படத்தை எடுத்தான் ஸ்ரீதர். எக்ஸ்ரே பொய் சொல்கிறதா......? ஆண்டாண்டுகளாக மேதைகள் வளர்த்த கலையால் வாழ்வு குலைக்கப்பட்டதா.....?

எக்ஸ்ரே படத்தையும் அதன் கவரையும் புரட்டிப் பார்த்த ஸ்ரீதருக்கு அப்போதுதான் 12-ம் நம்பர் கவரில் தவறி 21-ம் நம்பர் படத்தை ஆஸ்பத்திரியில் போட்டுக் கொடுத்து விட்டார்கள் என்று தெரியவந்தது. பிரசவத்துக்காக எக்ஸ்ரே படம் எடுக்க வந்த இருவருக்குமே மைதிலி என்ற ஒரே பெயர் இருந்ததுதான் இத்தனை குழப்பங்களுக்கும் காரணமாகும். இது என்ன சோதனை?

''மைதிலி.....'' என்று கதறிக் கொண்டு ஆபரேஷன் தியேட்டரில் நுழைந்தான் ஸ்ரீதர்.

அங்கு மைதிலியா இறந்து கிடந்தாள்? இல்லை. மனிதனின் படிப்பு, மேதை, அகங்காரம் ஆகிய இவை இறந்து கிடந்தன.

பக்கத்தில் மனித எல்லைகளுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று பிறந்து நிலைத்து நின்றது. அந்தச் சக்தி மனிதனின் அறியாமையைக் கண்டு அழுதது.

நீங்கள் ஸ்ரீவைகுண்டத்துக்குப் போயிருக்கிறீர்களா? பஸ் ஸ்டாண்ட் வழியாகப் பிரயாணம் செய்திருந்தாலும் போதும். அதுவுமில்லையென்றால் உங்களுக்கு வாலி, சுக்ரீவ சகோதரர்களைப் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. வாலி, சுக்ரீவன் என்றதும் இதிகாச காலத்துக்குப் போய் விடாதீர்கள்! இந்த வாலி சுக்ரீவர்களுக்கும் இதிகாச காலத்துக்கும் சம்பந்தமே கிடையாது.

அவர்களை அந்த இராமாயண காலத்து வீரர்களின் இருபதாம் நூற்றாண்டுப் பிறவிகள் என்றும் சொல்ல முடியாது. ஆனால் அப்படி ஊகிக்கத்தக்க விதமாக ஒரு குண விசேஷம் மட்டும் அவர்களிடையே உண்டு. அதுதான் போட்டிக் குணம். அசல் வாலி சுக்ரீவர்கள் கேவலம் ஒரு பெண்ணுக்காகச் சண்டைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இவர்களுடைய போட்டிக்குக் காரணம் ரொம்ப உயர்ந்த விஷயம். லோகத்துக்கு அறிவு விளக்கம் செய்யும் ஒரு சத்காரியம்.

ஸ்ரீவைகுண்டம் ஊரைவிட அவ்வூர் பஸ் ஸ்டாண்ட்தான் அதிக முக்கியத்துவத்துக்குரியது. அந்தப் பிராந்தியத்திலுள்ள பல வேறு பஸ் மார்க்கங்களும் அதன் ஊடே புகுந்து நின்றுதான் வெளியேற வேண்டும். பஸ் ஸ்டாண்ட் எப்போதும் கலகலவென்றேயிருக்கும்.

அங்கே 'தினமுழக்கம்' 'தினகேசரி' என்ற இரு பிரபல தினப் பத்திரிகைகள் விற்கும் 'பேப்பர் பையன்'கள் தாம் வாலியும் சுக்ரீவனும். வாலி 'தினமுழக்க'த்துக்கும், சுக்ரீவன் 'தினகேசரி'க்கும் பஸ் ஸ்டாண்ட் விற்பனையாளர்கள் என்ற ஒரே விவரம் மட்டும்தான் அவர்களைப் பற்றி வெளி உலகத்துக்குத் தெரிந்த விஷயம். இதற்கு அப்பால் அவர்களைச் சுற்றியிருந்த தனியுலகத்தைப் பற்றியும் அங்கே அவர்கள் விசித்திரமான கோட்பாடுகளுடன் சுழன்றடிக் கொண்டிருப்பதைப் பற்றியும் அநேகருக்குத் தெரிந்திருக்க முடியாது. அவ்வளவுக்கு அவர்கள் உலகம் ஒதுங்கிக் கிடந்தது. ஆனால் அவர்களுடைய நிலவுள்ள வாழ்வோ அந்த துக்கத்தையும் கடந்து சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டுதானிருந்தது.



பேப்பர்ப் பையன்கள் என்றால் வெறும் யந்திர ரகத்துப் பையன்கள் அல்ல அவர்கள். அவர்களைப் பொறுத்த அளவில் அந்தத் தொழில் அவர்களுடைய எல்லையற்ற பற்றுதலை ஆகர்ஷித்துக் கொண்டிருக்கும் உயிருள்ள கலை. எங்கிருந்தோ பத்தி பத்தியாகச் செய்தியை நிரப்பித் தள்ளும் அச்சு யந்திரங்களின் மெய்யான உயிர்த்துடிப்பு அவர்கள்தாம்.

இருவேறு பத்திரிகைகளை விற்பதில் ஏற்படக் கூடிய யதார்த்தமான தொழில் போட்டியும் மோதல்களும் அவர்களிடம் உண்டு. அப்போதெல்லாம் அங்கே வாலி, சுக்ரீவ சகோதரர்களைப் பார்க்க முடியாது.

இதோ ஒரு செய்தி!

தாமரை மணாளன்

அற்புதம் அது! வாலிக்குப் பன்னிரண்டு வயது; சுக்ரீவனுக்கு எட்டு. அவர்களுடைய இன்றைய சகோதர உறவு பிறப்பால் வந்ததல்ல; 'தட்டுக்கெட்டு'த் தடுமாறி எங்கெங்கிருந்தோ வந்து ஓரிடத்தில் சந்தித்த இரு அநாதைகள் இணைந்து தங்களுக்குள் ஸ்தாபித்துக்கொண்ட பாச ஒட்டு. இருவருக்குமே அவரவர் பூர்வாங்கம் தெரியாது. தெரியாதது ஒரு குறையாகவும் இருந்ததில்லை. அவர்களுக்கு நாமகரணம் சூட்டியது கூட பஸ் ஸ்டாண்ட் காப்பிஹோட்டல்கார ஐயர்தான்.

அவர்களுடைய முதல் உத்தியோகம் காப்பி ஹோட்டல் எடுபிடித்தனம்தான். ஆரம்பத்தில் அது வாலியின் தனிப் பொறுப்பில்தான் இருந்து வந்தது. சுக்ரீவன் வாலியுடன் ஒன்றியதும் அந்தப் 'பெத்த' உத்தியோகம் இருவருடைய கூட்டுப் பொறுப்புக்குட்பட்டது. இரண்டு ஜீவன்களின் சக்திக்கு அதிகப்படியாகவே வேலை யிருந்தாலும், இரண்டு வயிற்றையும் நிரப்பி விட ஹோட்டல்காரருக்குச் சக்தி இல்லை. எனவே இருவருக்கும் பத்திரிகைக் கடை கோவிந்தையாவின் பக்கம் கையைக் காட்டி விட்டார் அவர்.

தினமுழக்கம் தினகேசரி என்ற இரு பத்திரிகைகளுக்கும் கோவிந்தையா தான் ஒரே ஏஜண்ட். அவர் பையன்களிருவரிடமும் ஆளுக்கொரு பத்திரிகை விற்பனையை ஒப்படைத்தார். கமிஷன் அடிப்படையில்தான்.



விசுவாசமான போட்டிக்குள்ளான இருவேறு தொழில் பிரதிநிதிகளைத்தான் காண முடியும்.

ஆனால் இந்த மோதல்களெல்லாம் இரவு எட்டு மணி வரையில்தான். அதற்கப்புறம் பத்திரிகை விற்பனைத் தொழிலாளிகளாக இருந்தவர்கள், பாசக் கட்டுக்குள் ஒடுங்கும் சகோதரர்களாக ரசாயன மாற்றமடைவது ஓர் அபூர்வக் காட்சியாக இருக்கும்.

இரவு எட்டு மணி சுமாருக்குக் கடைசிப் பஸ் போனபின் பத்திரிகை ஏஜண்ட் கோவிந்தையாவிடம் கணக்கைக் கொடுத்து விட்டுத் தங்கள் கூலியை வாங்குவார்கள். அவர்களுடைய கூலி, அதிகபட்சம் தலா ஆறணா அல்லது ஏழணா வரும். அதைப் பெற்றுக்கொண்டு கடையை விட்டுப் புறப்படும்போது இருவருடைய கூலியும் மூத்தவனான வாலியின் கைக்குப் போய்விடும். ஏனென்றால் அவன் தான் அவர்களுடைய குடும்பத்துக்குப் பெரியவன்!

இரவில் பஸ் ஸ்டாண்டையொட்டிய குளத்தங்கரையில் இருவரும் சமையல் செய்வார்கள். ரொம்பக் களைப்பாக இருந்தால் பஸ் ஸ்டாண்டை யொட்டிய ஹோட்டலில் 'தால்தா' பண்ணிவிட்டு, இரண்டாவது ஆட்டம் சினிமா. அந்தி முடக்கம் பஸ் ஸ்டாண்ட் 'பிரயாணிகள் தங்குமிடத்'தில். இருவருக்கும் ஒரே பொதுவுடைமையாக ஒரே உடைமையாக இருக்கும் துணியை விரித்து, கோழியின் வயிற்றுக்குள் அடங்கும் குஞ்சைப் போல வாலியின் அணைப்புக்குள் சுக்ரீவன் அடங்கி அவர்கள் தூங்கும் அருமை, பகலில் அவர்களுடைய தொழில் சண்டைகளைப் பார்த்திருக்கும் மனிதர்களுக்குத் தெரியாது. இரவுக்கும் பகலுக்கும் ஒரே சாட்சியா யிருக்கும் ஆண்டவன் ஒருவனுக்குக் காணக் கிடைக்கும்

தொழில் ஒப்பந்தம், கமிஷன் விகிதம் கோவிந்தையாவுக்குத்தான் வெளிச்சம். எத்தனை பத்திரிகை விற்றாலும் நபருக்கு ஆறேழு அரைக்காசுக்கு மேற்பட்டு விடாமல் சமயோசிதம்போல் கமிஷன் விகிதத்தை நிர்ணயித்துக் கணக்குத் தீர்ப்பதில் கோவிந்தையா சமர்த்தர். ஆனால் அந்த வியாபார நுணுக்கங்களை யெல்லாம் பையன்களுக்குச் சிந்தை கிடையாது. அவர்களுக்கு வண்டி ஓடினால் சரி. வண்டி ஓடுவது.

பையன்களுக்குச் சொந்த வாழ்க்கைப் பிரச்னைகளில்தான் இந்த அப்பாவித்தனம்; தொழில் என்றால் எப்படித்தான் அமைந்ததோ, வயசுக்கு மீறிய தேர்ச்சி!

உடல் பொருள் ஆவி சுத்தமாகக் காரியத்தில் ஈடுபடுவது என்றால் பெரும்பான்மையோருக்கு உதட்டளவு விஷயம். ஆனால் வாலி சுக்ரீவ சகோதரர்களுக்கோ அதற்கு உயிரோட்டமான சாட்சி உருவங்கள். மார்க்கெட்டில் ஏகதேசம் சம விற்பனையுடன் முன்னணியில் நின்ற அந்த இரு பத்திரிகைகளுடைய தொழில் போட்டியின் பூரணப் பிரதிபலிப்பை வாலி சுக்ரீவர்களிடம்தான் நிதர்சனமாகக் காணலாம்.

வியாபாரச் சாமர்த்தியத்தில் இருவரும் ஒருவருக்கொருவர் குறைந்தவரல்லர். தங்கள் திறமையை யெல்லாம் காட்டி அவர்கள் பத்திரிகை விற்கும் அழகை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

பத்திரிகைகளில் வரும் செய்திகளில் உயிருண்டோ இல்லையோ அது அநாவசியம். சாரமற்ற விஷயங்களுக்கும் காரம் மணம் சுவை யேற்றி விளம்பரம் செய்து விற்பனை செய்வது அவர்களுக்குக் கைவந்த கலை.

''சார், பேப்பர் வாங்கலியா, பிரபல நடிகர் மரணம். சென்னையில் ஒரே பரபரப்பு!'' என்று அவர்கள் உணர்ச்சிப் பெருக்குடன் குரல் கொடுக்கும்போது பிரயாணிகள் முகத்தில் கட்டுக்கடங்கா ஆவல் பிறக்கும். மளமளவென்று பத்திரிகைகள் விற்பனையாகும். பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தால் தான், எப்பொழுதோ பிரபலமாகவிருந்து, தான் பிரபலமாகியிருந்ததையே மறந்து எண்பதாவது வயதில் பட்டினியால் தெருவோரத்தில் விழுந்து செத்திருக்கும் நடிகரைப் பற்றி, எங்கோ மூலையில் செய்தி பிரசுரமாகியிருக்கும்.

பேண்ட், ஸ்லாக்குடன் சிகரெட் ஊதிக் கொண்டு நிற்கும் இளைஞனைக் கண்டால் போதும், ''சார், சினிமா நடிகை சிங்கார வல்லியின் பேட்டி வந்திருக்கு. பேப்பர் வேண்டுமா?'' என்று வெகு அக்கறையுடன் ஞாபக மூட்டிப் பத்திரிகையை நீட்டுவார்கள். அதே நேரத்தில் பக்கத்தில் நிற்கும் 'பிரமுக'ரிடம் ''ஐயா... கட்சியிலிருந்து ஐம்பது பேர் ராஜினாமா! கோட்டை உடைகிறது!'' என்று தெரிவித்து அவருடைய ஆர்வத்தைத் தூண்டுவார்கள். நாடியைச் சொறிந்து கொண்டு நிற்கும் நடுத்தர வயதுக்காரரிடம் போய், ''ஐயா, இந்த வார ராசி பலனைப் பார்க்கலியா?'' என்று கேட்டு நிற்பார்கள்.

சில நேரங்களில் மனுதத்துவக் கண்ணோட்டத்துடன் அபூர்வமான கற்பனை நயமும் அவர்கள் பேச்சில் பரிணமிக்கும்.

''கோட்டூரில் கோரத் தீ! தெருவெல்லாம் ஒரே வெள்ளம்!! பேப்பர் பார்க்கலியா சார்?'' என்று அவர்கள் கேட்கும்போது திகைத்துப் போகாதவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். 'வெள்ளத்தில் எப்படித் தீ பிடிக்கும்?' என்று யார் தான் குழம்ப மாட்டார்? தீயை அணைக்கக் கொட்டிய தண்ணீர் தெருவெல்லாம் பெருக்கெடுத்த சமாசாரம், பேப்பரை வாங்கிப் பார்த்தாலல்லவா தெரியும்! அதற்குள்தான் பேப்பரும் காசும் கைமாறிவிடுமே!

அவர்களை ஒரு நிமிஷம் சோர்ந்திருந்து யாரும் பார்க்க முடியாது. தொழிலில் அவ்வளவு உற்சாகம்! அதற்குக் காரணம், அவர்களுக்கும் அந்தப் பத்திரிகைகளுக்குமிடையே ஏதேனும் ஆத்மார்த்தத் தொடர்பா, அல்லது அவர்களுடைய துடிப்பான தொழிலார்வமா? எதுவென்று சொல்ல முடியாது. ஒன்று மட்டும் நிச்சயம்: அவர்களுடைய உற்சாகத்துக்கும் கோவிந்தையா கொடுக்கும் ஏழணாக் கூலிக்கும் எவ்வளவும் சம்பந்தம் கிடையாது.

விருப்பு வெறுப்புக்களின் சாதாரணப் பற்றுக் கோடுகளைக் கடந்த நிலையில் ஒரு வருடமாக இயங்கி வந்த அவர்கள் சேவையில் திடீரென்று ஒரு விநோதமான விருப்பு முளைத்து கொண்டதுதான் பெரிய விந்தை. அது கேவலம் பொருள் ரூபத்திலோ, மற்ற வெளிப் பற்றுக்களின் போட்டியோ ஏற்பட்ட சாதாரண விருப்பமல்ல; மிகவும் பெரிய மனுஷத்தன்மையான அபிலாஷை!

ஒரு நாள் பத்திரிகைகளில் அவர்களுக்குத் தெரிந்த ஒரு பையனுடைய போட்டோ வெளியாகி யிருந்தது. ஏதோவொரு விழாவில் பரிசு பெற்றதற்காக அந்தப் பையனுக்குப் பத்திரிகைப் பிரபலம் கிட்டி யிருந்தது.

பத்திரிகையில் வெளியாயிருந்த அந்தப் பையனின் படம் தான் வாலி சுக்ரீவ சகோதரர்களுக்குள் அந்த வேடிக்கையான ஆசையைத் தூண்டி விட்டது. அந்தப் போட்டோ சம்பந்தமான விழா, பரிசு போன்ற விவரங்களெல்லாம் அவர்கள் கவனத்தில் ஏறவில்லை. அவற்றைப் பற்றித் தெரியவும் தெரியாது. பத்திரிகையை வாசிக்கத் தெரிந்தால்தானே? கோவிந்தையா படித்துவிட்டுச் சொல்லும் முக்கிய செய்திகளை வைத்துக் கொண்டு சண்டமாருதம் செய்வது தானே அவர்களுடைய கல்வி யோக்கியதாம்சம்!

அந்தப் போட்டோ விஷயம் அவர்களுக்குள் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி விட்டது. அதைப்பற்றி ஒரு ரகசிய சர்ச்சை நடந்தது.

''அண்ணே, நம்ப கிசுவம் பயல் படத்தை பேப்பரிலே போட்டிருக்காங்களே! ரொம்ப அழகாயிருக்கானில்லே!'' என்று ஆவலுடன் தமையனிடம் கேட்டான் சுக்ரீவன்.

''ஆமாண்டா. ஆனால் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல்லேடா!'' என்று வெறுப்புடன் கூறினான் வாலி.

''எனக்கும் பிடிக்கலேண்ணே! அந்தப் பயலுக்குப் படம் பேப்பரிலே வந்திருக்குன்னு ரொம்பக் கர்வம்! அண்ணே, நம்ப பேப்பரிலே ஏன் இந்தப் பயல் போட்டோவைப் போட்டாங்க?'' என்று கவலையுடன் விசாரித்தான் சுக்ரீவன்.

''பாவம்னு போட்டிருப்பாங்க போல் இருக்கு!'' என்று தெளிவும் தெரிவித்தான் வாலி தம்பியிடம்.


''அண்ணே, நம்ப படத்தையும் பேப்பரிலே போடுவாங்களா?'' என்று ஆர்வத்துடன் கேட்டான் இளையவன்.

''அந்தப் பயல் படத்தையே போட்டிருக்காங்களே, நம்ப படத்தை நம்ப பேப்பரிலே ஏன் போட மாட்டாங்க?'' என்றான் வாலி.

இருவரும் சிறிது நேரம் யோசனை செய்தார்கள். முடிவில் 'ஏஜண்ட்' ஐயாவிடம் சொல்லி அவர்களுடைய படத்தையும் பத்திரிகையில் போட ஏற்பாடு செய்ய வேண்டியது என்ற தீர்மானத்துக்கு வந்தார்கள்.

பத்திரிகைக் கடை கோவிந்தையா ஒரு தமாஷ் பேர்வழி. தமாஷுக்குரிய விஷயம் தம் வியாபாரத்தை யொட்டியதாக இருந்துவிட்டால் கொஞ்சம் காரியார்த்தமாகத் தமாஷ் பண்ணுவார்.

போட்டோ விஷயம் பையன்கள் தெரிவித்ததும். ''இதென்ன பிரமாதம்! நம்ப பேப்பரிலே உங்க படத்தைப் போடறதிலே என்ன தடை? ஆனால் சும்மா எழுத முடியுமா? உங்களிலே யார் இன்னைக்கு அதிகமாகப் பேப்பர் விற்கிறானோ, அவன் படத்தை அவன் விற்கிற பேப்பரிலேயே போடச் சொல்லி எழுதறேன். எழுதறத்துக்கும் தோது வேணுமில்லே. உங்க திறமையை இன்னிக்குப் பார்க்கலாம்!''... என்று சிரித்துக் கொண்டே கூறினார்.



ஒருவர்: எங்கே சொச்ச கிரகத்தையெல்லாம் காணோம்?

ராகு: அவர்களெல்லாம் ஒன்று சேருகிறதற்காக எங்கேயோ போயிருக்கா!

அவர் முழுக்க முழுக்க வேடிக்கைக்குச் சொல்லியதாகவும் எடுத்துக் கொள்ளலாம்; அல்லது சந்தர்ப்பத்தை அனுசரித்து வியாபாரத் தந்திரத்துடன் சொல்லியதாகவும் எடுத்துக் கொள்ளலாம். அது விவரம் தெரிந்தவர்களையும் அவரைத் தெரிந்தவர்களையும் பொறுத்தது. ஆனால் பையன்கள் அந்த இரு கண்ணோட்டங்களிலும் எடுத்துக் கொள்ளவில்லை. அதன் விளைவு அவர்களுடைய வேலையில் விசேஷமாகப் பிரதிபலித்தது.

அன்று அவர்களுக்குள் நடந்த ஒரு வருடகாலமும் இல்லாத விறுவிறுப்பான போட்டி: இதுவரை தத்தம் பேப்பர் விற்பனையில் மட்டுமே கவனம் செலுத்தித் தொழில் போட்டி நடத்தியவர்கள், அன்று பரஸ்பரம் அடுத்தவன் விற்பனையையும் வீழ்த்துவதையும் உபகாரியமாகக் கவனித்தனர். இருவருமே அதிகம் விற்று விட்டால் பயனில்லையே; யார் மற்றவரை விட அதிகம் விற்பனை செய்கிறானோ அவன் படம் தானே, பத்திரிகையில் வரவிருக்கிறது!

ஆரம்பம் முதலே மார்க்கெட் நிலவரம் இளையவனை சுக்ரீவனுக்கே அதிக சாதகமாக இருந்தது. அதற்கு முக்கிய காரணம், அவன் தன் அண்ணனைவிடச் சற்று அதிகமாகவே 'வீழ்த்துப் பணியில்' கவனம் செலுத்தியதே.

மாலை மூன்று மணியளவில் போட்டி ரொம்பவும் உச்ச கட்டத்தில் நின்றது. கிட்டத்தட்ட பத்திரிகை விற்பனை ஓயக்கூடிய நேரம் நெருங்கி விட்டதல்லவா?

அஷ்டக் கிரகங்களும் சேருவதால் பல தீமைகள் விளையலாம் எனக் கருதப் படுகிறதல்லவா? இதற்குப் பரிகாரமாக, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் திருவுள்ளப்படி ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அன்னையின் ஆலயத்தில் கார்த்திகை மாதத்திலிருந்து ரிக், யஜுஸ், ஸாமம் ஆகிய மூன்று வேதங்களின் சம்ஹிதா பாராயணங்கள் பிரதிதினமும் காலை 6-30 மணி முதல் 8 மணி வரை நடைபெறுகின்றன. தை மாதம் முடியும் வரை இப் பாராயணங்கள் தொடர்ந்து நடைபெறும்.

''சார், 'தினமுழக்கம்' வாங்கலையா, கோவில்பட்டி கொலை வழக்குத் தீர்ப்பு வந்திருக்கு!'' என்று ஒருவரிடம் பத்திரிகையை நீட்டினான் வாலி.

''சார்! தினகேசரியில்தான் கொலை வழக்குச் செய்தியெல்லாம் ரொம்ப ஜோராய்ப் போட்டிருக்கு. தினகேசரி வாங்குங்க, சார்!'' என்று இடையில் வந்தான் சுக்கிரீவன்.

''இல்லே, சார். அதுலே படம்தான் இருக்கு. தின முழக்கத்தில் தான் நிறையச் செய்தி யிருக்கு.''

''அவன் பேப்பரிலே வளவளன்னு போட்டிருக்கும். ரொம்பப் போரடிக்கும், சார்! தினகேசரியில்தான் விறுவிறுப்பாயிருக்கும்!''

''டேய், நீ என் பக்கம் வராதே, கொன்னுடுவேன்!'' என்று தம்பியிடம் கத்தி விட்டு, ''சார், தினமுழக்கத்தில்தான் விவரமாச் செய்தி யெல்லாம் போட்டிருக்கு'' என்று அடுத்த விஷயத்துக்குத் தாவினான் வாலி.

சுக்கிரீவன் அங்கேயும் குதித்தான். ''சார்! அவன் பேப்பரிலே வந்திருக்கிறதெல்லாம், பழைய நியூஸ். தினகேசரியில் தான் புது நியூஸ் வந்திருக்கு. இந்தா பாருங்க, புது முகம் விஜயாவின் புதுப் போஸ் கூட வந்திருக்கு'' என்று பத்திரிகையை விரித்துக் காட்டினான்.

பஸ் நகர ஆரம்பித்தது. அவர்களுடைய இலக்காகவிருந்த பிரயாணி சுக்கிரீவனிடமிருந்து தினகேசரியை வாங்கிக் கொண்டார். பஸ் போய் விட்டது.

வெற்றிப் பெருமிதத்துடன் தமையனைப் பார்த்தான் சுக்கிரீவன். ஆத்திரப் பிழம்பாய் நின்று கொண்டிருந்தான் வாலி.

''ஏன்டா கழுதை! நான் விற்கிற இடத்துக்கு நீயேன் வந்தே?'' என்று சீறி விழுந்தான் வாலி.

''அப்படித்தான் வருவேன்... ஒன்னோட, என் பேப்பரெல்லாம் வித்துட்டுதில்லே. என் படம் பேப்பரிலே வரப் போவுதுன்னு ஒனக்குப் பொறாமை! தைறயா!'' என்று தன் கையிலிருந்த ஒரிரு பத்திரிகையையும் வேடிக்கையாக ஆட்டிச் சிரித்தான் சுக்கிரீவன்.

''போடா, புளுகுணிப் பயலே, உன்னை மாதிரிதான் உன் பேப்பரும் புளுகுணிப் பேப்பராயிருக்கும். நீ எவ்வளவு வித்தாலும் உன் படத்தைப் போடாமல் ஏமாத்திவிடுவாங்க!'' என்று தன் தோல்வியை மறைக்கக் குரோதத்துடன் கூறினான் வாலி.

''போய்யா, என் பேப்பர் ஒண்ணும் அப்படியில்லே. உன் பேப்பர்தான் உன்னை மாதிரி அழுமூஞ்சிப் பேப்பர். உன் பேப்பரும் விற்காது. உன் படமும் வராது'' என்று ரோஷத்துடன் கத்திப் பேசினான் சுக்கிரீவன்.

''டேய், உன் பேப்பர் மாதிரி பொய்யான கன்னிப் பேப்பர் இல்லேடா என் பேப்பர்! என் பேப்பரைக் குறைச்சுப் பேசினே, உதைப்பேன். ஜாக்கிரதை!''


''ஏன் உனக்குக் கோவம் பொத்துக்கிட்டு வருது? என் பேப்பரை மட்டும் குறைச்சுப் பேசறியே, நானும் சொல்வேன். உன் பேப்பர் சோத்திப் பேப்பர். சோத்திப் பேப்பர்....'' என்று கத்தினான் சுக்ரீவன்.


வாலியால் பொறுக்க முடியவில்லை. தன் கைவசமிருந்த பத்திரிகைக் கட்டால் சுக்கிரீவனை ஓங்கி அறைந்து விட்டான். எதிர்பாராத பலமான அடியால் தடுமாறிக் கருண்டு விழுந்தான் சுக்கிரீவன். சண்டை மும்முரத்தில் சரேலென்று அங்கு வந்த பஸ்ஸை அவர்களும் கவனிக்கவில்லை. இவர்களுடைய திடீர் கைகலப்பை பஸ் டிரைவரும் எதிர்பார்க்கவில்லை; கண்டதும் சட்டென்று பஸ்ஸை நிறுத்தவும் அவகாசமில்லாமல் போய் விட்டது.

முன்னேறி வந்த பஸ் சக்கரங்கள் கீழே விழுந்து கிடந்த தம்பியை நெருங்கியதைக் கண்டதும் தன் உணர்வுக்கு வந்த வாலி, ''தம்பீ!'' என்று கத்திக் கொண்டு அவனைக் காப்பாற்றப் பாய்ந்தான். ஆனால் எல்லாவற்றையும் காப்பாற்ற வேண்டியவன் ஒரு விநாடி கண்ணை மூடிக் கொண்டானோ, என்னவோ அந்த ஒரு விநாடிக்குள் எல்லாருடைய முயற்சியையும் மீறி என்னென்னவோ நடந்து விட்டன.

* * *

இரண்டு மூன்று நாட்களாகி விட்டன. சுக்கிரீவன் படம் பத்திரிகையில் வந்ததோ இல்லையோ [illegible] எனக்குத் தெரியாது.. எனக்குத் தெரிந்தது இதுதான். உள்ளூர் தர்ம ஆஸ்பத்திரியில் ஒரு படுக்கையில் பலத்த கட்டுக்களுடன் கிடக்கும் வாலி, சற்று முன் காலியான அடுத்த படுக்கையைப் பார்த்து விக்கி விக்கி அழுது கொண்டிருக்கிறான். இவன் இப்படிக் கிடப்பதும் சற்று முன் அவன் இன்னொரு படுக்கையில் கிடந்ததும் பேப்பருக்கு ஒரு நியூஸ். ரொம்ப சாதாரணமான நியூஸ் தான். மூன்றாம் பக்கத்தில் ஐந்தாம் பத்தியின் கீழ்க்கோடியில் ஒரே செய்தியாகச் சேர்த்துப் போட வேண்டிய நியூஸ்தான். காங்கோவில் நடந்த ஆரம்பா விஷயம் போல் அல்ல உலக முக்கியத்துவம் இல்லாத நியூஸ் தான்!





மிகவும் துல்லியமான சருமத்திற்கும் இதத்தை அளிக்கும் இனிய குணம் கொண்டது மெரோலின் சோப். அதுமட்டுமல்ல, அதன் மருந்து கலந்த அம்சம் மேனிக்குப் பூரண பாதுகாப்பையும் அளிக்கிறது.

மெரோலின்



"இதனுல்தான் நான் மெரோலின் சோப்பை மிகவும் விரும்பி உபயோகிக்கிறேன்" என்கிறுர் சிறந்த கன்னட நடிகையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமதி லீலாவதி.

வெஜிடபிள் சோப் ஒர்க்ஸ்
கோழிக்கோடு



ஜசாமு எழுதும்
புதிய தொடர் கதை
நந்தவனம்


கல்கி
ஜனவரி
14
பொங்கல் மலரில் ஆரம்பமாகிறது

திருமூலர் தவமொழி

ராஜாஜி சோமு

38

நடராஜ மூர்த்தியின் ஆனந்தக் கூத்திலேதான் உலகின் தோற்றமும், இயக்கமும், மறைவும் எல்லாம் நடை பெறுகின்றன என்று உருவகித்தார்கள் நம் நாட்டு ஞானிகள். அந்தக் கூத்தை அறிவதுதான் ஞானம். அது இறைவன் அருளிலிருந்துதான் வர வேண்டும்.

எல்லாமே தெய்வ லீலை. எல்லாம் ஆனந்த மயம் என்பது நமது சமயக் கொள்கை. அதைத் திருமூலர் பாடுகிறார்.

> **ஆனந்தம் ஆடரங்கம்**
> **ஆனந்தம் பாடல்கள்**

[ஆடரங்கம் — நடன அரங்கம். பாடல்கள்—நடனத்துக்குரிய பாட்டுக்கள்.]

இறைவனுடைய ஆனந்தமே நடன அரங்கம். ஆனந்தமே நடனமும்! அந்த நடனத்துக்கான பாடல்களும் ஆனந்த மயமே.

> **ஆனந்தம் பல்லியம்**
> **ஆனந்தம் வாச்சியம்**

[பல்லியம் — வாத்திய கோஷ்டி. வாச்சியம்—அபிநயம்.]

> **ஆனந்த மாக**
> **அகில சராசரம்**
> **ஆனந்தம் ஆனந்தக்**
> **கூத்துகந் தானுக்கே**

[அகில சராசரம்—உலகனைத்திலும் உள்ள அசையும் பொருள் அசையாப் பொருள், அதாவது சேதனம் அசேதனம் அனைத்தும். அகில சராசரம் ஆனந்தம் ஆக—இறைவனுடைய ஆனந்தத்தை உணர்ந்து அதோடு ஒன்றி இசைந்தார்களானால் அதனால் இறைவனுக்கும் சம்பூர்ண ஆனந்தம் உண்டாகும். அவன் லீலை பூரணமாகும். கூத்து உகந்தானுக்கே—நடனத்தை மகிழ்ந்து ஆடுகிற நடராஜ மூர்த்திக்கு.]

இறைவனுடைய ஆனந்தக் கூத்தின் பயனே உலகங்களின் தோற்றமும் இயக்கமும் மறைவும். அவற்றின் நன்மை தீமைகளை நாம் ஆராய்ந்து குழப்பிக் கொள்ளலாகாது. அவனுடைய ஆனந்தத்துக்காகவே அனைத்தும் நடைபெறுகிறது. இதைப் பாட்டின் இறுதி இரண்டு அடிகளில் முனிவர் சொல்லுகிறார்.

> **ஆனந்தம் ஆடரங்கம்**
> **ஆனந்தம் பாடல்கள்**
> **ஆனந்தம் பல்லியம்**
> **ஆனந்தம் வாச்சியம்**
> **ஆனந்தம் ஆக**
> **அகில சராசரம்**
> **ஆனந்தம் ஆனந்தக்**
> **கூத்துகந் தானுக்கே !**

நடராஜனுடைய கூத்தின் பெருமையையும் அதன் சம்பூரண வியாபகத்தையும் பாடுகிறார்.

> **வேதங்கள் ஆட**
> **மிகும் ஆ கமம் ஆட**

[வேதங்கள் ஆட—மறை நூல்கள் தத்தம் விதிக்கு உரிய முறையில் தொழில் செய்து இயங்கும்படியாக. மிகும் ஆகமம் ஆட—பல பலவாக விளங்குகின்ற ஆகமங்களின் நெறி செயற்படவும்.]

> **கீதங்கள் ஆடக்**
> **கிளர் அண்டம் ஏழாட**

[கீதங்கள் ஆட — பண்ணோடு இசைந்த தோத்திரப் பாடல்கள் எழுந்து ஒலிக்க. கிளர் அண்டம் ஏழாட—பரவி நிற்கின்ற ஏழு அண்டங்களும் சுற்றிச் சுழல.]

> **பூதங்கள் ஆட**
> **புவனம் முழுதாட**

[பூதங்கள் ஆட—நீர், நெருப்பு, காற்று, நிலம், வானம் ஆகிய ஐந்து

பூதங்களும் அசைந்தாட, புவனம் முழுதாட—உலகங்கள் அனைத்தும் ஆட.]

நாதம்கொண்டு ஆடினான்
ஞானனாந் தக்கூத்தே

[நாதம் கொண்டு—நாதத்தோடு. ஞானனாந் தக் கூத்து—ஞானமயமான இறைவனுடைய கூத்து.]

வேதங்கள் ஆட
மிகு ஆகமம் ஆட
கீதங்கள் ஆடக்
கிளர் அண்டம் ஏழாட
பூதங்கள் ஆட
புவன முழுதாட
நாதங்கொண் டாடினான்
ஞானனாந் தக்கூத்தே

ஞானிகள் கண்ட முடிபு என்னவென்றால், இந்த உலகத்தின் தோற்றமும், நடையும், எல்லாம் இறைவனுடைய லீலை. அதை உணராமல் இது அது என்று ஆராய்ச்சிகள் செய்வதில் பயனேதும் இல்லை. ஆராய்ந்து அறிய முடியாத இறைவனுடைய இரகசியத்தை வடமொழியில் "லீலை" என்றும், தென்மொழியில் இறைவனுடைய 'கூத்து' என்றும் சொல்லுவது மரபு. இறைவனை நடராஜ மூர்த்தியாக வழிபடுவதும் இந்த உண்மையை மனத்தில் பதிய வைக்கவே! வடமொழியில் 'லீலை' என்று சொல்லி நிறுத்தினார்கள். தென்னாட்டுக் கலைஞர்கள் அந்தத் தத்துவத்துக்கு இசைய இறைவனுக்கு நடராஜனாக ஒரு வழிபாட்டு—உருவம் தந்தார்கள். இது தென்னாட்டின் பெருமை.

தத்துவங்களை மக்களின் உணர்வில் நிறுத்துவதற்காக, வழிபாட்டுச் சடங்குகளும் அவற்றிற்கு ஏற்ப வழிபாட்டு மூர்த்திகளும் அமைத்துக் கொள்வது. உலகச் சமயங்கள் அனைத்துக்கும் பொது மரபு. சடங்குகள் வேண்டியதில்லை. மூர்த்தி வேண்டியதில்லை என்றெல்லாம் சிலர் பேசுவார்கள். சடங்குகளையும் மூர்த்திகளையும் நீக்கிவிட்டோமானால் தத்துவ உணர்வும் வரவர நைந்து போகும். இதை உணர்ந்துதான் நம் முன்னோர் பலவேறு சடங்குகளையும் பலவேறு மூர்த்திகளையும் நமக்கு அமைத்துத் தந்திருக்கிறார்கள்!

புது வெள்ளம்

2

அத்தியாயம் ஐந்து

மாடல்ல, மனிதன்!

முருகையன் பாரிஸ் முனையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் வழியில், தெருக்களில் பலவிடங்களில் ஒலித்த பாரதியார் பாடலைக் கேட்டான். மறுநாள் பொழுது விடிந்தால் சுதந்திர தினமல்லவா? பொழுது விடியும் வரையில் பொறுக்க முடியாமல், முதல் நாள் இரவே தங்கள் உற்சாகத்தைக் காட்டத் தொடங்கி விட்டார்கள் நகர மக்கள்.

"எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!"

கவிஞரின் பாடல் முருகையனின் இதயத்துக்குள் புகுந்து அவனை இன்ப உலகில் மிதக்கச் செய்தது. நகரத்துக்குள் அப்போதே புகுந்து விட்ட சுதந்திரக்காற்றில் கவிஞரின் இதய ஒலியைக் கேட்டவுடன் அவன் தன் கவலைகள் அனைத்தையுமே மறந்து விட்டான். சற்று முன்பு அவனுடைய முழுச் சொத்தையுமே போலீஸ்காரர்கள் கைப்பற்றிக் கொண்டு போனது கூட அவனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

தான் இந்த நாட்டின் மன்னன் என்ற குதூகலம் அவனுக்கு. முனியாண்டியின் குழந்தைகளுக்காக வாங்கியிருந்த தின்பண்டங்களைப் பெருமையோடு கையில் ஏந்திக்கொண்டே அவன் நடந்தான்.

குடிசைக்குள் அழுகுரலையும் முனகலையும் கேட்டவுடன் தான் அவனுக்கு இந்த உலகத்தின் நினைவே வந்தது. 'நாளைக்குச் சுதந்திரம் வரப் போகிறது. அதற்குள் இன்றைக்கு அவர்களுக்கு என்ன வந்து விட்டது?'

மெல்லக் கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தான் முருகையன். குழந்தைகள் ஒருபுறம் உறங்கிக் கொண்டிருந்தார்கள். முனியாண்டி தனது வலது காலைப் பற்றிக் கொண்டு ஆற்ற மாட்டாமல் முனகினான். அருகில் அவன் மனைவி கண்ணீர் வடித்



துக் கொண்டிருந்தாள். அந்தக் காட்சியைக் கண்டவுடன், சந்தர்ப்பம் தெரியாமல் தான் குழந்தைகளுக்குத் தின்பண்டம் வாங்கி வந்ததாய்த் தோன்றியது முருகையனுக்கு. அதை ஒரு புறமாக வைத்து விட்டு, முனியாண்டியின் காலை உற்றுப் பார்த்தான். கந்தல் துணியால் பெரிய கட்டுப் போடப்பட்டிருந்தது.

''தெருவிலே கிடந்த ஒரு ஆணி குத்திடுச்சுங்க. கால் ஒரே கடுப்பாக் கடுக்குது. இவ தான் என்னமோ மருந்து வச்சுக் கட்டியிருக்கா'' என்றான் முனியாண்டி.

அப்போதுதான், முனியாண்டி காலுக்குச் செருப்புக்கூட இல்லாமல் ரிக்ஷா இழுத்திருக்கிறான் என்ற விஷயம் முருகையனுக்குத் தெரிந்தது. சரேலென்று நெஞ்சில் ஊசி பாய்ந்தது போலிருந்தது அவனுக்கு. மாடுகளுக்கும் குதிரைகளுக்கும் கூட லாடம் அடித்து விடுகிறார்கள். மனித மாட்டுக்குச் செருப்பு வாங்கவே முடியவில்லை!


''டாக்டரைப் போய்ப் பார்த்து மருந்து போடலாமே?'' என்று நிலையை மறந்து, வாய் தவறிச் சொல்லி விட்டான் முருகையன்.

''தர்ம ஆஸ்பத்திரி மூடியிருப்பாங்க. வேறே டாக்டருக்குக் காசு கொடுக்க வழியிருந்தால் அந்தக் காசிலே நான் செருப்பு வாங்கியிருப்பேனே'' என்றான் முனியாண்டி.

நெஞ்சு நிறைந்த அனுதாபத்தையும், காலணுக்காசு கூட இல்லாத சட்டைப் பையையும் வைத்துக் கொண்டிருந்த முருகையன் கற்சிலை போல் சிறிது நேரம் அங்கு உட்கார்ந்திருந்தான். அது வேறு ஒருவனுடைய குடும்பமாக அவனுக்குத் தோன்றவில்லை. —'மனிதன் மற்ற மனிதனின் துன்பத்தைக் கண்ட பிறகும், அதைத் துடைக்க முடியாமல் வாழும் வாழ்வு ஒரு வாழ்வா?' கசப்போடு தன்னுடைய தாழ்வாரத்துக்குச் சென்று படுத்தான்.

'தெருவில் கேட்ட பாரதி பாட்டு, மீண்டும் அவன் உள்ளத்தில் ஒலித்தது. இந்நாட்டு மன்னர்களில் ஆறு பேர் அந்த வீட்டில் இருந்தார்கள்; அவனையும் சேர்த்து ஏழு பேர்; இந்த மன்னர்கள் மனிதர்களாக வாழும் நாள் எந்த நாளோ?

இரவெல்லாம் முனியாண்டியின் முனகல் ஒலியும் அவன் மனைவியின் அழுகுரலும் முருகையனின் செவிகளில் விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டேயிருந்தன. நேரம் செல்லச் செல்ல ஒலி அதிகரித்துக் கொண்டிருந்ததே தவிரச்



சிறிதும் குறையவில்லை. 'நாட்டுக்கு என்னவோ விடுதலை கிடைக்கப் போகிறது. இவர்களுக் கெல்லாம் என்றைக்கு விடுதலை கிடைக்கும்?

இரவின் தனிமையில் அவனுக்குக் காந்தியடிகளின் புன்னகை தவழும் முகம் நினைவுக்கு வந்தது. 'இந்த மனிதர் ஏழைகளின் பங்காளர்! தனியொருவனுக்கு உணவு கிடைக்காத நிலை இருக்கும் வரையில் இவர் தமது தியாகப் போராட்டத்தை நிறுத்த மாட்டார். இவர் நூறாண்டு வாழ வேண்டும். மனிதர்கள் வாழ்வதற்காக இவர் நிச்சயம் வாழ வேண்டும்' என்று வேண்டிக் கொண்டான்.

சுதந்திர சூரியன் உதயமானான். உற்சாகத்துடனும் நம்பிக்கையோடும் படுக்கையை விட்டு எழுந்தான் முருகையன். சுதந்திர தின விழாவைக் கொண்டாடுவதற்கென்றே அவனுக்கொரு கடமை காத்திருப்பது போலத் தோன்றியது. விடி வெள்ளி முளைப்பதற்கு முன்பே, அவனுக்கு எப்படி விழாவைக் கொண்டாடுவது என்பதில் ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது.

'என் முடிவைக் கண்டு ஊரார் சிரிக்கலாம்; உலகம் சிரிக்கலாம்; ஆனால் காந்தி கட்டாயம் சிரிக்க மாட்டார்' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டான் முருகையன்.

காலையில் முனியாண்டியின் வீட்டுக்குள் நுழைந்து பார்த்தபோது முனியாண்டிக்குச் சுயநினைவில்லை. நெற்றி நெருப்பாகச் சுட்டது. கால் முழுதும் வீக்கம் கண்டிருந்தது. ஜன்னி கண்டவன் போல் முனியாண்டி உளறத் தொடங்கினான். அவன் மனைவியோ குழந்தைகளைக் கட்டிக் கொண்டு கதறியழுதாள்.

''இதோ பார்! அழுது கொண்டிருப்பதில் ஒன்றும் பலனில்லை. ஏதாவது செய்து தீர வேண்டும்'' என்றான் முருகையன்.

''என்ன செய்யறதுன்னு ஒண்ணும் புரியலிங்களே! ஆஸ்பத்திரிக்கு இந்த நிலையிலே இவரை எப்படிங்க நான் கொண்டுக்கிட்டுப் போவேன்?''

''நான் சொல்கிறபடி நீ செய்தால் போதும்!'' என்று கண்டிப்பான குரலில் கூறினான் முருகையன். ''என்னை அன்னியனாக நினைப்பதை முதலில் விட்டுவிட வேணும். நான் என்ன செய்கிறேன், ஏன் செய்கிறேன் என்று கேட்கக்கூடாது. இப்போது முனியாண்டியை நான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் போகிறேன். குழந்தைகளைக் கவனித்து விட்டு நீ அங்கே வா.— என்ன தெரிந்ததா? நான் வேறு, உன்னுடைய தம்பி வேறு இல்லை.''

என்ன சொல்கிறான், எதற்காகச் சொல்கிறான் என்றே அவளுக்குப் புரியவில்லை. முருகையனோ மளமளவென்று, முனியாண்டியின் குல்லாயை அந்தக் குடிசைக்குள்ளிருந்து எடுத்துக் கொண்டு போனான். தன் தாழ்வாரத்திலிருந்து வெளியில் வந்தபோது முனியாண்டியின் ரிக்ஷாவையும் உடன் இழுத்துக்கொண்டு வந்து வீட்டு வாசலில் நிறுத்தினான்.

இதைக் கண்டவுடன் பதறிப்போனாள் முனியாண்டியின் மனைவி. முனியாண்டியைத் தூக்கி ரிக்ஷாவில் வைப்பதற்காக அவன் உள்ளே நுழைந்த போது, அவளால் இந்தக் காட்சியைப் பொறுக்க முடியவில்லை.

''வேண்டாம் சாமி, வேண்டாம்! நாங்க என்ன பாவம் செய்தோமோ, இவ்வளவு கஷ்டப் படறோம். இன்னும் உங்க பாவத்தை வேறே கொட்டிக்க வேணுமா...?''

குறுக்கே விழுந்து தடுக்க வந்து விட்டாள் அவள்.

''நான் சாமியில்லை, உன் தம்பி! உன் தம்பி!'' என்று கத்தினான் முருகையன். ''இதோ பார்! உன்னுடை குழந்தைகளின் முகத்தைக் கொஞ்சம் பார்! ஒரு நாளைக்கு முனியாண்டி உழைக்காமல் இருந்தால் இத்தனை வயிறுகளுக்கும் சோறு போடுவது யார்? அவனை இப்படியே போட்டு விட்டால் என்ன நடக்கும் தெரியுமா?''

''அதுக்காக நீங்க ரிக்ஷா இழுக்க வேண்டாம், சாமி! டாக்டரையாவது கூட்டிக்கிட்டு வந்து காட்டுங்க. எங்களுக்காக உங்களோட மானம் மரியாதையை யெல்லாம் விட்டுட்டு இப்படிச் செய்யாதீங்க, சாமி!''

முருகையனால் அதற்கு மேலும் தன் ஆத்திரத்தையும் அழுகையையும் அடக்க முடியவில்லை. ''என்னிடம் காசு இருந்தால் நேற்றே டாக்டரைக் கூப்பிட்டிருக்க மாட்டேனா?'' என்று திருப்பிக் கத்திவிட்டு, ''கடவுள் கொடுத்த உடம்பாலே உழைத்து ஒருவனுக்கு உதவி செய்வது, மானக் குறைவாயிருந்தால் இருந்து விட்டுப் போகட்டும்!'' என்றான்.

முருகையனுக்கு இவ்வளவு கோபம் வந்து அவள் பார்த்ததேயில்லை. அவள் நடுநடுங்கிப் போய் விட்டாள். அந்தக் கோபம் செயலற்ற தன்மையின் மீதும், இந்த நாட்டு மக்களின் அலங்கோல நிலை மீதும் ஏற்பட்ட கோபம் என்று அவளுக்கு எப்படித் தெரியும்?

''உன் புருஷனுடைய ஒரு உயிர் நல்லா இருந்தால்தான், உன் குடும்பத்திலே உள்ள எல்லா உயிரும் வாழ முடியும். நீ பேசாமல் இரு!''

பயந்து கொண்டே மெல்ல, ''லைசென்சு தகடு இல்லாமல் ரிக்ஷா இழுக்கக் கூடாது சாமி!'' என்று சட்டத்தை நினைவூட்டினாள் முனியாண்டியின் மனைவி.

வேதனையையும் மீறிச் சிரிப்பு வந்தது முருகையனுக்கு. முதல் நாள் பாரிஸ் முனையில் நடந்த தெருக் கூத்தையும் நினைத்துக் கொண்டான் அவன்.

''இன்றைக்குச் சுதந்திர தினம். கெடுபிடி அவ்வளவாக இருக்காது. நான் பார்த்துக் கொள்கிறேன்.''

முனியாண்டிக்கு நடப்பு ஒன்றுமே தெரியவில்லை. நினைவு பிசகி விட்டது. அவனுடைய வைரம் பாய்ந்த உடலைத் தூக்கி ரிக்ஷாவில் வைத்தான் முருகையன். முனியாண்டியின் குழந்தைகள் புரிந்து கொண்டோ, புரிந்து கொள்ளாமலோ 'ஓ'வென்று கதறி அழத் தொடங்கி விட்டார்கள். முருகையன் உள்ளே சென்று எல்லோரையும் அன்போடு அணைத்துக் கொண்டு, ''அப்பா சீக்கிரம் வந்திடுவாரு! அது வரையிலே நீங்க அழாமல் கெட்டிக்காரப் பிள்ளைகளாக இருக்கணும் தெரியுமா?'' என்று தேற்றினான். பிறகு, கொடுக்க மறந்த முதல் நாளிரவு வாங்கிய தின்பண்டங்களை ஆளுக் கொன்றாய்க் கொடுத்தான். அழுகை மறைந்த இடம் தெரியவில்லை. அந்தக் குழந்தைகளின் கண்களிலே துள்ளிய ஆனந்தத்தை அப்படியே தன் மனத்தில் பதித்துக் கொண்டு, ரிக்ஷாவிடம் வந்தான். பிறகு தூக்கிக் கொண்டு மகிழ்ச்சியோடு இழுத்தான்.

ரிக்ஷா இழுப்பதற்கும் பழக்கம் வேண்டும் என்று அவனுக்கு இழுத்த பிறகுதான் தெரிந்தது. முதலில் ஒரே யடியாக அவனைத் தரையில் அழுத்தியது; பிறகு குடை சாய்ந்து விடுவது போல் பின்னால் தூக்கியது. ஒரு வழியாக நிதானப்படுத்திக் கொண்டு, ஓரே ஓட்டமாய்க் கிளம்பினான் முருகையன்.

சுதந்திர தின விழாவுக்காக நகரத்தில் பலர் பலவிதங்களில் கோலாகலமான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். திரும்பிய பக்கங்களிலெல்லாம் பாரதியார் முழங்கினார்; திரும்பிய பக்கங்களிலெல்லாம் கொடிகள் பறந்தன; திரும்பிய பக்கங்களிலெல்லாம் சொற்பொழிவாளர்களின் குரல்கள் ஒலித்தன.

முருகையனின் பரவசம் எல்லையை மீறியது. அவனுடைய மனத்திலே ஒரு பெரும் திருப்தி நிலவியது. அவன் தன்னுடைய நாட்டுச் சகோதரன் ஒருவனைச் சுமந்து கொண்டு சென்றான். மனிதர்களுக்கு மாடாக மாறிவிட்ட ஒருவனை மனிதனாக்கி, அவனுக்குத் தான் மாடாக மாறியதில் முருகையனின் ஆத்மா என்றுமே அடைந்திராத ஓர் இன்பத்தை அடைந்தது.

'இந்த நாட்டில் இனி மனிதன் உறவை மனிதன் பறிக்க மாட்டான்; மனிதன் பட்டினி கிடக்க மனிதன் சாப்பிட மாட்டான்; மனிதன் நோக மனிதன் பார்க்க மாட்டான்.......சுதந்திரம் வந்துவிட்டது! சுதந்திரமும் வந்துவிட்டது!' என்று துள்ளிக்கொண்டே ஓடினான் அவன்.


உள்ளத்திலே உற்சாகமும் ஊக்கமும் இருந்தால் உடல்வலி தெரியாதல்லவா? அதுபோல்தான் முருகையனுக்கும் தன்னுடைய வலி தெரியவில்லை. பெரிய ஆஸ்பத்திரி ஒன்றும் கூப்பிடு தூரத்தில் இல்லை; பாதை நீண்டுகொண்டே போயிற்று. மூச்சு வாங்கியது முருகையனுக்கு; கைகள் வலித்தன; கால்கள் வலித்தன. ஒன்றையுமே சட்டை செய்யாமல், ஆஸ்பத்திரிக்குள் ரிக்ஷாவுடன் நுழைந்தான். பிறகு, அதை ஓர் ஓரத்தில் நிறுத்தி விட்டு, ஒரே தூக்காக முனியாண்டியைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு உள்ளே வேகமாகப் போனான்.

அத்தியாயம் ஆறு

"ஏய் ரிக்ஷா!"

பெரிய ஆஸ்பத்திரியில் மிகப் பெரிய கூட்டம் காத்திருந்தது. எப்படியோ ஒரு வழியாக டாக்டரைப் பார்த்து முனியாண்டியின் நிலைமையை எடுத்துச் சொல்லி, அவனுக்கு அங்கேயே படுக்க ஓர் இடம் தேடிக் கொடுத்தான் முருகையன். முதல் சிகிச்சை நடந்து கொண்டிருக்கும் போதே அங்கு முனியாண்டியின் மனைவியும் கைக் குழந்தையுடன் வந்து சேர்ந்தாள். மற்றக் குழந்தைகளை அடுத்த வீட்டில் விட்டு விட்டு வந்திருந்தாளாம்.

நோயுற்ற கணவனின் அருகில் மனைவியை இருக்க விட்டு, அடுத்தாற்போல் என்ன செய்வது என்பதை



யோசித்தான் முருகையன். யோசித்துக் கொண்டிருக்கும்போதே பசி அவன் அடி வயிற்றைச் சுருட்டி இழுத்தது. இவ்வளவு அதிகமாக அவனுக்கு இதற்கு முன்பு பசித்ததில்லை. ரிக்ஷா இழுத்தால் அதிகமாகப் பசிக்கும் போலும்.

அவனுக்குப் பசித்தவுடன் மற்றவர்களின் பசியும் அவன் நினைவுக்கு வந்தது. 'முனியாண்டிக்கு மட்டிலுந் தான் ஆஸ்பத்திரியில் உணவு கொடுப்பார்கள். அவனுடைய மனைவிக்கும் இப்போது பசிக்கும்; குழந்தைகளுக்கும் பசி யெடுக்கும்; அவர்கள் என்ன செய்வார்கள்? அடுத்த வீட்டுக்காரர்கள் மட்டுமென்ன, முனியாண்டிக்கு உடல் நலமடைந்து அவன் சம்பாதிக்கும் வரையில் அவன் குழந்தைகளின் பசியைப் போக்குவார்களா? அவர்களால்தான் அது முடியுமா?'

''நீ இங்கேயே இருந்து முனியாண்டியைப் பார்த்துக் கொள்; நான் சாயங்காலம் வருகிறேன்'' என்று சொல்லி விட்டு, வெளியில் வந்தான் முருகையன்.

அப்போது நடுப் பகல். அடித்த வெய்யிலில் தார் ரோடு உருகி வழிந்து கொண்டிருந்தது. ரிக்ஷாவை வைத்த இடத்துக்கு வந்து பார்த்தான். அதன் அருகில் ஒரு பருமனான மனிதர் நோய் வாய்ப் பட்ட ஒரு பெண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நின்றார். குனிந்து ரிக்ஷாவை எடுத்துக்கொண்டு நகரப் போனான் முருகையன்.

''இந்தாப்பா, உனக்காகத்தான் நின்னுக்கிட்டிருக்கேன்; கண்ணு தெரியலே?'' என்று கேட்டார் அந்த இரட்டைநாடிக்காரர்.

தனக்காகவும் ஒருவர் இருக்கிறாரா என்று ஆச்சரியத்துடன் அவரைப்பார்த்தான் முருகையன். ''திரும்பிப் போறதுக்கு ஆள் ஏதும் இருக்கா?'' என்று கேட்டார் அவர்.

''ஓ! அதுவா?...இல்லிங்க, இல்லிங்க!'' என்றான் அவன்.

''மௌண்ட் ரோடுக்கு என்ன கேக்கிறே....?''

அப்போதுதான் முருகையனுக்குத் தான் ஒரு அசல் ரிக்ஷாக்காரனாக மாறி விட்டது தெரிந்தது. வேஷம் போட்டாகிவிட்டது. அரங்கத்தில் ஆடினால் பலனும் கிடைக்கும். ஆடிப் பார்க்கத் துணிந்து விட்டான்.

''என்னப்பா யோசனை பண்ணறே? ஆளோட எடையைக் கணக்குப் போடறியா?'' என்றார் இரட்டை நாடிக்காரர்.

தம்முடைய பருமனைக் கண்டு அவன் தயங்குவதாக அவருக்கு எண்ணம்.

''அதெல்லாம் இல்லிங்க; நீங்க கொடுக்கறதைக் கொடுங்க!''

''அடேயப்பா, நீ பொல்லாத ஆள் அப்பா!'' என்றார் அவனை முன்பின் கண்டவர்போல். ''முன்னாலே இப்படிச் சொல்லுவே! அப்புறம் ரிக்ஷாவை விட்டுக் கீழே இறங்கிட்டா, காசுபத்தாதுன்னு மடியைப் புடிச்சு இழுத்துக்கிட்டுப் பெரிசா வம்பு பண்ணுவே. நான் கண்டிப்பான ஆள்!''

அந்தக் கண்டிப்பான ஆளிடம் கண்டிப்பாக எவ்வளவு கேட்பதென்று முருகையனுக்குத் தெரியவில்லை.

''ஒரு ரூபாய் கொடுங்க!'' என்றான் முருகையன் மெதுவாக.

''நான் கண்டிப்பான ஆள்.-முக்கால் ரூபா இஷ்டமா?''

''சரிங்க!''

அந்த முக்கால் ரூபாய்க்காரர் முக்கால் யானையின் கனமிருந்தார். முக்கி முனகிக் கொண்டே வண்டியை இழுத்தான் முருகையன். பாலத்தின் மேட்டில் ரிக்ஷாவை இழுத்தபோது அவனையும் சேர்த்து இழுத்துக் கொண்டு பின்னால் ஓடும் போலிருந்தது. முத்துமுத்தாக வியர்வைத் துளிகள் உதிர்ந்தன. சட்டை முழுவதும் நனைந்து விட்டது.

''ஏம்பா, ஒண்ணும் வேகத்தைக் காணுமே?'' என்று சலித்துக் கொண்டார் மேலே இருந்தவர். கீழே இருந்தவனோ கீழே விழுந்துவிடுவான் போல் இருந்தது.

மௌண்ட் ரோடு என்று சொல்லியவர் அவனை அங்குமிங்கும் திரும்பச் செய்து சிந்தாதிரிப் பேட்டைக்கு வந்து சேர்ந்தார். அவரைக் கொண்டுபோய் வீட்டில் சேர்க்கும் வரையில்தான் முருகையனுக்கு மூச்சு இருந்தது. கையில் காசை வாங்கிக் கொண்டு திரும்பவும் ரிக்ஷாவுடன் சிறிது தூரம் வந்தான். தலையைச் சுற்றியது. ஓர் ஓரமாக அதை நிறுத்தி விட்டு, அதற்குள்ளேயே சுருண்டு விழுந்தான். கண் இருட்டிக் கொண்டு வந்தது. காது கேட்கவில்லை. எங்கேயோ வானத்தில் மிதப்பது போன்ற ஓர் உணர்ச்சி.--இதற்குத்தான் பசி என்று பெயரா?

எவ்வளவு நேரம் இப்படிக் கிடந்தானோ தெரியாது. தெருவில் குறுக்கும் நெடுக்கும் போகிறவர்களுக்கு அவனைக் கவனிக்கவே நேரமில்லை. பிறகு, கண்களைத் திறந்தான். அருகில் ஒரு தேநீர்க் கடை இருப்பது தெரிந்தது. கண்ணெதிரில் தென்பட்ட ரொட்டியைச் சுட்டிக் காட்டினான். சாப்பிட்

டான். தண்ணீர் குடித்தான். தேநீரும் பருகினான்.

சிறிது சிறிதாகக் கண்கள் பளிச்சிட்டன; காதுகள் கேட்டன; வாயால் பேசவும் முடிந்தது. நாலணாவைக் கொடுத்து விட்டு அதே இடத்தில் சற்று உட்கார்ந்தான். பசியும் களைப்பும் தீர்ந்தவுடன், திடீரென்று சுற்றுப்புற உலகம் சுறுசுறுப்பும் குதூகலமும் நிறைந்ததாக அவனுக்கு மாறி விட்டது. கையில் மீதமிருந்த எட்டணாவைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். காசுக்குத்தான் எவ்வளவு வலிமை இந்த உலகத்தில்!

''ரிக்ஷா யாரப்பா?''

கேட்ட மனிதரை ஏறிட்டுப் பார்த்தான். ஆள் ஒல்லியாக இருந்தார்.

''ஏன், நான்தான்!''

''மந்தைவெளிக்கு வர்ரியா?''

''ஒரு ரூபா கொடுத்தா வர்ரேன்.''

''வா, வா!'' என்று சொல்லிக் கொண்டே வண்டியில் உட்கார்ந்தார். மொத்தமாக ஒரு ரூபாய் கிடைக்கிறது என்ற மகிழ்ச்சியில் ஓடிப் போய் ரிக்ஷாவைத் தூக்கினான் முருகையன். மந்தைவெளிக்குச் சென்றவுடன் அவன் கையில் ஒன்றரை ரூபாய் இருந்தது. பிறகு, குடிசையில் வண்டியை விட்டுவிட்டு, ஆஸ்பத்திரிக்குப் போக நினைத்தான். திரும்பும் வழியில் இன்னுமோர் எட்டணா கிடைத்தது.


அடுத்த வீட்டில் குழந்தைகளைச் சென்று பார்த்தான். அந்த வீட்டுக்காரியிடம் முனியாண்டியின் மனைவி அரிசியைக் கொடுத்து விட்டுப் போயிருந்தாளாம். அதனால் குழந்தைகளின் ஒரு வேளைக் கவலை தீர்ந்தது.

உடையை மாற்றிக் கொண்டு 'டௌன் பஸ்'ஸில் ஆஸ்பத்திரிக்குச் சென்றான். முனியாண்டிக்கு இப்போது சுய நினைவு வந்திருந்தது. முருகையனின் இரு கரங்களையும் பற்றி அப்படியே கண்களில் ஒற்றிக் கொண்டான். அந்தக் கண்களில் வடிந்த நீர் முருகையனின் கரங்களை நனைத்தது.

''நீங்க இப்படிச் செய்யலாமுங்களா?'' என்று பேசி விட்டு, முனியாண்டி தேம்பித் தேம்பி அழுதான்.

''நீ பேசினால் எனக்குக் கோபம் வரும் முனியாண்டி!'' என்றான் முருகையன்.

பிறகு சிறிது நேரம் அவனருகில் உட்கார்ந்திருந்து விட்டு, குழந்தைகள் கலகலப்பாக இருப்பதையும் சொல்லிவிட்டு, அவன் மனைவியிடம் ஒன்றரை ரூபாய் பணத்தைக் கொடுத்தான். அந்தப் பணம் எப்படிக் கிடைத்ததென்று அவன் சொல்லவில்லை.



''எல்லாக் கிரகங்களும் ஒரே வீட்டிலே சந்திக்கப் போகுதாம்!''

''ஐயையோ! இது என்ன ஆபத்து!''

''அட, நீ ஒண்ணு! எல்லாக் கிரகங்களும் ஏதோ உங்க வீட்டிலே சந்திக்கப்போகிற மாதிரி நீர் ஏன் ஐயா அலறுகிறீர்?''

''நீ வீட்டுக்குப் போய்க் குழந்தைகளைப் பார்த்துக்கொள். நான் இங்கேயே முனியாண்டியுடன் தங்கி விடுகிறேன்'' என்று முனியாண்டியின் மனைவியிடம் கூறினான்.


முனியாண்டியின் மனைவிக்கோ அங்கு கணவனையும் தனியாக விடுவதற்கு மனமில்லை; குழந்தைகளையும் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

முனியாண்டி, இரவில் தனக்கு யாருமே துணைக்கு ஆள் வேண்டாம் என்றும் ஆஸ்பத்திரியில் மற்றவர்கள் அங்கு தங்குவதை அனுமதிக்க மாட்டார்கள் என்றும் கூறினான்.

''இவ கொஞ்ச நாழி இங்கே இருந்திட்டு வரட்டும். நீங்க போய் உங்க பிழைப்பைக் கவனிச்சுப் பாருங்க.—சாயங்காலம் ஆயிடுச்சே, இன்னும் வியாபாரத்துக்குப் போகலியா?''

முருகையனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. நடை பாதை வியாபாரம் முதல் நாளே பறிபோய் விட்டது என்பது முனியாண்டிக்கு எப்படித் தெரியும்?—அதை நினைவூட்டியவுடன் முருகையனால் முதல் நாள் நிகழ்ச்சியைப் பற்றி ஆத்தி

இந்தக் கதையில் வரும் ஒரு காட்சியைத்தான் மேலட்டையில் வண்ண ஓவியமாக வழங்கியிருக்கிறார் ஓவியர் வினு.



''ஓய்! இருப்யா எங்கே போறே?''

''செவ்வாய்கிரகத்துக்குப் போறேன்.''

''கொஞ்சம் இருந்து பிப்ரவரி மாதம் போங்க. அப்ப எல்லாக் கிரகமும் ஒண்ணு ஒரே இடத்துக்கு வரதாம்...அப்பப் போனும் எல்லாக் கிரகத்தையும் பார்த்து விடலாம்!''

ரப் படாமல் இருக்க முடியவில்லை. 'நடை பாதையில் உழைப்பது, பிழைப்பது, குடியிருப்பது எல்லாமே குற்றங்கள்தான். ஆனால், நூறுபேர்களுக்குக் கிடைக்கும் பலனை ஒருவன் அநுபவிப்பது, நூறுபேர்கள் வாழும் வீட்டில் ஒருவன் வாழ்வது எப்படி நியாயம் ஆகும்?—பெரிய குற்றங்களையெல்லாம் நீக்காமல் அதன் விளைவுகளுக்குச் 'சிறிய குற்றங்கள்' என்ற பெயரைச் சூட்டிக் கண் துடைப்பு வேலைகள் செய்கிறார்கள் போலும்!'

குடிசைக்கு முருகையன் திரும்பும் வழியில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பெரிய பெரிய மாளிகைகளைப் பார்த்தான். சுதந்திர தினத்துக்காக எங்குமே விளக்குகளால் நகரத்தை அலங்கரித் திருந்தார்கள். தன் தாழ்வாரத்திற்குள் நுழைந்து ரிக்ஷாவைப் பார்த்தவுடன் அவனுக்கு முனியாண்டியின் நினைவு வந்துவிட்டது. தன் சுதந்திர தினப் பரிசாக அவனுக்கு ஒரு ஜோடிச் செருப்புக்கள் வாங்கிக் கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

ரிக்ஷாவின் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு முருகையன் ரிக்ஷாவோடு தெருவுக்கு வந்தான். மெதுவாக வழியில் போவோர் வருவோரை யெல்லாம் ஏறிட்டுப் பார்த்தான். 'ஏய் ரிக்ஷா!' என்று யாராவது வாய்விட்டுக் கூப்பிட மாட்டார்களா? கைதட்டித் தன்னை அழைக்க மாட்டார்களா? வேலை வாங்கிக் கொண்டு கூலியைக் கொடுக்க மாட்டார்களா?

ஏதோ ஒரு விளக்குக் கம்பத்துக்கு அருகில், டவுன் பஸ்ஸுக்காகவோ, வாடகைக் காருக்காகவோ காத்துக் கொண்டு சிலர் நின்றார்கள். அவர்களை ஏறிட்டுப் பார்த்தபோது, அவர்களில் ஒருத்தியின் முகத்தைக் கண்டவுடன், அவனுடைய நெஞ்சு 'திக்'கென்று நின்று விட்டது. சித்திராவின் சொந்தக் கார் எங்கே? அவள் ஏன் இங்கு நிற்கிறாள்?...

ஒரே ஓட்டமாகத் தலையைக் கீழே குனிந்துகொண்டு, ஓடி மறையத் துடித்தான் முருகையன். திடீரென்று கிளம்பினான். ஆனால், தலையிலடிப்பதுபோல் அவள் குரல் கேட்டது.

''ஏய் ரிக்ஷா!''

பதிலளிக்காமல், குனிந்த தலையை, மேலும் குனிந்து கொண்டு, அங்கமெல்லாம் பதற, மந்திரச் சொல்லால் கட்டுப் பட்டவன்போல் அவன் நின்றுவிட்டான். திரும்பிப் பார்க்காமல் நின்றான்.

ஒன்றுமே பேசாமல் அவள் ஏறிக் கொண்டாள்.

வாடகை எவ்வளவென்றுகூட அவள் கேட்கவில்லை.

''கடற்கரைக்குப் போ!''

முருகையனுக்கு அந்த வேளையில் தான் இந்த உலகமே வெடித்துத் தன்னை விழுங்கிவிட வேண்டுமென்று தோன்றியது. மெதுவாக ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு நடந்தான். கடற்கரைக்கு வரும் வரையில் அவன் எப்படித்தான் எந்த விபத்துக்கும் ஆளாகாமல் வந்தானோ தெரியாது. தெருவின் ஒருபுறம் கட்டடங்கள்; மறுபுறம் அடர்ந்த மரங்கள்.—மனித நடமாட்டமில்லாத ஓரிடத்துக்கு வந்தவுடன்,—''நிறுத்து!'' என்று கத்தினாள் அவள்.

அவன் நிறுத்தினான்; அவள் கீழே குதித்தாள். திடீரென்று அவனுக்கு முன்னால் வந்தாள். வாள் வீச்சைப் போன்ற அவள் கைவீச்சு, அவன் தலையிலிருந்த குல்லாயை அகற்றியது. ''எத்தனை நாளாக இந்த வேலை? உங்களுக்கு வெட்கமில்லை?'' என்றாள். (தொடரும்)





"இவனைத் தெரியுமா உங்களுக்கு? இவன்தான் கந்தன் — காட்டுச் சிறுவன் கந்தன். கானகத்து மிருகங்களெல்லாம் இவனது நண்பர்கள். அவைகளின் இதயத்தை அறிந்தவன் இவன்.

"இவனது குரலைக் கேட்டதும் துள்ளி ஓடி வரும் புள்ளி மான். முன்னங்கால்களில் பழத்தைப் பிடித்துக் கொண்டு அழகாக உட்கார்ந்து சுவைக்குமே அணில், அது இவன் தோளை விட்டு இறங்காது. முயல், கிளி, குரங்கு எல்லாமே கந்தனின் உத்தரவை எதிர்பார்த்து அன்புடன் இவனைச் சூழ்ந்து நிற்கும். இந்த அன்பினால் இவன் சாதித்த காரியங்கள்தான் எத்தனை?



"பவழத் தீவிலேதான் கந்தனின் நட்பு எனக்குக் கிடைத்தது. அடேடே! என்னைப் பற்றியே இன்னும் உங்களுக்குச் சொல்லவில்லையோ? நான்தான் ஆனந்தன். மங்கள துர்க்கத்தின் மன்னர் மஹீபாலரின் ஒரே மகன் நான். பகையரசன் சூலபாணியிடம் சிறைப்பட்டிருந்த தந்தையை மீட்கப் பவழத் தீவுக்குச் சென்றபோதுதான் கந்தன் என் தோழனானான். நான் மேற்கொண்ட காரியத்தில் எனக்கு எத்தனையோ அபாயங்கள். சூலபாணியின் சூழ்ச்சிகள் அத்தனையையும் தன் கானகத்துத் தோழர்களின் உதவியால் தவிர்த்து, துன்பத்தில் எனக்குத் தோள் கொடுத்து வெற்றியையும் தேடிக் கொடுத்தவன் இந்தக் கந்தன்தான். அந்தக் கதைகளையெல்லாம் நான் உங்கள் **வாண்டு மாமா**விடம் சொல்லியிருக்கிறேன். அவர் உங்களுக்கு அதையெல்லாம் தொடர்ந்து சுவைபடச் சொல்லப் போகிறார்.

"படிக்கப் படிக்கத் திகட்டாமல் 'மேலே என்ன, 'மேலே என்ன?' என்று ஆர்வத்தைத் தூண்டும்....




பவழத் தீவு

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.









Λ சிவாஜி கணேசன் நாடக மன்றத்தார் பம்பாய் பாரதி கலாமன்ற நாடக விழாவில் மூன்று நாடகங்களை நடித்துச் சபையோரின் பாராட்டுதல்களைப் பெற்றனர். மகாராஷ்டிர முதன் மந்திரி வீரபாண்டிய கட்ட பொம்மன் நாடகத்துக்குத் தலைமை வகித்து, பாரதி கலா மன்றத்தின் சார்பிலே நடிகர் திலகத்துக்கு வெள்ளிப் பூக்கூடை யொன்றை வழங்கினார். முதன் மந்திரிக் கருகில் பாரதி கலா மன்றத் தலைவர் ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ணனையும் காணலாம்.

< பெரம்பூர் தென்னிந்திய ரயில்வே டெபுடி சீப் மெகானிகல் இன்ஜினியர் திரு வி.எஸ். ராமசுவாமி அவர்களின் புதல்வி குமாரி ராதாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் டிசம்பர் 8-ந் தேதி சென்னை குழந்தைகள் தியேட்டரில் விமரிசையாக நடைபெற்றது. அமெரிக்க கான்சல் ஜெனரல் டாக்டர் தாமஸ் டபிள்யூ. சைமன்ஸ் இந்நாட்டிய வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.


பர்மாஷெல் திரு சத்தியமூர்த்தி அவர்களின் புதல்வி சௌ. சகுந்தலாவுக்கும் திரு கே. வேங்கடாச்சாரிக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

V

திரு மலையப்பன் அவர்களின் புதல்வி சௌ. ராஜலக்ஷ்மிக்கும் திரு வேங்கடராமனுக்கும் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது.

V





அன்பே ஆரமுதே



அத்தியாயம் முப்பத்தொன்பது

சந்திராவின் நிலை கண்டு டொக்கி பரிதாபப்பட்டாளல்லவா? டொக்கியே தொடர்ந்து, ''அவர் அப்புறம் அங்கே வரவில்லையாமா ?'' என்றுன்.

''எங்கே ?'' என்று வியப்புடன் கேட்டார் அனந்தசாமி.

''சந்திராவைப் பார்க்க.''

''நான் என்னத்தைக் கண்டேன்?''

''நீ 'பாவம்' போடுகிறமாதிரி என் மூக்குமேல் விரல் வைக்கணும்போலிருக்கிறது'' என்றுள் ருக்மிணி, டொக்கியைப் பார்த்து.

''எதுக்கு மாமி?''

''ஆமாம். சற்று முன்னுடிதான் ஏதோ சந்திராவாம், அன்று மாமாவோடு பேசிக்கொண்டிருந்தாள் என்றுய். இப்பொழுது பாவம் என்கிறுய், 'அவர்'

என்று வேறு யாரையோ பற்றிப் பேசுகிறாய்!''

''அதிருக்கட்டும். நானும் இத்தனை நேரம் கேட்க வேண்டாம் என்றிருந்தேன். நான்தான் ஏதோ சொன்னேன். நீங்கள் ஏன் அந்தப் 'பாவத்'தைப் பற்றி இப்படிக் கிண்டிக் கிண்டி என்னை மடக்குகிறீர்கள்? உங்களுக்கே அந்தச் சந்திராவைத் தெரியும்போலிருக்கிறதே'' என்றான் டொக்கி.

ருக்மிணி அதற்கு ஒரு விநாடி பதில் சொல்லவில்லை. பிறகு 'இவன் என்ன இத்தனை பொல்லாதவனாக இருக்கிறான்!' என்று புருவத்தை ஒரு தடவை உயர்த்தி, சிரிக்கவும் சிரித்துவிட்டு, ''சரி, நான் போய்ச் சாப்பாடு கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே அறையை விட்டு வெளியே போய், படியிறங்கி விட்டாள். டொக்கிக்குச் சிறிது முகம் தொங்கிற்று.

''என்னைப் பார்த்தால் பட்டிக்காட்டுக் களை சொட்டுகிறது. இல்லையா மாமா!''

''இது என்ன திமர் என்று உனக்குச் சந்தேகம்?'' என்றார் அனந்தசாமி.

''இல்லை. உங்களைப் பார்க்க வருகிறவர்கள் நாகரிகமாக இருக்கிறார்கள். நான் ஒன்றும் யோசிக்காமல் என்ன பேசுகிறது, கூடாது என்று தெரியாமல வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்கிறேன். அவர்கள் என் சிண்டைப் பிடித்து ஆட்டி விடுகிறார்கள்.''

''அப்படி ஒன்றும் நேர்ந்து விடவில்லையே இப்போது?''

''நீங்கள் சொன்னால் போதுமா? அன்றைக்குச் சந்திரா இருக்கும்போது என்னமோ சொல்லப் போய், அவள் என் வாயைப் பிடுங்கி விட்டாள். இன்றைக்கு இந்த மாமி இருக்கும்போதே என்னமோ 'பாவம்' என்று ஒரு வார்த்தை சொல்லப் போய் அது பெரிதாக வளர்ந்து விட்டது.''

''ஒன்றும் வளரவில்லையே.' நீ சொல்கிறாற் போல் உன் சிண்டைப் பிடித்துக் கொள்ள வில்லை யாரும். கை ஓங்கியும் விடவில்லை.''

''என்னமோ ஜாக்கிரதையாகப் பேச வேண்டும் இனிமேல். சந்திராவை இந்த மாமிக்குத் தெரியுமா?''

''சந்திராவின் வீட்டில்தான் பதினைந்து நாட்களாகத் தங்கி யிருந்தாள் ருக்மிணி.''

''பார்த்தீர்களா? எந்தச் சந்திரா என்றான். ஒன்றுமே தெரியாதது போல் என்னிடம் பேசினாளே.''

''வேடிக்கைதானே!''

''நல்ல வேடிக்கை மாமா. சரி, உங்கள் உடம்பு நன்றாகத் தேவலை, இல்லையா?'' என்றான் டொக்கி.

''நன்றாகத் தேவலை. அதிகம் நடக்க முடியவில்லை. அவ்வளவுதான்.''


''சரி, நான் போய் வரட்டுமா?.......சௌகரியப்பட்டால் வீட்டுக்கு வாருங்களேன்....''

''நீயும் என்ன ரங்கன் மாதிரி முன்மேல் நிற்க ஆரம்பித்து விட்டாய்.''

''எனக்குப் பயமா யிருக்கிறது மாமா இந்த ருக்மிணி அம்மாளைப் பார்க்க. இவர், சந்திரா — எல்லாரும் நன்றாகப் படித்தவர்கள். நான் சினிமாக்காரி. தெருவிலே சுற்றுகிற பொறுக்கிகள், போக்கிரிகள் இவர்கள் தான் எங்களைப் பார்த்துப் பிரமித்துப் போய் வாயைப்



தி. ஜானகிராமன்



பிளந்து கொண்டு நிற்பார்கள். அந்த வாயையும் சிட்டி யடிக்கத்தான் மூடுவார்கள். இந்தமாதிரிப் படித்தவர்கள், வெறும் நூல் புடவையைக் கட்டிக் கொண்டே அழகாய் இருக்கிறவர்களைப் பார்த்தால் எங்களுக்குப் பயமாக இருக்கிறது.''

''எங்களுக்கா! சினிமாவில் நடிக்கத் தயார் பண்ணிக் கொள்ளும்போதே இந்த வெறுப்புத் துவேஷம், அபிமானம் எல்லாம் வந்து விட்டதே உனக்கு?''

''அபிமானம் இல்லை மாமா, அன்றையிலிருந்து எனக்கு இப்படித்தான் இருக்கிறது.''

அனந்தசாமி புரிந்து கொள்ள முயல்வதைப் பார்த்து, ''அன்றையிலிருந்து மாமா! அப்பாவோடு நீங்கள் கடற்கரைக்குப் போனீர்களே....'' என்று இழுத்தாள்.

''ஒன்றையும் திரும்பிப் பார்க்கக் கூடாது என்று அன்றைக்கே உன்னிடம் சொன்னேனே.''

தலையைக் குனிந்து கொண்டாள் டொக்கி சிறிது நேரம். சற்றுக் கழித்து, ''இவர்களுக்கு என்னைத் தெரியும், ரங்கனைத் தெரியும். நான் எதற்காக இங்கேயே உட்கார்ந்திருக்கிறது? போய் வருகிறேன் மாமா!'' என்றாள்.

''சாப்பிட்டாயிற்றா?''

''காலமே எட்டரை மணிக்கே சமையல், சாப்பாடெல்லாம் முடிந்துவிட்டது இன்றைக்கு.''

''இங்கு வந்து கொஞ்ச நேரம் தங்கலாம் என்றுதானே எல்லாவற்றையும் முடித்து விட்டு வந்தீர்கள்?''


''ஆமாம். ஆனால் நீங்கள் அந்த வீட்டில் இருப்பீர்கள் என்று நினைத்தோம். அதில்லையென்று இங்கே வந்தால் கௌரவமான மனிதர்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது....''

அவன் மனம் எவ்வளவு தேய்ந்து கிடக்கிறது என்று இப்பொழுதுதான் நன்கு புரிந்தது அனந்தசாமிக்கு. கதவைத் தாழிட்டு, திறக்க முடியாமல் அறையில் மாட்டிக் கொண்ட குழந்தையைப்போல் இருந்தது அவளைப் பார்க்கும் பொழுது. அந்த அவலத்திலிருந்து அந்த நெஞ்சை எப்படி மீட்பது என்று பிறிது கலங்கினார்.

''கௌரவம், பிறர் நம்மைப் பார்த்து நல்லவர்கள், கண்யமானவர்கள் என்று நினைக்கும்படி நடந்து கொள்வது — இதெல்லாம் ரொம்பச் சுலபமான காரியம். இதற்குத் தனித் திறமை ஏதும் வேண்டியதில்லை. துளி அறிவும், நல்ல பயமும் இதற்கு இருந்தால் போதும். எல்லாரும் இதைத்தான் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறார்கள். பயந்து பயந்து செத்துப் போகிறதைத்தான் பலர் கண்யம், நல்ல சுபாவம் என்றெல்லாம் மயங்கிக் கொண்டிருக்கிறார்கள். யாரும் பார்க்கவில்லையென்று தெரிந்தால் மிருகத்தை விடக் கேவலமாக நடந்து கொள்வார்கள். இந்தக் கண்ய உணர்ச்சி இல்லாமல் பகிரங்கமாக நடந்துகொள்கிறவர்கள் திருடன், துஷ்டன், விடன் என்று பேர் வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். அக்கிரமம் பண்ணுகிற வசதிகளை யெல்லாம் கொடுத்து, யாரும் உன்னைப் பார்க்க மாட்டார்கள் என்றும் சொல்லி ஒருவனை விட்டு விட்டால், அவன் அகாரியம் செய்யாமல் இருக்க வேண்டும். அதுவரையில் அவனை நல்லவன் என்று சொல்ல முடியாது. பயந்து பயந்து கொண்டு எத்தனை நாட்கள்தான் நல்லவர்களாக இருக்க முடியும், சொல்லு.''

டொக்கி பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

பாத்திர ஓசை கேட்டது. டொக்கி திரும்பினாள். ருக்மிணி பெரிய தட்டில் நாலைந்து கிண்ணங்களை வைத்து உன் திருட்டியாக இருந்த பாத்திரங்கள் அசைய அசைய நிலையை ஜாக்கிரதையாகக் கடந்து கொண்டிருந்தாள். சட்


ஆதரவுடன் சீராட்டி
ஆஸ்டர்மில்க்
பாலூட்டி . . .
OSTERMILK
உங்கள் ஆசைக் கண்மணியின் பாக்கியம்: ஆஸ்டர்
மில்க் அளிக்கும் ஆரோக்கியம். காரணம், தாய்ப் பாலுக்கு
நிகரானது ஆஸ்டர்மில்க். பரிசுத்தமான பாலிலிருந்து
தயாரிக்கப்பட்டுள்ள ஆஸ்டர்மில்க், பாப்பாவின்
பச்சிளம் ஜீரண சக்திக்கேற்பப் பிரத்தியேகமாகப்
பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. தவிர, பற்களும், எலும்புகளும்
திடவளர்ச்சிபெறுவதற்கான வைட்டமின் 'டி'யும் இரத்த
சோகை தட்டாமல் காப்பதற்கான அயச்சத்தும்
அதில் சிறப்புறச் சேர்க்கப்பட்டுள்ளன.
...தாய்ப் பாலுக்கு
நிகரானது.
இலவசம்: 'ஆஸ்டர்
மில்க் புத்தகம்'
(ஆங்கிலப் பிரதி)...
...விரிவுமிக்க, குழந்
தைப் பராமரிப்பு நூல்
...தபால் செலவுக்காக
50 ந. பைசாத் தபால்
வில்லைகள் இணைத்து
எழுதுக: 'ஆஸ்டர்மில்க்',
தபால் பெட்டி எண்
2420, சென்னை-2.

OS. 8-X51-M. TM

டென்று டொக்கி எழுந்து தலையாடும் பாத்திரங்களை யெல்லாம் வாங்கிப் பெஞ்சு மீது வைத்தாள்.

''என்கிட்ட சொல்லப்படாதா மாமி! இத்தனையையும் எப்படி எடுத்து வர முடியும்? அதுவும் மாடிப் படி ஏறி? நானா யிருந்தால் எல்லாவற்றையும் கீழே போட்டு ஜலதரங்கக் கச்சேரி பண்ணி யிருப்பேன்.''

''எனக்கு அத்தனை சங்கீத ஞானம் கிடையாதம்மா'' என்று சொல்லிக் கொண்டே ருக்மிணி பெஞ்சின் மீது தட்டை வைத்தாள்.

''மாமா! சந்திராதான் பொல்லாதவள் என்று நினைத்தேன். இவர் ரொம்ப ரொம்ப....!'' என்று ஒவ்வொரு கிண்ணத்தின் மூடியாகத் திறந்து வைத்தாள் டொக்கி.

ஏதோ புத்தகத்தை நின்றவாறே புரட்டிக் கொண்டிருந்த ராஜாங்கம் திரும்பிப் பார்த்தார்.

''இன்னும் சாப்பாடு ஆகலையா?.... டொக்கி, நீ பரிமாறேன்'' என்றார்.

''பரிமாற என்ன இருக்கு. எல்லாம் தான் ரெடிமேடா வந்திருக்கே. மாமி பல்லும் காஸ்ட்ரிக் ஜூஸும்தான் கொண்டு வைக்கவில்லை. அவை இரண்டுக்கும் வேலையே கிடையாது. அப்படிப் பிசைந்து மசித்துக் கொண்டு வந்திருக்கிறார். பல், ஜீரணம் இரண்டும் இல்லாத நீங்கள் சாப்பிடவேண்டும் இதை. அப்படியே வயிற்றுக்குள்ளே போனவுடனேயே சதையும், சத்துமா வேஷம் போட்டுக்கொண்டு விடும்'' என்று இலேசாகக் குரலை உயர்த்தி ஜாடையும், சைகையுமாகச் சொன்ன ஒவ்வொரு சொல்லும் விளங்கும்படியாக ராஜாங்கத்திடம் சொல்லி விட்டாள் டொக்கி.

ஏதோ எடுத்து வருவதற்காக, ருக்மிணி மீண்டும் நகர்ந்தபோது டொக்கி அவளைப் பார்த்துச் சொன்னாள்: ''எந்தச் சந்திரா என்று கேட்டீர்களே, சந்திராவை நன்றாக உங்களுக்குத் தெரியுமாமே!''

''தெரியாது என்று நான் சொல்லவில்லையே. இந்தச் சந்திராவோ, வேறு எந்தச் சந்திராவோ என்று தெரியாமல் கேட்டேன்.''

''உங்களோடு பேசி என்னால் ஜயிக்க முடியாது!''

''யாரும் ஜயிக்கவும் வேண்டாம், தோற்கவும் வேண்டாம். மோர் சாதத்திற்கு ஊறுகாய் வைக்க மறந்து விட்டேன். நீ கொஞ்சம் கீழே வாயேன். கொடுத்து அனுப்புகிறேன். சித்தி சாப்பிட உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கும் சாதம் போட வேண்டும்'' என்று கெஞ்சினாள் ருக்மிணி.

''இதோ'' என்று கூறிக் கொண்டே அவளோடு ஓடினாள் டொக்கி.

''ஒரு நிமிஷம்'' என்றார் அனந்தசாமி.

''என்ன?'' என்று கேட்டபடியே ருக்மிணி திரும்பினாள்.

''இந்தச் சாப்பாடு நாலு வேளைக்கு வரும் எனக்கு. வீணாக எறிய வேண்டாம். எடுத்துப் போய் விடுங்கள்'' என்று குழம்பு, ரசம், மோர் சாதங்களில் இரண்டிரண்டு கவளங்களைத்



தட்டில் எடுத்து வைத்துக் கொண்டு நகர்த்தினார் அவர்.

''இது எப்படிப் போதும்?''


''இதுவே அதிகம்.''

''கணக்குத் தப்பி விட்டதே'' என்றாள் டொக்கி.

''என்ன?''

''எட்டு வேளைக்கு வருகிற சாப்பாட்டை நாலு வேளைக்கு என்று குறைத்து விட்டீர்களே!''

''அதுதானே பார்த்தேன்'' என்றாள் ருக்மிணி.



''என்ன வருத்தமா இருக்கேள்! எட்டு கிரகம் ஒண்ணு சேரப்போவதை நினைத்தா...?''
''அட இல்லே, ஐயா! பாவம்! அந்த ஒன்பதாவது கிரகம் ஒருத்தரோடும் சேராமல் தனியா இருக்கே, ஐயா! அதை நினைத்துத்தான்!''

''என்னமோ இதற்கு மேல் சாப்பிட முடியாது'' என்றார் அனந்தசாமி.

''இதைச் சாப்பிட்டு விட்டா இப்படி மெட்ராஸ் முழுக்க நடக்கிறீர்கள்?'' என்றாள் டொக்கி.

ருக்மிணி நின்று பார்த்தாள். கடையில் கிண்ணங்கள் இரண்டை டொக்கியிடம் கொடுத்துவிட்டு, தன் கையில் இரண்டை எடுத்துக் கொண்டு நகர்ந்தாள்.

கீழே போனதும், ஊறுகாய்க் குப்பியை அவள் கையில் கொடுத்து, இரண்டு ஸ்பூன் போட்டு விட்டு உடனே கொண்டு வரும்படி சொல்லி அனுப்பினாள். டொக்கி நகர்ந்ததும், ''ஏண்டி அப்படியே கொண்டு வந்து விட்டாய்?'' என்றாள் சித்தி.

''அவ்வளவுதான் சாப்பாடாம்!''

''என்னது!''

''ஆமாம்.''

''காலேஜ் பெண்கள் கூடத் தேவலே போலே யிருக்கே. இதுக்காகவா மெனக்கெட்டு எடுத்துக் கொண்டு போனே, இவ்வளவையும்?''

ருக்மிணி பதில் பேசவில்லே.

டொக்கி திரும்பி வந்து விட்டாள்: ''நீங்கள் இன்னும் சாப்பிடவில்லேயா மாமி?'' என்று வந்தவுடன் கேட்டாள்.

''இல்லே.''

''நான் போடலாமா?''

''இதோதான் இருக்கிறதே'' என்று உட்கார்ந்து தட்டிலிருந்த மிச்சத்தைச் சாப்பிடத் தொடங்கினாள் ருக்மிணி.

சாப்பிட்டுக் கொண்டிருந்த அவயாம்பாளின் கை நின்று விட்டது. வியப்போ, திகைப்போ, குழப்பமோ—என்னவென்று புரியாத ஒரு பார்வை. கண்—கொட்டாத அகன்ற பார்வை. அந்தக் கண்கள் ருக்மிணி சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டு குத்திட்டாற் போல நின்றன. பத்து விநாடி. இருபது விநாடி .... இமைகள் மிளிர்த்தன. மூப்புக் கண்களின் மங்கல் மினுங்கிற்று. நீர் நிரம்பி நின்றது. ருக்மிணி அதைப் பார்த்தாள். சாதாரணமாக இன்னொரு கவளத்தை வாயில் போட்டுக் கொண்டாள்.

இவ்வளவையும் டொக்கியின் பார்வை அளந்து கொண்டிருந்தன.

அவயாம்பாள் கண்ணில் கட்டி நின்ற கண்ணீர் சிறுக்கென்று உதிர்ந்தது. டொக்கியின் வாய் நிற்கவில்லே.

''என்ன பாட்டி?'' என்று குழம்பிப் போய்க் கேட்டு விட்டாள்.

''சித்திக்கு அப்பா, சித்தப்பா, அக்கா — எல்லார் ஞாபகமும் வந்து விட்டது. இந்தக் கூட்டத்துக்கே சாப்பாட்டைப் பிசைந்து போட்டுக் கொடுத்தால் அதிலே அலாதி சந்தோஷம்'' என்றாள் ருக்மிணி.

அவயாம்பாள் இடது கையால் தோளில் தொங்கின புடவையை எடுத்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

''அக்கா இருந்திருந்தா அவளுக்கும் ஒரு பெண் பிறந்து, அதுவும் இரண்டு குழந்தைகளேப் பெற்றிருக்கும்'' என்று ருக்மிணி மேலும் சொன்ன பொழுது, ''போடி'' என்று சொல்லி, மீண்டும் வந்த ஒரு போக்குக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சித்தி.

''சிறுசிலேயே தவறிப் போய்விட்டாளா?'' என்று கேட்டாள் டொக்கி.


''ம்க்கும். அக்காவுக்கு அப்ப பதினஞ்சு வயசிருக்குமா சித்தி?''

''பதினேஞ்சு, பதினாறு — என்னமோ போ. ஒண்ணும் சுவாரசியமில்லே. நீ சாப்பிட்டியாடி குழந்தே!'' என்று குரல் நடுக்கம் இன்னும் நீங்காமல் கேட்டாள் அவயாம்பாள்.

''இன்றைக்கு எட்டரை மணிக்கே ஆயிடுத்து, பாட்டி!''

புதியதொரு
கான உலகுக்குக்
கட்டியம்
கூறுகிறது





மாடல் 0724 9 வால்வ் • ஆல்–வேவ்
8 பாண்டு, முழுவதும் பான்ட்ஸ்பரெட்
ஏஸி/அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)

murphy radio

மர்பி ரேடியோ

இல்லத்திற்கு இன்பமளிக்கிறது

MR. G. 131



பதார்த்தங்களை மேலும் ருசிகரமாக்குவது

சுதா

தமிழ் நாட்டில் சமையல்கலை மேன்மையுடன் விளங்குவதற்குக் காரணம் சமையல் சாதனங்களை சரிவரத் தேர்ந்தெடுப்பதில் விசேஷ கவனம் செலுத்தப்படுவதுதான். சுதாவைப் போன்ற நல்ல சாதனங்களை உபயோகித்தால்தான் உணவு ருசியும் மணமும் பெருகுகின்றதென்பதைத் தமிழ்ப் பெண்மணி நன்கு அறிந்திருக்கிறாள். பரிசுத்தமான தாவர எண்ணெய்களில் தயாரித்து விடமின் சத்துக்கள் நிறைந்த அபூர்வமான சமையல் சாதனம் இது.



SUDHA

சுதா வனஸ்பதி

A KERALA GOVERNMENT PRODUCT



கவர்ன்மெண்ட் ஹைட்ரோஜெனேஷன் பாக்டரி
கோழிக்கோடு, கேரளம்
(அரசாங்கத் துறையில் உள்ள வனஸ்பதி பாக்டரி இது ஒன்றே)

GHS-கே

விமலா - சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயையும் தயாரிப்பவர்கள்

''ஸ்வாமிகளைப் பார்க்க வந்தியா? யாருக்கு உடம்பு?''

''அம்மாவுக்கு ஜுரம். இப்பத் தேவலே. சொல்லி மருந்து வாங்கிக் கொண்டு போகலாம்னு வந்தேன். வீடு மாத்தி விட்டார்னு தெரிஞ்சுது. விசாரித்துக்கொண்டு வந்தோம்.''

சாப்பாடு முடிந்து ருக்மிணி எழுந்து கொல்லையில் தட்டைப் போட்டுக் கை கழுவி விட்டுத் திரும்பினாள்.

''மாடியிலே போய்த் தட்டை எடுத்து வரட்டுமா நான்?'' என்றான் டொக்கி.

''நான் எடுத்து வருகிறேன்'' என்று அகன்றாள் ருக்மிணி.

அவயாம்பாளின் பெயர் தெரியாத துயரம் டொக்கியை இன்னும் அசைத்துக் கொண்டுதானிருந்தது. ஈரம் உலராத அந்த இமைகளையும் கண்ணினடியில் மூப்பு சுருக்கி அதைத்த ரப்பையைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

''''இதுக்கு இப்படிக் கலங்கி, கரகரன்னு கொட்டிவிட்டீர்களே பாட்டி!'' என்றான். ''உங்க பொண்ணு ருக்மிணி மாமிமாதிரியேதான் இருந்திருப்பாள்?''

''இந்தக் கட்டையை நினைச்சுத்தான் அழுகை வந்தது. அந்தக் கட்டை கரியாகித்தான் முப்பது வருஷங்கள் ஆச்சே. அதுக்கு இப்ப என்ன அழுகை வேண்டிக் கிடக்கு?'' என்று சாதத்தைத் துளாவிக் கொண்டே ''வெறும் முண்டம். அவன் சாப்பிட்ட இலையிலே சாப்பிடற ஞாபகம் போலிருக்கு'' என்றாள்.

''என்ன பாட்டி?''

''ஸ்வாமிக்கு ரொம்பத் தெரிந்தவர்களோ நீங்கள்?''

''ஏன் பாட்டி?''

''ரொம்பத் தெரிஞ்சிருந்தா, அந்தச் சாமி வாயாலேயே கேட்டுத் தெரிஞ்சுக்கோன்னு சொல்றேன். ஏன், என்ன என்று இங்கே பாணம் தொடுத்தா நான என்னத்தைச் சொல்றது? இன்னொரு கோலம் அழுது வைக்கலாம். வேற என்னத்தைக் கண்டேன் நான்...ஹும் ஈச்வரீ.. பரதேவதே....'' என்று தண்ணீரைக் குடித்து விட்டுச் சுற்றியிருந்த பருக்கைகளை விரல் நுனியால் திரட்டி இலையில் போட்டுச் சுருட்டினாள் அவயாம்பாள்.

''நான் கொண்டு எறிகிறேன், பாட்டி!'' என்றான் டொக்கி.

''ரொம்ப அழகாகத்தான் இருக்கு. மருந்து வாங்க வந்த இடத்திலே பெருக்குகிற உத்தியோகம் வேறு?'' என்று அவயாம்பாள் இலையைக் கையில் எடுத்துக்கொண்டு எழுந்து வாசல் பக்கமாக எறியப் போனாள். அதற்குள் கொல்லைப் பக்கம் சென்று சாணம் இருக்கும் இடத்தைத் தேடிப் பிடித்து எடுத்து வந்து எச்சிலிடத் தொடங்கி விட்டான் டொக்கி.

''என்னம்மா இது! நான் வேண்டாம் என்று சொன்னேனே!''

''பரவாயில்லே பாட்டி!''

''என்னத்துக்குப் பரவாயில்லே?''

''இதுவும் எலும்பிலே அடிச்ச கைதான். மல்லிப் பூவிலே ஜோடிச்சதில்லே பாட்டி!''

''அடி அம்மாடி!'' என்று சிரித்துக்கொண்டே புறக்கடைக்கு நடந்தாள் அவயாம்பாள்.

டொக்கிக்குச் சற்று முன் அவள் மூடி மூடிக் காண்பித்த பூடகத்தை அவள் வாயாலேயே திறந்து விட வேண்டும்



என்று துடித்தது. அதற்குள் ருக்மிணி தட்டுடன் திரும்பி விட்டாள். சமையல் பாத்திரங்களை ஒழித்துப் போட்டுவிட்டு வந்தவள் ''வாயேன்'' என்று படிக்கிற அறைக்கு அழைத்துப் போனாள்.

'' உட்கார் !''

''என்ன மாமி இது!'' என்று கண்ணகலச் சுற்றுமுற்றும் பார்த்தான், டொக்கி.

''என்ன?''

''இதெல்லாம் கல்லுச்சுவரா! புஸ்தகச் சுவரா!'' அப்படித்தான் அந்த அறையிலிருந்த மூன்று பக்கமும் சுவரை ஒட்டிக் கண்ணாடிக் கதவுப் பீரோக்கள். அத்தனையிலும் புத்தகங்கள். வாசல் பக்கம் பார்க்கும் ஜன்னல் அருகில் ஒரு கட்டில். அறை நடுவில் மேஜை. நாலைந்து நாற்காலிகள்.

''இத்தனை புத்தகமுமா நீங்கள் வாசித்திருக்கிறீர்கள்?.... வாத்தியார் அறைமாதிரி இல்லே. வக்கீல் அறைமாதிரி

இருக்கிறது. இதைப் பார்த்தால்'' என்று வியப்புடன் கூறிக் கொண்டே டொக்கி எழுந்து சென்று பீரோக்களை யெல்லாம் பார்த்தாள்.

அவள் ஆச்சரியம் இன்னும் அடங்கவில்லை. ''இவ்வளவையும் நீங்கள் எப்படி வாசிக்க முடியும்?'' என்றாள் டொக்கி மீண்டும்.

''இந்த வீடு உன்னுடையது என்றால் நீ தினமும் அதிலே இருக்கிற ஒவ்வொரு கல்லு, மூலை, முடுக்கையெல்லாம் தொட்டு 'எல்லாம் என்னுது' என்று சொல்லிக் கொண்டே இருக்க வேண்டுமா? அதிருக்கட்டும்.... இப்படி வா. சந்திரா, நீ ரொம்பக் கெட்டிக்காரி, ரொம்ப அழகு அப்படி இப்படி யென்றெல்லாம் உன்னை வர்ணித்தாள். நீ ரொம்ப நன்றாகப் பாடுவாயாமே?''

''சந்திரா மாமியா சொன்னாள்? அன்றைக்கு ஒரு நாள் பார்த்ததுதானே.''

''ஒரு நிமிஷம் பார்த்தால் போதாதா? உன்னைப் பற்றித்தான் அவள் ஒரு மணி நேரம் பேசினாள் முந்தாநாள்.''

''என்னைப் பற்றி எதுக்குப் பேச்சு வந்தது?'' என்று கேட்டாள் டொக்கி.

''அனந்தசாமி மாமாவைப் பற்றிப் பேச்சு வந்தது. ஜுரம், போய்ப் பார்க்கப் போனபோது உன்னைப் பார்த்ததாகச் சொன்னாள்.''



கோபு:—என்னடா, ராமு ரொம்ப வருத்தமா உட்கார்ந்திருக்கிறாயே?

ராமு:—'நட்சத்திர ஆல்பம்'னு ஒரு புஸ்தகத்துக்காகப் பணம் அனுப்பினேன். அது என்னடான்னு வான சாஸ்திரத்தைப் பத்தினதா யிருக்கு!

''ரொம்ப நல்ல மாமி அவள்'' என்று சந்திராவைப் பாராட்டிப் புகழ்ந்தாள் டொக்கி.

''என்ன மாமி மாமி என்கிறாய்? அவள் என்ன கலியாணமாகி முப்பது வயசாகிப் பிள்ளை குட்டியெல்லாம் பெற்றவள் என்று நினைத்து விட்டாயா? சந்திரா என்றே சொல்லு.''

''இல்லை. அவர் ரொம்பப் படித்தவர். வாத்தியார் வேறு.''

''உனக்கு வாத்தியார் இல்லை. ஏன் இப்படிக் கஷ்டப்படறே—?''

''ரொம்ப அழகு அவர். இல்லையா?'' என்றாள் டொக்கி.

''அவள் உன்னைத்தான் அழகு என்கிறாள். நீ புரு புரு வென்று பிள்ளையார் எறும்பு மாதிரி இருக்கிறாய் என்றாள்.''

''சிவப்பு எறும்பு என்று சொல்லவில்லையா?''

''ஏன் அப்படிக் கேட்கிறாய்?''

''என்னைப் பார்த்தால் பிள்ளையார் எறும்பு மாதிரி சாதுவாகப் பட்டிருக்காது அவளுக்கு. சிவப்புச் சிற்றெறும்பு என்றுதான் சொல்லியிருப்பாள். என்னை ஒரே தேய்ப்பாகத் தேய்த்து நசுக்க வேண்டும் போல் வந்திருக்கும் அவளுக்கு'' என்றாள் டொக்கி.

''என்னது?''

ருக்மிணிக்கு இதைக் கேட்டு ஆச்சரியம் தாங்கவில்லை. (தொடரும்)

உஜ்ஜயினியில் காளிதாஸ விழா

ஆண்டுதோறும் நடப்பது போல் இவ்வாண்டும் உஜ்ஜயினியில் நவம்பர் 18-ந் தேதியிலிருந்து 24-ம் தேதி வரையில் ஒரு வார காலம் காளிதாஸ விழா நடைபெற்றது. 18-ந் தேதி மத்திய கலாசார மந்திரி ஹுமாயூன் கபீர் விழாவைத் தொடங்கி வைத்தார். காளிதாஸரின் ரகுவம்சத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஓவியப் போட்டியில் பரிசுகள் வழங்கப்பட்டன. விக்கிரமப் பல்கலைக் கழகத்தில் காளிதாஸர், அவர் நூல்கள் இவற்றைப் பற்றி ஒரு குழு ஆராய்ச்சி நடத்தியது; இந்த ஆராய்ச்சியை டாக்டர் வே. ராகவன் அவர்கள் தொடங்கி வைத்தார். மாலைப் பொதுக்கூட்டங்களில் காளிதாஸரைப் பற்றிச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

ஏழு நாட்களும் இரவுகளில் இந்தியாவின் பல இடங்களிலிருந்து வந்த நாடக, நாட்டிய கோஷ்டியினர் காளிதாஸ நாடகங்களை நடித்துக் காட்டினர். சென்னையிலிருந்து சென்ற டாக்டர் ராகவனின் சம்ஸ்கிருத ரங்கக் குழுவினருடைய சாகுந்தல நாடகம் இவ்வாண்டுக்குரிய காளிதாஸ விழா ஸமிதியினரின் பரிசைப் பெற்றது என்பது குறிப்பிட்டு மகிழ வேண்டிய விஷயமாகும்.



வட்டமேஜை

வோட்டுரிமைக்கே வேட்டா?

தேர்தலில் வாக்காளர்கள் யாருக்கு வோட்டளிக்கிறார்கள் என்பது ஆட்சியிலுள்ளவர்களுக்குத் தெரியக் கூடுமானால், அதைப் போல மக்களின் வாக்குரிமையைப் பாதிக்கக் கூடிய விஷயம் ஏதும் இருக்க முடியாது. ரகசியமாக வோட்டளிப்பதென்பது ஜனநாயகத்தில் மக்கள் பெற வேண்டிய ஜீவாதாரமான சுதந்திரம். நம் மக்கள் இந்த உரிமையைப் பெற்றிருப்பதாகவும் நாம் எண்ணி வருகிறோம். ஆனால் இது உண்மையல்ல என்ற பயங்கரமான விஷயம் சர்க்காரின் 'ஓட்டு அளிப்பது எப்படி?' (How to vote?) என்ற டாகுமெண்டரியிலிருந்து தெரிகிறது. ஓட்டுச் சாவடியில் லோக சபை, ராஜ்ய சபை இவற்றுக்காக அளிக்கப்படும் வோட்டுச் சீட்டுகளுக்கு இலக்கமிட்டிருக்கிறார்கள். இந்தச் சீட்டுக்களை வாக்காளர்களுக்கு வழங்கும் அதிகாரி பட்டியலில் அந்த வாக்காளருடைய பெயருக்கெதிரே வோட்டுச் சீட்டுக்களின் இலக்கங்களைக் குறித்துக் கொள்கிறார் — இப்படித் திரையில் காட்டப்படுகிறது.

இதனால், இன்னார் இன்னாருக்கு வோட்டளித்தார் என்று தெரிந்து கொள்ளலாம் அல்லவா? இவ்வாறானால், மக்கள் சர்க்காரிடம் பயமின்றிச் சுதந்திரமாக வாக்களிப்பது எப்படிச் சாத்தியமாகும்? இது மக்களின் அடிப்படை உரிமை ஒன்றிலேயே தலையிடுவதாகுமல்லவா?

பெங்களூர்
18–12–61

ஜனநாயகவாதி

எதிர்க்கட்சிக்கு இன்னொரு கவர்னர் ஜெனரல்

மதுரை தமிழ் நாடு காந்தி நினைவு நிதி வெளியிட்டுள்ள மகாத்மா காந்திஜியின் 'ஹிந்த் ஸ்வராஜ்' அல்லது இந்திய சுயராஜ்யம் என்ற புத்தகத்தின் முப்பத்திரண்டாம் பக்கத்திலிருந்து ஒரு பகுதியைக் கீழே கொடுத்திருக்கிறேன்.

இந்திய தேசிய காங்கிரஸ் போன்ற ஸ்தாபனத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற யோசனை முதன் முதலில் 1884-ல் ஸ்ரீ ஏ. ஓ. ஹியூமுக்கே பிறந்தது. அதிகாரிகளுக்கும் மற்ற முக்கியஸ்தர்களுக்கும் நல்லுறவு இருப்பதற்கு இத்தகைய ஸ்தாபனம் இருப்பது அவசியம் என அவர் நினைத்தார். 1885-ல் வைஸ்ராயாக இருந்த லார்டு டப்பரின், ஸ்ரீ ஹியூமை அழைத்து, பிரிட்டனில் மன்னர் அரசாங்கத்துக்கு எதிர்க் கட்சி ஒன்று இருப்பதைப் போல் ஆண்டு தோறும் கூடி இந்திய அரசாங்கத்தின் நிர்வாகத்திலிருக்கும் குறைகளை எடுத்துக் கூறுவதற்காகப் புது ஸ்தாபனம் ஒன்று இருக்கவேண்டும் என்று யோசனை கூறினார்.

அதோடு இந்த ஸ்தாபனத்தின் மகாநாடுகளுக்கு கவர்னர்களைத் தலைமை வகிக்க அழைக்கக் கூடாது என்றும் ஆலோசனை சொன்னார். தாம் இவ்விதம் ஆலோசனை கூறியதைத் தாம் இந்தியாவிலிருக்கும்வரையில் ரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இவருடைய யோசனையைப் பின்பற்றி முதல் தேசிய காங்கிரஸ் கூட்டம் 1885ம் வருடம் டிசம்பர் மாதம் இருபத்தி ஏழாம் தேதி பம்பாயில் நடந்தது.

எதிர்க் கட்சி அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கவர்னர் ஜெனரலாகவும் வைஸ்ராயாகவுமிருந்த ஓர் ஆங்கிலேயர் உணர்ந்திருந்தார் என்பது இதிலிருந்து தெரிகிறது. இன்று ஆட்சியிலுள்ளவர்கள் எதிர்க் கட்சி என்றாலே எதிர்ப்புத் தெரிவிப்பதை இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றுகிறதல்லவா?

விருதுநகர்
13-12-61

அ. துரைசாமி

சுவரில்லாமல் சித்திரமா?

தமிழ் நாட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் கல்வியின் தரம் குறைந்து விட்டது என்பதைக் கல்வி அமைச்சரே ஒப்புக் கொள்கிறார். இந்தத் தரக் குறைவுக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்று பல பள்ளி ஆசிரியர்கள் மனோவியாகுலமுற்றுப் போதனையில் உள்ளத்தைச் செலுத்த முடியாததுமாகும். ஆசிரியர்கள் இல்லாமல் கல்வி ஏது? பல பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு ஒழுங்கான முறையில் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. சம்பளப் பணத்தைக் குறைத்துக் கொடுத்துக் கொண்டே கூடுதலாகப் பெற்றுக் கொண்டதாக ஆசிரியர்களிடம் நிர்வாகிகள் கையெழுத்தும் வாங்கி விடுகிறார்கள். நாலைந்து மாதங்களுக்குப் பிறகு கொடுக்கும் சம்பளத்துக்கு முன்னதாகக் கையெழுத்து வாங்கவும் செய்கிறார்கள். ஆசிரியர்கள் வேறு இடத்துக்குச் செல்ல நினைத்தாலும் நிர்வாகிகள் அவர்களுடைய நற்சான்றிதழ்களைப் பறித்துக் கொண்டுவிடுகிறார்கள். இந்த அநியாயத்தை ஆசிரியர்கள் தடுக்க முயன்றால் அவர்களது ஊழியப் பதிவு ஏட்டில் தாறுமாறான தகவல்கள் எழுதப்படுகின்றன; அல்லது அந்த ஏடும் அவர்களது நற்சான்றிதழ்களும் அழிக்கப்படுகின்றன.

எனவே அந்தந்தப் பகுதிகளில் உள்ள பள்ளி ஆசிரியர்கள் பயமில்லாமல் தங்கள் குறைகளைக் கூறுவதற்குரிய முறையில் பாரபட்சமற்ற ஒரு விசாரணை நடத்த வேண்டும். இல்லாவிடில் உள்ளம் உடைந்த ஆசிரியர்களின் ஊக்கக் குறைவு காரணமாகக் கல்வியின் தரம் தானாகவே இன்னும் குறைந்து கொண்டுதான் போகும்.

மணப்பாறை
8-12-61

என். எஸ். திருமூர்த்தி

உண்மையில் கலப்படம்

சென்ற 17-12-61 கல்கி இதழில் வட்ட மேஜைப் பகுதியில் 'உண்மை விளம்பி' கூறியிருப்பது அப்படியே உண்மை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக நகை வியாபாரிகள் பத்துத் தோலா மூசை தங்கத்தில் ஒரு தோலா செம்பு சேர்த்துத்தான் உருக்குவார்கள். (எட்டு தோலாவுக்கு இரண்டு தோலா அல்ல.) உருக்குவதில் ஓரளவு சேதாரம் ஆகும். உருக்குக் கூலியும் கொடுக்க வேண்டும். உருக்கினால் நிகர எடை சவரன் கணக்கில் சுமார் 16 - 3/8 அல்லது 16½ ஆகும். இன்றைய நிலவரப்படி மூசைத் தங்கம் தோலா எடை விலை ரூ. 146. (உண்மை விளம்பி குறித்திருப்பது பத்து கிராமின் விலை.) ஆதலால் மூசையுடன் செப்பு கலந்து செய்த கலப்புச் சவரன் எடையின் அடக்க விலை சுமார் ரூ. 91 ஆகிறது. இன்றைய சவரன் விலை ரூபாய் நூறு. ஒரு சவரனுக்கு ஒன்பது ரூபாய்தான் லாபம் கிடைக்கிறது. மூசைத் தங்கத்தின் விலை மாறுபாடுகளால் இந்த ஒன்பது ரூபாய் லாபத்திலும் ஏற்றத்தாழ்வு ஏற்படுவதுண்டு. அவர் சொல்லியிருப்பதுபோல் முப்பது ரூபாய் அல்ல.

சென்னை
16-12-61

கி. வீ. லட்சுமிரசிம்மன்

குழப்பம் செய்வது யார்?

அரசியலில் புராணப் பாத்திரங்களைப் பற்றிப் பேசிக் கடவுள் தன்மைக்கே ராஜாஜி இழுக்கு தேடித் தருகிறார் என்று குன்றக்குடி அடிகளார் கூறியிருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது. ராஜாஜி மேலும் இவ்வாறு பேசினால் அருள் நெறித் திருச்சபைக் கூட்டத்தின் மூலம் ராஜாஜியின் கொள்கைக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் சொல்லியிருக்கிறாராம். பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டுள்ள குன்றக்குடி அடிகளார் அரசியலில் சம்பந்தப்பட்டுள்ளபோது, அரசியலில் ஆன்மீகத்தைக் கலப்பதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவிப்பது அதிசயமாக இருக்கிறது. அரசியல் இல்லாமல் ஆன்மீகத்தைக் காப்பாற்றலாம்; ஆனால் ஆன்மீகம் இல்லாவிடில் எத்துறையுமே செழிக்காது என்பது அடிகளார் அறிந்ததுதானே! அரசியல்வாதி சமயத்தை மறப்பது எவ்வளவு தவறோ அதேபோல் சமயப் பிரசாரகர் அரசியலில் ஈடுபடுவதும் தவறு என்பதையும் அவர் அறிய வேண்டும். 'வியாசர் விருந்து', 'சக்கரவர்த்தித் திருமகன்' மூலம் நம் நாட்டில் பக்தியைப் பெருக்கிய ராஜாஜி புராணப் பாத்திரங்களுக்கு இழுக்குத் தேடித் தரும் வகையில் ஒருபோதும் பேச மாட்டார் என்பது நாடறிந்த உண்மை.

சென்னை
7-12-61

சி. ஆர். ஸ்ரீநிவாசன்

தட்டெழுத்தர் தட்டுப்பாடு

சென்ற 9-12-61 அன்று தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள ஒரு செய்தியைக் கண்டதும் திடுக்கிட்டேன். பயிற்சி பெற்ற ஆங்கிலத் தட்டெழுத்து வல்லுநர்கள் தமிழ் தட்டெழுத்துப் பயிற்சி பெற்றதற்கான அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருந்தால்தான் சென்னை அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகம் பெற முடியும் என்பதே அச்செய்தி. இது நடைமுறைக்கு ஒவ்வாததாகும். ஏனெனில் இன்னும் சரியான முறையில் அரசாங்க அலுவலகங்களில் தமிழைத் தொடர்பு மொழியாக்கவில்லை. மேலும் தமிழ்க் கலைச் சொற்பட்டியும் சீரான முறையில் வெளியிடப்படவில்லை. ராஜ்யம் எங்கும் பெரும்பான்மையான தொழிற்பள்ளிகளில் ஆங்கிலத் தட்டெழுத்துப் பயிற்சிதான் கொடுக்கப்படுகிறது. தமிழ்த் தட்டெழுத்து இயந்திரங்கள் சரியான முறையில், விரிவான அளவில் வியாபாரத் துறையில் புழக்கத்துக்கு வரவில்லை. சென்னை, மதுரை போன்ற பெரிய இடங்களில்தான் தமிழ்த் தட்டெழுத்துப் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. எனவே, சர்க்கார் யோசனை அமுலானால் தேவையான அளவுக்கு ஊழியர்களே கிடைக்க மாட்டார்கள். இது ஒரு சில பிராந்தியத்திலுள்ளோருக்குத் தனிச் சலுகை காட்டியதாகவும் ஆகும். எனவே அரசியலார் ஆழ்ந்து சிந்தித்து, இந்த உத்தேசத்தை மாற்ற வேண்டுமென வேண்டுகிறேன்.

திசையன்விளை
11-12-61

என். சுப்பிரமணியன்

உபகார (மலிக்காத) சம்பளம்!

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குச் சிறப்புக் கட்டணம், புத்தகங்கள், துணிமணிகள் இவை வாங்க ஹரிஜன நல இலாகாவிலிருந்து உபகாரச் சம்பளம் வழங்குவது வழக்கமாக உள்ளது. அப்படி வழங்கும் தொகை உரிய காலத்தில் வழங்கப்படாமல் பள்ளி ஆண்டு இறுதியில் வழங்கப்படுகிறது. அதனால் அப்பணம் மாணவர்களின் கல்வி நலனுக்குச் செலவாகாமல் வேறு குடும்பச் செலவுக்குப் பெற்றோர்களால் செலவழிக்கப்பட ஏதுவாகிறது. சென்ற இரண்டாண்டுகளில் புதிதாக அனுமதிக்கப்பட்ட உபகாரச் சம்பளங்கள் மார்ச் மாதத்தில்தான் வழங்கப்பட்டன. இதனால் மானியம் எந்த நோக்கத்துக்காக வழங்கப்படுகிறதோ, அது ஈடேறுவதில்லை.

இவ்வாண்டு ஜூலை மாத மத்தியில் புதிதாக உபகாரச் சம்பளம் பெறுவதற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் குறித்து, நாளது வரை உத்தரவு வரவில்லை. மாவட்ட க்ஷேம நல அதிகாரிகளால் விண்ணப்பங்களைச் சரிபார்த்து உரிய காலத்தில் மானியம் வழங்க முடிவதில்லை. ஆதலால், மற்றச் சம்பளச் சலுகைகள் விஷயத்தில் கடைப் பிடிக்கும் நடைமுறையை இந்த அம்சத்திலும் பின்பற்ற வேண்டும். அதாவது, ஒவ்வொரு தகுதி பெற்ற மாணவர்களுக்கும் பள்ளி நிர்வாகிகளே பள்ளி திறந்தவுடனே உபகாரச் சம்பளம் அளிக்க வேண்டும்.

ஆத்தூர்
8-12-61

ரா. பாண்டுரங்கன்

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்யரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விவரம்

தங்கும் இடங்கள் வழக்கம்போல். மற்ற விவரங்களுக்கு எழுதவும்

ஊர்	தேதி	நேரம்
தாராபுரம்	1	காலை 8-30 to 9-30
பழனி	1	காலை 10-30 to 11-30
உடுமலைப்பேட்டை	1	மாலை 3 to 4
பொள்ளாச்சி	1	மாலை 5 to 6
பாலக்காடு	2	காலை 9 to 11
..	2	மாலை 3 to 5
கோயமுத்தூர்	3	காலை 9 to 11
..	3	மாலை 2 to 4
மேட்டுப்பாளையம்	3	மாலை 5 to 6
சத்தியமங்கலம்	4	காலை 8 to 9
கோபி	4	காலை 10 to 11
பவானி	4	மாலை 2 to 3
மேட்டூர் அணை	4	மாலை 4-30 to 5-30
ஈரோடு	5	காலை 9 to 11
திருப்பூர்	5	மாலை 4 to 5-30
திருச்சி	6	காலை 11 to மாலை 6
தஞ்சாவூர்	7	காலை 7 to 9
கும்பகோணம்	7, 17, 27	காலை 10 to மாலை 5
சீர்காழி	8	காலை 7 to 8-30
மாயூரம்	8	காலை 9 to 11
நன்னிலம்	8	மாலை 2 to 3
நாகப்பட்டினம்	8	மாலை 5 to 6-30
திருவாரூர்	9	காலை 7-30 to 9-30
விஜயபுரம்	9	காலை 10 to 11
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2 to 3-30
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 to 6-30
புதுக்கோட்டை	10	காலை 8 to 10
பொன்னமராவதி	10	காலை 11-30 to 12-30
தேவகோட்டை	10	மாலை 2-30 to 3-30
காரைக்குடி	10	மாலை 4-30 to 6
பரமக்குடி	11	காலை 8 to 10
ராமனாதபுரம்	11	மாலை 3-30 to 4-30
சிவகங்கை	11	காலை 8-30 to 10
மதுரை	11	காலை 11 to 12-30
..	11	மாலை 3 to 6
கோவில்பட்டி	12	காலை 8 to 9
திருநெல்வேலி ஜங்.	12	மாலை 3 to 5
திருநெல்வேலி டவுன்	12	மாலை 5 to 6
அம்பாசமுத்திரம்	13	காலை 8 to 9-30
தென்காசி	13	மாலை 3 to 5
ராஜபாளையம்	14	காலை 9 to 10
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை 10-30 to 11-30
பெரியகுளம்	14	மாலை 3 to 4-30
திண்டுக்கல்	15	காலை 8 to 9-30
நாமக்கல்	15	மாலை 3 to 4-30
ராசிபுரம்	15	மாலை 5-30 to 6-30
சேலம்	16	காலை 9 to 11
..	16	மாலை 3 to 5
சேலம்: செவ்வாய்ப் பேட்டை	16	மாலை 1-30 to 2-30
தருமபுரி	17	காலை 9 to 10-30
கிருஷ்ணகிரி	17	மாலை 3-30 to 5
திருப்பத்தூர் (N.A.)	18	காலை 8-30 to 10
குடியாத்தம் (N.A.)	18	மாலை 2 to 3-30
சித்தூர் (ஆந்திரா)	18	மாலை 5 to 6-30
வேலூர் (N.A.)	19	காலை 9 to 11
பெரிய காஞ்சிபுரம்	19	மாலை 3 to 5
சென்னை	20	காலை 9 to 11
..	20	மாலை 3 to 5
செங்கல்பட்டு	21	காலை 9 to 10-30
திண்டிவனம்	21	மாலை 2-30 to 4
விழுப்புரம்	21	மாலை 5 to 6
திருவண்ணாமலை	22	காலை 8-30 to 10
திருக்கோவிலூர்	22	காலை 11 to 12
கடலூர் (N.T.)	22	மாலை 4 to 5-30
சிதம்பரம்	23	காலை 9 to 10-30
விருத்தாசலம்	23	மாலை 3-30 to 5
கள்ளக்குறிச்சி	24	காலை 8-30 to 9-30
ஆத்தூர்	24	காலை 11 to 12
துறையூர்	24	மாலை 3-30 to 5
மல்லேஸ்வரம் பெங்களூர் - 3	26	காலை 9 to 11 மாலை 3 to 5

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலை H. O. கரூர்

கிளைகள் :
1. 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்
2. 2332, 5th கிராஸ், மல்லேஸ்வரம், பெங்களூர்-3

குறிப்பு: குழந்தைகளுக்குக் கட்டி வராமல் தடுக்கவும், கக்குவான் இருமலைக் குணப்படுத்துவதற்கும், தொண்டை சதை வளர்ச்சியை (TONSILS) ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்துவதற்கும் எங்களிடம் நல்ல மருந்துகள் கிடைக்கும்.



கங்கா ஜமுனா

நாத்தன்

எழில்மிகு வண்ணச் சித்திரமாக உருவாகியிருக்கும் இப்படத்தில் இயற்கைக் காட்சிகள் பார்க்கப் பரவசமுண்டாக்குகின்றன.

திரைக்கதை மிகப் பழையது. ஜமீன்தார் கதை. மலை அடிவாரத்தில் ஹரிபூர் என்னும் கிராமம். அங்கு ஏழை விதவை தன் இரண்டு பிள்ளைகளுடன் பண்பில்லாத ஜமீன்தார் அரண்மனையில் வேலை செய்கிறாள். மூத்தவன் கங்கா. இளையவன் ஜமுனா. கங்கா தாய்க்கு உதவி செய்கிறான். ஜமுனா பள்ளிக்குப் போகிறான். அரண்மனையில் அபாண்டமாகத் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டுச் சிறை சென்று அவமானம் தாங்காமல் இறந்துவிடுகிறாள் அந்த அபாக்கியவதி. கங்கா கடும் உழைப்பை மேற்கொண்டு ஜமுனாவைப் படிக்க வைக்கிறான். ஏழை ஹரிஜனப் பெண் தன்னு கங்காவின் வாழ்வில் குறுக்கிட்டுத் திரைக் கதைக்குச் சுவை யூட்டுகிறாள். ஹரிராம் என்பவன் கங்காவின் மீது திருட்டுக் குற்றத்தைச் சுமத்திச் சிறைக்கு அனுப்பி வைக்கிறான். கங்கா சிறை சென்றதும் ஜமுனாவின் படிப்பு மேலே தொடர முடியாமல் நின்றாலும் அவனுக்கு போலீஸ் இலாகாவில் வேலையும் கிடைக்கிறது. சிறையிலிருந்து திரும்பிய கங்கா கொள்ளைக்காரனாக மாறுகிறான்; தன்னுவை மணந்து கொள்கிறான். ஜமுனா போலீஸ் இன்ஸ்பெக்டராகி ஹரிபூருக்கே வந்து விடுகிறான். இறுதியில் தன்னு போலீஸ் குண்டுக்கு இரையாகிறாள்; கங்காவும் ஜமுனாவால் சுடப்படுகிறான்.

திலீப் குமார் கங்காவின் பாகத்தை ஏற்றிருக்கிறார். கதை எழுதியவரும் அவர்தான். பிரசித்தி பெற்ற நடிகராயிருந்தும், ''கங்கா ஜமுனா''வில் முதல் இடம் அவருக்கு அளிக்கும்படியாயில்லை. 'சடுகுடு' விளையாட்டில் வேண்டுமானால் அவருக்கு முதலிடம் அளிக்கலாம். உணர்ச்சியுடன் துடிக்க வேண்டிய கட்டங்களில் அவர் ஏனோ சோபிக்கவில்லை.

இக்கதையின் தலைவியாக விளங்குவது வைஜயந்திமாலா. நடிப்பிலும் இவர் தலைவியாகவே விளங்குகிறார். கள்ள மறியாப் பேதையாக வந்து, கங்காவின் உள்ளமறிந்த காதலியாகிப் படம் பார்ப்பவர்களின் உள்ளங்களிலும் நிறைந்து அற்புதமாக நடிக்கிறார் வைஜயந்திமாலா. நடனங்களிலும் குறை வைக்கவில்லை. முதலில் காணப்பட்ட பேதைமைக்கும், பின்னால் முற்றிலும் மாறுபட்டுக் காணும் உருக்கத்துக்கும் அவர் ஈடுகொடுத்திருப்பது பாராட்டுக்குரியது. கதையில் இறந்து விடும் தன்னுவின் பாத்திரம் காண்போர் மனத்தில் பதிந்து நிறைந்து விடுவது போதாதா?

ஜமுனாவின் பாகத்துக்கு நன்றாய் நடிக்க நல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் எல்லாம் பாழாகி விட்டன. நசீர்கானுக்கும் நடிப்புக்கும் வெகு தூரம். முக பாவம் என்றால் என்னவென்றே அவருக்குத் தெரியாது போலும்; பாவம்! ஜமுனாவுக்குப் போலீஸ் உத்தியோகம் கொடுப்பதற்காக, அவன் திருடனிடமிருந்து முத்துமாலையைப் பறித்து உரிமையாளனிடம் சேர்ப்பதாகக் காட்டுவது கொஞ்சங்கூடப் பொருத்தமாக இல்லை. கொஞ்சம் சிந்தித்து வேறு ஏதாவது உத்தியைப் புனைந்திருக்கலாம்.


சூழ்நிலையின் காரணமாகக் குற்றவாளியாக மாறி விட்டதாகக் காட்டப்படும் கங்கா சிறு வயதிலேயே திருட்டுக் குணமுள்ளவன் என்று நினைக்கத் தூண்டும் வகையில் கதை புனைந்திருப்பது பெருந் தவறு. கதாசிரியர் ஏனோ கவனிக்கவில்லை.

இறுதியில், கங்கா ஹரிராமின் அரண்மனைக்குத் தீ வைக்கும் காட்சி இன்னும் நன்றாகப் படமாக்கப்பட்டிருக்கலாம். அது மிகவும் சாதாரணக் காட்சியாகவே தோன்றுகிறது. ஸ்டுடியோவில் அமைக்கப்பட்ட 'செட்'டுக்குத் தீ வைப்பதாகவே யிருக்கிறது.

இயற்கைக் காட்சிகள் அற்புதம். எந்தப் படத்திலும் இல்லாத சிறப்பு அம்சமாகக் கூறலாம். காடு, மலை, பள்ளத்தாக்கு, பசும் புல் வெளி, நீர் நிலைகள் யாவும் கண்ணுக்கு விருந்தா யிருக்கின்றன. சூரியோதயக்காட்சி, சூரியாஸ்தமனக் காட்சிகளில் செக்கர் வானம் பிரமாதம்! மேல் நாட்டுப் படங்களை ஒத்த இந்த அற்புதப் படப் பிடிப்புக்காக இந்தப் படத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். குதிரை சவாரிக் காட்சிகள், ரயில் கொள்ளை, குதிரைகளும் ரயிலும் போட்டி போட்டுக்கொண்டு ஓடும் காட்சி முதலியன வெல்லாம் அருமையாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன.

கதையும் கொஞ்சம் புதுமையாக இருந்திருந்தால் ''கங்கா ஜமுனா'' ஒப்பு உயர்வற்ற படம் என்ற பெயரை நிச்சயம் பெற்றிருக்கும்.

சிறந்த படப் பிடிப்புக்காகவும் வைஜயந்திமாலாவின் நடிப்புக்காகவும் ''கங்கா ஜமுனா''வைப் பார்த்தால் பணத்துக்கு மோசமில்லை.



மணிபல்லவம்

12 - வழி இருண்டது

நான் கூறியதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் எதிரி இரண்டாவது முறையாகவும் அதைச் சொல்லும்படி அழுத்திக் கேட்கவே பெருநிதிச் செல்வருக்குக் கலக்கம் ஏற்பட்டது. 'இதை எதிராளி நம்புவானோ, மாட்டானோ' என்று நாமே பயந்தபடி சொல்கிற வார்த்தைகளை எதிராளியே இன்னொரு முறை சொல்லும்படி திருப்பிக் கேட்டு விட்டால் பொய்மையைப் படைத்துச் சொல்லியவனுக்கே தான் படைத்த பொய்யில் நம்பிக்கையும் பற்றும் குன்றிப் போய் விடுகிறது. இயல்பாக ஏற்படாமல் போலியாக ஏற்படுத்திக் கொண்ட ஆத்திரத்தினால், ''செல்வம் செல்வம் என்று நீ பறந்த பேராசை தீரும்படி உனக்கு வேண்டியதை இங்கிருந்து வாரிக் கொண்டு போகலாமே?'' என்று பொருளையும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பேசி விட்டாலும் அதே பேச்சையே இன்னும் ஒரு முறை பேசும்படி நகைவேழம்பர் கேட்டபோது பழைய கொதிப்போடும், பழைய வேகத்தோடும் பேசவரவில்லை; ஏதோ பேசினோம் என்று பேர் செய்வது போல் பேசினார்:-

''இங்கிருந்து வேண்டியதை வாரிக் கொண்டு போகலாம் என்று சொன்னேன்....''

''வேண்டியதை என்றால்......''

''எதை வேண்டுமானாலும் வாரிக் கொண்டு போகலாம் என்று சொல்கிறேன்.....''

''இன்னும் ஒரு முறை நன்றாகச் சிந்தித்து விட்டு அப்புறம் சொல்லுங்கள்...: 'எதை வேண்டுமானாலும்' என்று நீங்கள் சொல்லுகிற போது அதில் எல்லாமே அடங்கி விடுகிறது. ஒன்றும் மீதமில்லை.''



''நீ நஞ்சினும் கொடிய வஞ்சக அரக்கன். எதையும் மீதம் வைக்க மாட்டாய் என்று உணர்ந்துதான் அப்படிச் சொல்கிறேன்.''

''உணர்ந்துதானே அப்படிச் சொல்கிறீர்கள். நன்றி ஐயா நன்றி! நான் இப்போது இங்கிருந்து எனக்கு வேண்டிய மிக முக்கியமானதொரு பொருளைத்தான் வாரிக் கொண்டு போக எண்ணுகிறேன். அந்த முக்கியமான பொருள் இங்கே குவிந்திருக்கிற செல்வங்களை விடப் பெரியது. அதாவது நான் வாரிக் கொண்டு போக வேண்டிய பொருள் இதோ இங்கேதான் இருக்கிறது'' என்று உள்ளடங்கிய கொதிப்போடு சொல்லிக் கொண்டே வந்த நகைவேழம்பர் குபீரென்று எரிமலையாய்ச் சீறிப் பாய்ந்து பெருநிதிச் செல்வரின் நெஞ்சக் குழியில் கையை மடக்கி வைத்து அழுத்தினார். நெஞ்சக் குழியில் பாருங் கல்லைத் தூக்கி வைத்ததைப் போலப் பாரம் நிறைந்ததாயிருந்தது அந்தக் கை.

''நான் வாரிக் கொண்டு போக வேண்டியபொருள் இதோ இங்கேஇருக்கிறது.''

இந்த வார்த்தைகளை நகைவேழம்பர் கூறிய போது உலகம் அழிகிற ஊழியின் கடைசிக் குரல் போல் இவை பயங்கரமாய் ஒலித்தன. பெருநிதிச் செல்வரின் நெஞ்சு வெடித்துச் சிதறி விடுவதற்குத் துடிப்பது போல் அவ்வளவு பரபரப்போடு அடித்துக் கொண்டது.

''இதோ புடைத்தும், தணிந்தும் இந்த இடத்தில் மூச்சு விட்டுத் துடிக்கிறதே: இந்த உயிரை முதலில் இங்கிருந்து நான் வாரிக் கொண்டு போக வேண்டும்.''

காற்றுச் சீறிக் கடல் பொங்குகிற ஊழிக் காலத்தின் கொடுமையை நினைவூட்டுகிற சீறலின் சொல்லுருவமாய் இந்த வார்த்தைகள் மறுபடியும் நகைவேழம்பருடைய நாவிலிருந்து ஒலித்தன. இப்போது அவருடைய குரல் ஒலி முன்னைக் காட்டிலும் உரத்திருந்தது. சொற்கள் தடுமாறி உடைந்த குரலில் அவருக்கு மறுமொழி கூறினார் பெருநிதிச்செல்வர்.

''என்னிடமிருந்து நீ எடுத்துக் கொண்டு போக வேண்டிய பொருள் இதுதான் என்று உன் மனத்தில் உறுதி செய்து கொண்டு விட்டாயானால் உன்னை நான் மறுக்கவில்லை. இன்றில்லா விட்டாலும் என்றாவது ஒருநாள் இந்த உடம்புக்குள்ளிருந்து இது வாழ்வதற்குக் காரணமாயிருக்கிற விலைமதிப்பற்ற உயிர்ப் பொருளைக் கொள்ளை கொண்டு போகிறவன் நீயாகத்தான் இருப்பாய் என்று எனக்குத் தெரியும்! இது நான் எதிர்பார்த்ததுதான்.''

''அப்படியானால் மிகவும் நல்லதாகப் போயிற்று. இதை நாம் இன்னொரிடம் இழந்து விடுவோம் என்று எதிர்பார்த்து முன்பே இழப்பதற்கு ஆயத்தமாகிவிட்ட பொருளை இழப்பது வேதனைக்கு உரியதாக இராது.''

''பேசு... நன்றாகப் பேசு. உனக்குத் தோன்றியதை யெல்லாம் பேசு. இந்த மாளிகையின் செல்வப் பிள்ளையாக வளர்ந்து வளர்ந்து நான் உனக்கு அளித்த சோற்றுச் செருக்கு எல்லாம் தீருமட்டும் பேசிக் கொண்டிரு. இப்போது என் நெஞ்சை அழுத்திக் கொண்டு நிற்கிறாயே இந்த முரட்டுக் கையில் ஓடுகிற வலிமை இதேபெருமாளிகையில் தின்றுகொழுத்த வலிமை என்பதை நீ மறந்து போயிருக்கலாம். ஆனால் நான் மறந்து விடுவதற்கு இயலாது. உலகத்தில் உதவிகளைப் பெற்றவர்கள் நன்றி மறந்து போய் விடும் கொடியவர்களாயிருக்கலாம். உதவி செய்தவர்கள் அப்படிச் செய்தோம் என்பதை மறந்துவிட முடியாது.''

''இருக்கலாம். ஆனால் நன்றி பாராட்டுவதும் பழைய உதவிகளை எண்ணிக் கொண்டு புதிய கெடுதல்களுக்கு அடிமைப்படுவதும் கோழைகள் செய்ய வேண்டிய காரியங்கள்.''

''உதவியும் பயனும் தந்தவர்களைக் கொலை செய்ய வேண்டியதுதான் வீரன் செய்யும் காரியம் போலிருக்கிறது.''

''உங்கள் மனத்தை நீங்களே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வியை என்னிடம் எதற்காகக் கேட்கிறீர்களோ தெரியவில்லை. பலமுறை நீங்கள் அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறீர்கள். ஒரு காரியத்தையே நீங்கள் செய்யும்போது அது வீர தீர சாதனையாகிவிடுகிறது. அதே காரியத்தை நானும் செய்ய முன்வந்தால் அப்போது மட்டும் அதைக் கோழைத்தனம் என்கிறீர்களே; ஏன்? ஏழையின் திறமையை மட்டும் ஏன் இருட்டில் வைத்த ஓவியமாக்குகிறீர்கள்?''

இந்தக் கேள்விக்குப் பெருநிதிச் செல்வர் மறுமொழி கூறவில்லை. நகைவேழம்பரும் தமது பிடியை விடவில்லை. இருவருக்கும் இடையே அச்சமூட்டத்தக்க மௌனம் நிலவிய அந்த நேரத்தில் நிலவறைக்குள்ளே இறங்கும் படிகளில் சிலம்பொலியும், வளைகளின் ஒலியும் மெல்லக் கிளர்ந்து ஒலிக்கும்படி யாரோ நடந்து இறங்கி வருகிற ஒலி கேட்கவே நகைவேழம்பர் பெருநிதிச் செல்வரைத் தம்முடைய முரட்டுப் பிடியிலிருந்து விடுதலை செய்துவிட்டுத் திரும்பினார். வருவது யார் என்று அறிந்து கொள்ளும் ஆவலில் பெருநிதிச்

செல்வரின் கண்களும் படியிறங்குகிற பகுதியில் திரும்பின.


வானவல்லி மெல்ல அடி மேல் அடி வைத்துப் படியிறங்கி வந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின் அவளுடைய அன்னையும் பெருமாளிகைப் பணிப் பெண்கள் இருவரும் ஆக நான்கு பெண்கள் நிலவறைக்கு வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன காரியத்துக்காக அப்போது அங்கே இறங்கி வந்து கொண்டிருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், தனக்கு ஒருவிதத்தில் மிகவும் அருமையான பயனை விளைவிக்கத் தக்கதாக, அவர்களுடைய குறுக்கீடு அமைவதை எண்ணி எண்ணி வியந்தார் பெருநிதிச் செல்வர். அவர் வியந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த நிகழ்ச்சியில் அவரை முற்றிலும் கைவிட்டு விடுகிறாற் போல ஒரு மாறுதல் நிகழ்ந்து விட இருந்தது. நிலவறைக்குள் நின்று கொண்டிருந்த நகைவேழம்பரையும், அவரையும் பார்த்து விட்டு 'இப்போது இங்கே நுழைய வேண்டாம்' என்ற குறிப்போடு திரும்புகிற எண்ணத்துடன் அந்தப் பெண்கள் தயங்கி மேலே போக இருந்த போது பெருநிதிச் செல்வரே முந்திக் கொண்டார். ''வானவல்லி! நீயும் உன் அன்னையும் ஏன் அங்கேயே நின்று விட்டீர்கள்? நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோமே என்பதற்காக நீங்கள் தயங்கித் திரும்ப வேண்டியதில்லை. உங்களுக்கு ஏதாவது மாலையில் கோப்பதற்கு முத்துக்கள் வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். வாருங்கள். உங்களுக்கு வேண்டிய முத்துக்களைப் பொறுக்கிக் கொள்ளலாம். நகைவேழம்பர் வேறு துணையிருக்கிறார். முத்துக்களைப் பொறுக்கித் தேர்ந்தெடுப்பதில் இணையற்ற திறமையுடையவரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே யாராவது அப்புறம் பார்த்துக் கொள்ளலாமென்று திரும்பிப் போவார்களோ? வேண்டிய முத்துக்களைத் தேர்ந்தெடுக்கலாம். வாருங்கள்'' என்று நிறைந்த உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு அழைத்தார். அவர்கள் இறங்கி வந்தார்கள்.

''நகைவேழம்பரே! எங்கே உங்களுடைய திறமையைக் காட்டுங்கள், பார்க்கலாம். இவர்களுக்கு ஒளியிற் சிறந்த நல்ல முத்துக்கள் வேண்டும்''- என்று பெருநிதிச் செல்வர் அவரை முதுகில் தட்டிக் கொடுத்தபோது அவருக்கு உள்ளே சினம் கொதித்தாலும் வெளிப்படையாக விட்டுக் கொடுக்க முடியவில்லை. முத்துக்களைத் தேர்ந்தெடுப்பதற்காகக் குவியலுக்கருகே அவர் அமர்ந்து குனிந்தார். அந்தப் பெண்களும் அருகில் வந்து அவரைச் சூழ்ந்து நின்றுகொண்டார்கள்.

அரை நாழிகைக்குப்பின் அவர்களுக்கு வேண்டிய முத்துக்களைப் பொறுக்கி அனுப்பிவிட்டுப் பெருநிதிச் செல்வர் நிலவறையில் நின்றிருந்த தூணருகே அடக்க முடியாத ஆத்திரத்தோடு நகைவேழம்பர் திரும்பிப் பார்த்த போது அங்கே அந்தத் தூண்தான் நின்றது. அதனருகே நின்றவரைக் காணவில்லை. வஞ்சக எண்ணத்தோடு அவர் தூணின் மறுபுறம் ஒளிந்திருக்கலாமோ என்று கைகளை ஓங்கிக் கொண்டு தூணின் பின்புறம் பாய்ந்தார் நகைவேழம்பர். தன்னால் ஆத்திரத்தோடு தேடப்பட்டவர் அப்போது அந்த நிலவறையின் எல்லையிலிருந்தே தப்பிப்போய் விட்டார் என்று நகைவேழம்பருக்குத் தீர்மானமாகத் தெரிந்தபோது தலை போகிற வேகத்தோடு பதறிப் பறந்து நிலவறையிலிருந்து வெளியேறும் படிகளில் தாவி ஏறினார் அவர். கடைசிப் படிக்கு அப்பால் கனமான இரும்புக் கதவு அடைக்கப்பட்டு, அது அடைக்கப்பட்டதனால் அந்த இடத்தில் இருளும் கனத்திருந்தது. தாம் ஏமாற்றப்பட்டதை அவர் உணர்ந்தார். அதற்கு அப்பால் அவர் செல்ல வேண்டிய வழிமூடப்பட்டு இருண்டு போயிருந்தது.

13 - நீலநாகரின் நினைவுகள்

நீலநாகருடைய வாழ்க்கையில் சந்திப்புக்கும், பிரிவுக்கும் அதிகமான வாய்ப்புக்கள் ஏற்படவில்லை. யாரையாவது சந்திக்க வேண்டும் என்று தவித்துத் தவித்து அவர் வருந்தியதுமில்லை. அப்படித் தன்னைத் தவிக்கச் செய்தவரை எதிரே சந்தித்து அதனால் மகிழ்ந்ததுமில்லை. பிரிந்து துக்கப்பட்டதும் இல்லை. ஊசியின் நுனிபோல் வீரனுடைய வாழ்க்கைக்குக் குறி வைப்பதில் தைத்துப் பாய்கிற தன்மை ஒன்றே ஆற்றல். எஃகு போல் இறுகிய உடலும் உள்ளமும் கொண்டு நெடுங் காலமாகச் சிறந்து விளங்கி வரும் ஆல முற்றத்து மரம் போல் படர்ந்து நிமிர்ந்து தனி நின்ற பெரு வீரராகிய அவர் இப்போது முதன் முதலாக ஒரு பிரிவை உணர்ந்தார். இன்னதென்று கூற முடியாத ஏதோ ஒருணர்வு தம் மனத்தில் கலங்குவதையும் கலக்குவதை



PHILLIPS பிலிப்ஸ் ஸைக்கிள்

உங்களுக்காகவே தயாரிக்கப்படுகிறது

எழிலும், நாகரீகத் தோற்றமும் கொண்ட பளபளக்கும் பிலிப்ஸ் ஸைக்கிள்கள், உங்களைப்போன்ற இன்றைய சுறுசுறுப்புள்ள இளைஞர்களுக்காக பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படுகின்றன. உயர்ந்த ரக எஃகினாலான இந்த ஸைக்கிள்கள், உறுதியும், எவ்வித கடினமான பணிகளை சமாளிக்க வல்ல சக்தியும் வாய்ந்தவை.

70 வருட காலமாய் உலகெங்கும் புகழ்பெற்ற பிலிப்ஸ் ஸைக்கிள்கள், டி. ஐ. ஸைக்கிள்ஸாரின் மிக்க நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலையில், நுட்பமான முறையில் இப்பொழுது தயாரிக்கப்படுகின்றன.

PHILLIPS

டி. ஐ ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ்

JWT/TIC-PH-1603a

யும் அறிந்தபோது அதுதான் பிரிவாயிருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. யாருடைய பயணத்தினால் இப்போது அவருடைய மனம் பிரிவை உணர்கிறதோ அவனுடைய வாழ்வின் தொடக்க நாளிலிருந்து அவனைச் சில நாட்கள் பல நாட்கள், திங்கள்கள் காணவும் பேசவும் நேராமல் பிரிந்திருக்கிறார் அவர். அப்போதெல்லாம் அதைப் பிரிவென்று உணரவோ அதற்காகக் கலங்கவோ தோன்றியதில்லை அவருக்கு. படைக் கலப் பயிற்சியை எல்லாம் முடித்துக் கொண்டு இளங்குமரன் ஆல முற்றத்திலிருந்து அருட்செல்வருடைய தவச் சாலையிலேயே போய் வசிக்கத் தொடங்கிய போதோ, அவன் திருநாங்கூரில் தங்கியிருந்த போதோ 'காவிரிப் பூம்பட்டினத்தில் அவன் இல்லை' என்பதை மட்டும் அவர் உணர்ந்திருந்தாரே ஒழிய அதற்காகச் சிறிதும் வருந்தியதில்லை. இன்று அவனை மணிபல்லவத்துக்குக் கப்பலேற்றிய பின்போ அதற்காக வருந்தவும், அந்தப் பிரிவை உணரவும் வேண்டும் போல அவர் தவித்தார். திருநாங்கூரில் பெற்ற கல்வியோடும். அந்தக் கல்வியால் அழகு பெற்று அகமும், முகமும் ஒளிர வந்து நின்று பூம்புகாரில் பேரறிஞர்களை யெல்லாம் வென்று வாகை சூடிய வெற்றியோடும் அவன் மணிபல்லவத்துக்குப் புறப்பட்டுச் சென்ற போது தன் பக்கத்திலேயே தன்னோடு இருக்க வேண்டிய அரும்பொருள் ஒன்று தன்னிடமிருந்து பிரிந்து செல்வது போல எண்ணி ஏங்கினார் அவர். 'வாளையும், வேலையும், எடுத்து ஆள்வது தான் ஆண்மை என்று எண்ணிக்கொண்டிராதே. மனத்தை நன்றாக ஆளவேண்டும். அதுதான் ஆண்மை' என்று எப்போதோ இளங்குமரனுக்கு அறிவுரை சொல்லியிருந்தார் அவர். ஆனால் தன்னுடைய மனத்தையே ஆள முடியாமல் அவர் இப்போது தவித்தார். மூப்புக் காலத்தில் தன் ஒரே புதல்வனைப் பிரிய நேர்ந்த தந்தையின் தளர்ந்த மன நிலையோடு இருந்தார் அவர்.

இந்த இளங்குமரனுக்கும், தனக்கும், முன்பிறவித் தொடர்பு ஏதேனும் விட்ட குறை தொட்ட குறையாக இருக்க வேண்டுமென்று தோன்றியது அவருக்கு. ஆலமுற்றத்துப் படைக்கலச் சாலையில் அந்த விநாடியிலும் அவரைச் சுற்றி அவருடைய மாணவர்களாக நூற்றுக் கணக்கான இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் தன்னைத் தெய்வமாக மதித்து வணங்குகிறவர்கள் என்றும் அவருக்குத் தெரியும். ஆனாலும் அவர் மனம் இளங்குமரன் ஒருவன் மேல் தான் பாசம் கொண்டது. தான் கற்பித்த படைக்கலப் பயிற்சியையும் விட அதிகமாக மனத்துக்கு வளம் தர முடிந்த பயிற்சியை அவன் திருநாங்கூரில் பெற்றுக்கொண்டு வந்திருப்பதாகவும் அவருக்குத் தோன்றியது. அவன் மனத்தினாலும் சிந்தனைகளாலும் முதிராதவனாக உடலினால் மட்டும் வலிமை முதிர்ந்து நின்றபோது இதே ஆலமுற்றத்துப் படைக்கலச்சாலையில் தான் அவனுக்கு அறிவுரை கூற நேர்ந்த சந்தர்ப்பங்களையும் திருநாங்கூரிலிருந்து திரும்பியபின் மனத்தினாலும் சிந்தனைகளாலும் முதிர்ந்த அவனே பலருக்கு அறிவுரை கூற நேர்ந்த சந்தர்ப்பங்களையும் இணைத்து நினைத்துப் பார்த்த போது நீலநாகருடைய விழிகளில் ஆனந்தக் கண்ணீர் அரும்பிற்று. ஒரு காலத்தில் தனக்குக் கற்பித்தவற்றைக் காட்டிலும் அதிகமானவற்றைத் திருநாங்கூர் அடிகள் இளங்குமரனுக்குக் கற்பித்திருப்பதாகத் தெரிந்தும் தன்னுடைய ஆசிரியரிடம் அவருக்குக் கோபமோ, பொறாமையோ வரவில்லை.


'அவருடைய தத்துவங்கள் நிலைத்து வாழ்வதற்குத் தகுந்த உரமான மனநிலம் எது என்று தேடி உணர்ந்து அதில் அவர் அவற்றைப் பயிர் செய்திருக்கிறார்' என்று திருப்தி கொண்டாரே தவிரச் சிறிதும் பொறாமைப்படவில்லை. மாறாகப் பெருமைப் பட்டிருக்கிறார் அவர்.

'நீலநாகா! நான் இவ்வளவு காலம் தவம் செய்து கொண்டிருந்ததன் பலனை இப்போது இந்த மாணவனாக விளைந்து என்னிடம் வந்திருப்பதாக எண்ணுகிறேன். பெண்களுக்கு நல்ல நாயகர்கள் கிடைப்பது போல் கலைகளுக்கும் அவற்றை ஆள்பவர்கள் தகுதி நிறைந்தவர்களாகக் கிடைக்க வேண்டும். இந்த இளைஞனுடைய மனம் எதையும் ஆள்வதற்கு உரிய பக்குவம் பெற்றிருக்கிறது: 'நான் குருவாகக் கிடைத்ததற்கு முற்பிறவியில் தாங்கள் தவம் செய்திருக்க வேண்டும்' என்று எத்தனையோ இளைஞர்கள் என்னிடமே என்னை வியந்திருக்கிறார்கள். நானோ இளங்குமரன் என்னும் ஒரு சிறந்த மாணவன் என்னிடம் வந்து சேர்வதற்காகவே இத்தனை நாள் எனக்குள்ளேயே தவம் செய்து கொண்டிருந்ததாக உணர்கிறேன்'— என்று முன்பு எப்போதோ திருநாங்கூரடிகள் தன்னிடம் மனம் நெகிழ்ந்து கூறியிருந்ததை நினைத்துக் கொண்டார் நீலநாகர். திருநாங்கூர் அடிகள் யாரைப் பற்றியும் எதற்காகவும் மிகைபடப் புகழ்ந்து பேசாதவர். பிறருடைய தகுதிகளைக் கூடப் புரிந்து மனத்தில் நினைத்துக் கொள்வதுதான் அவருடைய வழக்

கம் அப்படிப்பட்டவருடைய சொற்களாலேயே இளங்குமரன் புகழப்பட்டதை நினைத்த போது மெய்சிலிர்த்தார் நீலநாகமறவர். தன்னைப் புகழ்வதாலும் கூட அப்படிப் புகழ்கிறவர்களை இன்பமடையச் செய்யும் பவித்திரமான பிறவியாக அவன் தோன்றியிருப்பதை இந்தச் சம்பவத்தின்போது நீலநாகர் புரிந்து கொண்டார்.

இளங்குமரன் காவிரிப் பூம்பட்டினத்துச் சம்பாபதி வனத்தில் விடலைப் பருவத்து இளைஞனாகத் திரிந்து முரட்டுச் செயல்களைப் புரிந்த போதுகூட அப்படியும் ஒரு காட்டாற்று வாழ்க்கையைச் சிறிது காலம் வாழ்ந்து பார்த்து விட்டுப் பின்பு அதில் ஒன்றுமில்லை என்று கைவிட்டு விடுவதற்காகவே அவன் அப்படி வாழ்ந்தது போலத் தோன்றியது நீலநாகருக்கு. அவனுடைய இளமைப் பருவத்து வாழ்வை எண்ணிய போது, 'பயனில்லாத காரியத்தைச் செய்வதிலும் இன்னதிலே இன்ன காரணத்தினால் பயனில்லை என்று பயனின்மையைப் புரிந்து கொள்ளுவதாகிய ஒரு பயன் உண்டு' என்று மணிபல்லவத்துக்குக் கப்பலேறிப் புறப்படுவதற்கு முந்திய நாள் அவனே வளநாடுடையாரிடம் கூறிக் கொண்டிருந்த சொற்களைத்தான் இப்போது நினைத்துக் கொண்டார் நீலநாகர். அப்படிப் பயனின்மையைப் புரிந்து கொள்வதற்கு வாழ்ந்த வாழ்க்கைதானே அந்தப் பருவத்தில் அவன் வாழ்ந்தவை என்று நினைத்து வியக்க முடிவதைத் தவிர அதைப் பற்றிப் பிழையாக எண்ணுவதற்கு வரவில்லை அவருக்கு. 'இந்த உடம்பின் வலிமையை எதிர்ப்பதற்குத் துணிவுள்ளவர்கள் யாராவது இருக்கிறீர்களா?' என்று எதிரே வருகிறவர்களை யெல்லாம் கேள்வி கேட்பதுபோன்ற உடம்போடு அப்போது மதர்த்துத் திரிந்த அதே இளங்குமரன் தான் இப்போது நாளங்காடியில் அந்தப் பட்டினப்பாக்கத்துப் பெண்ணின் மேல் இந்திர விழாக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் கடுஞ் சீற்றமடைந்து கல்லெறிய முற்பட்ட போது அந்தக் கல்லெறியை எல்லாம் தன் உடலில் தாங்கிக் கொள்ள முன் வந்து அருள் நகை பூத்தவன் என்பதை நினைத்துக் கொண்டார் நீலநாகர்.

அதே நாளங்காடியில் இளங்குமரன் பசி மயக்கத்தினால் சோர்ந்து தன் மார்பில் சாய்ந்தபோது அவனுடைய அந்தப் பொன்னுடல் தன் மேல் கற்பூர மணம் கமழச் செய்ததையும், முருந்த பட்டரை வாதத்தில் வென்று அந்த வெற்றியாலும் அகங்காரம் அடையாமல் தன்னடக்கமாக அவருக்கு மறுமொழி





கூரியவைதயும், வார்த்தைகளை அளவாகவும், ஆற்றலுள்ளவையாகவும் பயன்படுத்தி எதிரியை விநாடிநேரத்தில் வீழ்த்தி விடவல்ல சமதண்டத்து ஆசீவகர்களைக் கூட்டமாக வென்றதையும் எண்ணி எண்ணிப் பூரித்தார் நீலநாகமறவர்.

இளங்குமரனுடைய வாழ்க்கையில் வீரம் இருந்தது. அழகு இருந்தது. காதல் இருந்தது. அறிவு இருந்தது அருள் இருந்தது. இன்னும் மகாகவிகள் எவ்வெவற்றையெல்லாம் காவிய குணங்கள் என்று தேர்ந்தெடுத்துத் தலைமுறை தலைமுறையாகக் கொண்டாடிப் போற்றிக் கவிதையாகவும், காவியமாகவும் எழுதி வைத்திருக்கிறார்களோ அவையெல்லாம் அவனுடைய வாழ்வில் இருப்பதாகப் புரிந்து கொண்டார் நீலநாகர். பெண்ணின் செவிகளில் போய்ப் பொருந்திய பின்பு குண்டலங்களுக்கு அப்படிப் பொருந்திய இடத்தால் அழகு வருவதாகப் பொற்கொல்லர்கள் கூறுவதை நீலநாகர் வன்மையாக மறுத்திருக்கிறார். 'குண்டலத்தால் பெண்ணுக்கு அழகு வளர்வதாக வேண்டுமானால் சொல்லலாம். பெண்ணால் குண்டலத்துக்கு அழகில்லை' என்று முரட்டுத்தனமாக ஆலமுற்றத்துப்

பொற்கொல்லர்களிடம் பல முறை வாதிட்டிருக்கிறார் அவர். அவரே இப்போது அந்த உவமையை வேறு விதமாக மாற்றி இளங்குமரனோடு பொருத்தி நினைக்கத் தொடங்கியிருந்தார். 'இளங்குமரன் காவிய குணங்களைப் பெற்றதனால் அழகு கொண்டான் என்பதற்குப் பதிலாகக் காவிய குணங்கள் தமக்கு நாயகனாக அவனைப் பெற்றதனால் அழகு கொண்டிருக்க முடியும்' என்று மாற்றி நினைத்தார் அவர். 'நான் நினைத்துக் கொண்டிருக்கிற எண்ணங்களை விதைப்பதற்கு எனக்கு ஒரு காவிய நாயகன் வேண்டும்' என்று முதல் முதலாக இளங்குமரனைத் திருநாங்கூருக்கு அழைத்துக் கொண்டு போன போது தம்மிடம் அடிகள் கூறியது இப்போது மீண்டும் நினைவு வந்தது அவருக்கு. மலை பொங்குவதுபோல் அவருடைய உடம்பு பொருமி நெட்டுயிர்த்தது. ஆலமுற்றத்துக் கடற்பரப்பும், அதன் கோடியில் தொடுவானமும் கடலும் இணைவது போலத் தெரிந்த பொய்யழகும் அவருடைய கண்களில் தெரியாமல் மறைந்து அந்த இடமெல்லாம் இளங்குமரனே தெரிந்தான்.

'உலகத்தில் ஏதாவது ஒரு பொருளின் மேல் மட்டும் அதிகமாக ஆசைப்படுகிறவன் வீரனாக இருக்க முடியாது... நிறைந்த வீரன் என்பவன் ஒரு வகையில் துறவியாகவும் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் வென்று கைப்பற்றி நிமிர்ந்து நிற்கும் ஆற்றலைப் போல் எல்லாவற்றையும் விட்டு விடுகிற தைரியமும் வீரனுக்கு இருக்க வேண்டும். ஆசைப்பட்டுச் சேர்ப்பதற்கு ஒரு பங்கு ஆற்றல் போதுமென்றால், ஆசைப்பட்டுச் சேர்த்த பொருளையும் அதைச் சேர்க்கக் காரணமாயிருந்த ஆசையையும் விடுவதற்கு இரண்டு பங்கு ஆற்றல் வேண்டும்.' உயர்ந்த தரத்து வீரம் என்று இதைத்தான் நீலநாகர் எண்ணிக் கொண்டிருந்தார். அவருடைய அந்தரங்கமான வாழ்க்கை நோக்கமும் இதுதான். அடித்துப் பிடித்துச் சேர்த்து வைக்கும் வீரத்தைவிட 'இதை இழக்கக் கூடாது' என்கிற வகையைச்சேர்ந்த சிறந்த செல்வத்தையும் மனம் ஒப்பி இழக்கத் துணிகிற வீரன்தான் தேர்ந்தவன் என்ற குறிக்கோள் அவருடையது. ஆனால் அவராலேயே இப்போது இளங்குமரனைப் பற்றிய நினைவை இழப்பதற்குத் துணிய முடியவில்லை. அந்த நினைவுகளையெல்லாம் ஒவ்வொன்றாக மனத்தில் எண்ணித் திரும்பத் திரும்பச் சேர்த்துவைக்க முயலுகிற பேராசைக்காரராக மாறிக்கொண்டிருந்தார் அவர்.

(தொடரும்)

ஓய்வு வேளை

கோமதி சுவாமிநாதன்



ரங்கநாயகி அம்மாள் வாயில் கால் பலம் வாசனைப் பாக்குத் தூளைப் போட்டு மென்றவாறு கையில் அரைக் கவுளி துளிர் கும்பகோணம் வெற்றிலையுடன், கூடத்து நிலைப்படியைத் தாண்டி வாசல் ஹாலில் கால் எடுத்துவைப்பது அந்தச் சுவர்க்கடிகாரத்துக்கு நன்றாகத் தெரியும். பதினொரு தடவை மணி அடித்துக் கட்டியம் கூறி வரவேற்கும் பணியை அந்தக் கடிகாரம் யஜமான விசுவாசத்துடன் பல வருடங்களாகச் செய்து வந்தது. எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலும் ரங்கநாயகி அம்மாள் ஞாயிற்றுக் கிழமைகள் தவிர மற்ற நாட்களில் அந்தப் பதினொரு மணிக்கு வாசல் ஹாலுக்கு வரத் தவறியதில்லை. மிப்போர் என்பதைக் கண்டறியாத அந்தப் பழங்காலக் கடிகாரமும் அந்த வேளையில் பதினொரு தடவைகள் அடித்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கத் தவறியதில்லை.

''என்னங்க, சாப்பாடு ஆயிடுத்தா?'' என்று கேட்டுக் கொண்டே எதிர் வீட்டுப் பங்கஜம் கச்சிதமாகக் காம்பவுண்டுக் கேட்டைத் திறந்துகொண்டு ரங்கநாயகி அம்மாளை நோக்கி வந்தாள். என்னவோ இந்த நிகழ்ச்சி அகஸ்மாத்தாக நடப்பது போலத் தோற்றமளித்தாலும், கால் கடுக்கக் கடந்த இருபது நிமிஷங்களாகத் தன் வீட்டுக் கதவுக்குப் பின் மறைந்து நின்று எப்போது ரங்கநாயகி அம்மாள் வாசல் பக்கம் வருவாள் என்று வம்பு பேச நாக்கு அரிக்கக் காத்திருந்தது பங்கஜத்துக்கல்லவா தெரியும்!

''வா, பங்கஜம்!'' என்று சொல்லிக் கொண்டே ரங்கநாயகி அம்மாள் தூணில் சாய்ந்தவாறு உட்கார்ந்தாள். பங்கஜம் சற்றுத் தள்ளி எதிர்த்தாற்போல் உட்கார்ந்தாள். காம்பவுண்டுக்குள்ளிருந்த குரோட்டன்ஸ் செடிகள் காற்றில் அசைந்து கொடுத்துக் கொண்டிருந்தன.



''இப்பத்தான் சாப்பிட்டுக் கை கழுவினேன், பங்கஜம்! மிளகு ரசமும் சாதமும் யாருக்குப் பிடிக்கிறது? இந்த டாக்டருக்கு என்ன கோபமோ, வாய்க்குப் பிடித்ததைச் சாப்பிடக் கூடாது என்று பிடிவாதம் பிடிக்கிறார்'' என்று ஆரம்பித்தாள் ரங்கநாயகி. ரங்கநாயகியின் பேச்சில் டாக்டர், வைட்டமின், பல வியாதிகளின் பெயர்கள் எல்லாம் அடிக்கடி அடிபட்டுக் கொண்டேயிருக்கும். தனக்கு அந்த வியாதி இந்த வியாதி என்று அடிக்கடி சொல்லிக் கொள்வதில் அபாரப் பெருமை; அவள் கணவருக்கு ஒரு பெரிய கம்பெனியில் கணிசமான சம்பளத்தில் வேலை. ஒரே பெண் மஞ்சுளா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். சொந்த வீடு. வேறு பிக்கல் பிடுங்கல் கிடையாது. பெருமையடித்துக் கொள்ள வாயில் நுழையாத பலவியாதிகளின்பெயரைக் கன சிரத்தையுடன் சங்கீத வித்வான்கள் கிருதிகளைக் கவனம் செய்து வைத்திருப்பது போல் கவனம் செய்து வைத்திருந்தாள்: ரங்கநாயகி அம்மாள் அந்த நாளில் பள்ளிக் கூடம் போய் ஆங்கிலம் படித்ததில்லை. ஆனால் அந்த அம்மாள் பேச்சில் அடிக்கடி ஆங்கிலப் பதங்கள் விசித்திரமாக ஒலிக்கும். ஒரே மாதிரி ஒலிக்கும் வார்த்தைகளைக் கேள்வி ஞானத்தினால் அனாயாசமாகவும் அசந்தர்ப்பமாகவும் உபயோகிப்பதில் அவளுக்கு இணை அந்த வட்டாரத்திலேயே கிடையாது.

''குழந்தை மஞ்சுவை ஹாஸ்பிட்டலில் சேர்க்கணும் என்று அவர் ஒற்றைக் காலில் நிற்கிறார். நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டேன்'' என்றாள் ரங்கநாயகி அம்மாள் ஒரு நாள் அரட்டைக் கச்சேரியில்.

''மஞ்சுக்கு என்ன உடம்பு?'' என்று ஏகோபித்த குரல்கள் எழுந்தன.

''உங்களுக்கென்ன மாமி! டாக்டர் இந்திரவதனத்தின் நர்ஸிங் ஹோமிலே சேர்க்கச் சொல்லியிருப்பீர்கள். என் நாத்தனார் புருஷன்கூட அபெண்டிசிட்டைஸிற்காக.........'' என்று ஒற்றைக் குரலில் ஒலித்தாள் மத்திய மராமத்து இலாக்கா கஜானனத்தின் மனைவி ராதா.

ரங்கநாயகியின் முகம் வெளிறிப் போயிற்று. ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? மஞ்சு உடம்பைப் பற்றியா சொல்கிறேன்? படிப்பு விஷயமாக அவள் காலேஜிலேயே ஹாஸ்பிட்டலில் இருக்கணும்னு..''

அவள் பேச்சைக் கலகலத்த சிரிப்பொலி முடிக்க விடவில்லை. ''அது ஹாஸ்டல் மாமி, ஹாஸ்டல்!'' என்று கோஷ்டி கானமாகப் பதில் எழுந்தது. ரங்கநாயகியின் ஆங்கில பாஷா ஞானம் அப்படிப்பட்டது!

'மிளகு ரசம் யாருக்குப் பிடிக்கிறது?' என்று சொன்ன ரங்கநாயகி வீட்டு அஞ்சறைப்பெட்டி மிளகைப் பார்த்துப் பல மாதங்களாகிவிட்டன என்று பங்கஜத்துக்குத் தெரியாது. ரங்கநாயகி அம்மாள் சற்று முன் மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டது பருப்பு உசி

விந்த மூட்டைக்கோஸ் பொரியலும் முருங்கைக் காய் சாம்பாரும் என்று தெரியாது.

பங்கஜம் உபசாரத்துக்காக 'த்ஸ— த்ஸ—' என்றாள். "மாமி மீனிலே ஏதாவது வைட்டமின் இருக்கும். அதுதான் டாக்டர் சொல்லியிருக்கிறார்" என்றும் தொடர்ந்தாள் பங்கஜம்.

பங்கஜத்துக்கு ரங்கநாயகி வீட்டுத் திண்ணை தான் முக்கியமே தவிர ரங்கநாயகியிடம் மாத்திரம் பேசிக் கொண்டிருப்பது முக்கியமில்லை. எத்தனையோ தடவைகள் அந்த அம்மாளுடன் தனிமையில் உட்கார்ந்து ரங்கநாயகி அம்மாவின் சுயபுராணத்தைக் கேட்டுக் கேட்டுக் காது மரத்துப் போய்விட்டது. மற்றவர்கள் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தாள்.

நல்ல வேளையாக அவள் பொறுமை கரைவதற்குள் ராதா கையும் பையுமாக வந்து சேர்ந்துவிட்டாள்.

"என்ன ராதா! பையோடு கிளம்பிவிட்டாய்?" என்று வரவேற்றாள் பங்கஜம் சற்று ஒதுங்கி உட்கார்ந்து கொண்டு. ராதா உட்கார்ந்து புடவைத் தலைப்பினால் களைப்புத்தீரக் கொஞ்சம் விசிறிக் கொண்ட பிறகுதான் பேச ஆரம்பித்தாள்.

"கையோடு ஒரு வீடு பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுடுத்து, பங்கஜம். அதனால்தான் பையோடு கிளம்பினேன்" என்றாள் ராதா.



"நல்ல வீடாக இருந்தால் அப்படியே பெயர்த்துப் பையில் போட்டுக் கொண்டு உன் அகத்துக்காரரிட்டே காண்பித்து விட்டு வரலாமென்றுதான் பையோடு கிளம்பினாயா?" என்று கேலியாக ஆரம்பித்தாள் ரங்கநாயகி.

"அகத்துக்காரரிட்டே காண்பிக்கிறதாவது? நீங்கள் ராதாவைப் பார்த்து என்ன கேள்வி கேட்டு விட்டீர்கள் மாமி! ராதா ஒரு வட்டம் போட்டு அதில் அவரை உட்கார்ந்திரு என்று சொன்னாளானால், அவர் ஆபீசுக்கு லீவு லெட்டர் எழுதி அனுப்பிவிட்டு அங்கேயே உட்கார்ந்திருப்பாரே! வெளி விட்டுக் கொள்கைகளை உருவாக்குவதோ அமுல் நடத்துவதோ எல்லாம் ராதாதான். 'முத்துசாமி தெரு மூணாம் நம்பர் வீட்டிலே மூன் கட்டு எனக்குப் பிடித்திருக்கிறது' என்று ராதா சொன்னால் 'மூட்டையைக் கட்டித் தலையில் வை! நான் கொண்டு போகிறேன்' என்றுதான் சொல்வாரே தவிர, 'வாடகை என்ன?' என்றுகூடக் கேட்க மாட்டாராம். ராதா கொடுத்து வைத்தவள்தான்!" என்று கூறிப் பங்கஜம் நிறுத்தினாள்.

"ஏன்டியம்மா, அதற்குள்ளே நிறுத்திவிட்டாய்? இன்னும் கொஞ்சம்தான் பிரசங்கம் பண்ணேன்!" என்று சற்றுக் கடுமையாகவே ஆரம்பித்த ராதா சட்டென்று குரலைத் தணித்துக் கொண்டு "ஏன் பங்கஜம்! முத்துசாமி தெருவிலே மூணாம் நம்பரிலே ஏதாவது போர்ஷன் காலியிருக்கா? உனக்குத் தெரியுமா?" என்று கெஞ்சும் குரலில் முடித்தாள்.

"ஐயையோ நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன் ராதா. நீதான் ஆறு மாசம் அந்தத் தெருவிலே குடியிருந்தாச்சே; மறுபடியும் எதற்கு அந்தத் தெருவுக்குப் போகிறேன் என்கிறாய் புதுசாக ஒரு தெருவைப் பாரேன்." பங்கஜம் வார்த்தைகளில் பொடி வைத்துப் பேசினாள். ஆனால் ராதா அதைப் புரிந்து கொள்ளவில்லை.

சில செல்வந்தர்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை தங்கள் கார்களை மாற்றிக் கொண்டிருப்பது போல் ராதாவுக்கு மூன்று மாதத்துக் கொரு தடவை வீடு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அவள் எந்த வீடும் தனக்குச் சௌகரியப்படவில்லை என்ற காரணத்தால் அங்கிருந்து கிளம்புவதில்லை. மற்றவர்களுக்கு அவள் பெரிய அசௌகரியமாகப் போய் விடுவது தான் காரணம். ராதா சுபாவத்தில் நல்ல பெண்தான். நாலைந்து குழந்தைகளுக்குத் தாயாராகவும் ஆகிவிட்டாள். ஆனால் அவள் வாய் ரொம்பப் பொல்லாதது. வம்புச் சண்டைக்குப் போவது ஐஸ்கிரீம் சாப்பிடுவது போல! பிறரை எடுத்தெறிந்து பேசுவது பாதாம்கீர் குடிப்பது போல!

குப்பைமுத்துத் தெரு போர்ஷன் சௌகர்யமானதுதான். வீட்டுக்காரர்களும் நல்லவர்கள்தான். ராதா அங்கு குடி வந்து இரண்டு மாதங்கள்தான் ஆகியிருந்தன. வீட்டுச் சொந்தக்காரர்களின் ஐந்து வயதுப் பிள்ளை ஒரு நாள் மாலை மிட்டாய்க் கடைப் பகோடா பொட்டலத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு திண்ணையில் ருசி பார்த்துக் கொண்டிருந்தது. ராதாவின் பெண் பாமா அந்தப் பையனிடம் போய்க் கையை நீட்டியிருக்கிறாள். பாமாவுக்கு ஐந்தாறு வயதுதான். அந்தப் பையன் 'பகோடா கொடுக்கிறேன்! கையை நீட்டு!' என்று சொல்லிக் கையை நீட்டிய அசட்டுப் பாமாவை வெடுக்கென்று கிள்ளிவிட்டான். பாமா 'ஐயோ முறையோ' என்று அலறிக் கொண்டு உள்ளே வந்து அம்மாவிடம் புகார் செய்தாள். என்னவோ குழந்தைகள் விவகாரம் என்று ராதா சும்மா இருந்திருந்தால், அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள் குடி தூக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால் அவள் நாக்கு அவளைச் சும்மா இருக்க விடவில்லை.

"தரித்திரப் பிணங்கள்கிட்டே யெல்லாம் போய் ஏன் கையை நீட்டினாய்? உனக்கு அந்தக் கடி போதாது. இதையும் வாங்கிக்கோ!" என்று பிசாசாகப் பாமாவை நாலு அறை வைத்தாள். "இனி மேல் அற்பச் சனியனோடு போய்ப் பேசாதே!" என்று சொல்லி இரண்டு குட்டு வைத்தாள்.

வீட்டுக்கார அம்மாள் ராதாவின் அர்ச்சனையில் ஒரு வார்த்தை விடாமல் கேட்டுக் கொண்டேயிருந்தாள். அவளுக்கு ரோஷமாக இருந்தது. ''இந்தாம்மா, ராதா! கையை நீட்டிப் பிச்சைப் பகோடா கேட்டது உன் பெண் பாமா. என்னவோ குழந்தைகள் விஷயம் என்று ஒதுங்கியிருக்காமல் தரித்திரப் பிணம் அற்பச் சனியன் என்றெல்லாம் என் என் குழந்தையைத் திட்டுகிறாய்? உன் குழந்தையை அல்லவா நீ திட்டியிருக்கணும்!.... கொஞ்சம் மரியாதையாகவே பழகு அம்மா!'' என்றாள் சூடாகவே.

''இந்தாங்கம்மா. வாடகைக் காசை விட்டெறிஞ்சுட்டு உங்க வீட்டிலே குடியிருக்கோம்! மரியாதையைக் கேட்டு வாங்கறப் போலே உங்களுக்கு என்ன அப்படி யோக்கியதை வந்துவிட்டது? இந்தக் காலத்திலே கண்ட கண்டவைகளெல்லாம் சொந்த வீடு வைத்துக் கொண்டிருக்கும் பவிஷில் தலை கால் தெரியாமல் குதிக்கின்றன'' என்றாள் ராதா. குழந்தைகள் விஷயத்தை மறந்து பேச்சு குறுக்குவழியில் புகுந்து விட்டது.

வீட்டுக்கார அம்மாள் பதில் பேசவில்லை. போய் விட்டாள். அன்றிரவு சரியாக ஒன்பது மணிக்குக் கஜானனம் பாதி சாம்பார் ருசியில் ஈடுபட்டிருக்கையில் மின்சார விளக்குப் 'பட்' என்று போய் விட்டது. வழக்கம் போல் மின்சாரத் தடையாக்கும் என்று ஐந்து நிமிடம் காத்திருந்தான். ஒளி வரவில்லை. அப்போது தான் மாடியில் வீட்டுக்காரர் பகுதியில் விளக்கு எரிவதைக் கண்டான். கஜானனத்துக்கு மாலை நிகழ்ச்சிகள் பற்றிய விஷயம் ஒன்றும் தெரியாது. கையைக் கழுவக்கூட மறந்து மாடிப் படிகளில் ஏறியவாறு, ''சார்! சார்!'' என்று கூப்பிட்டான். மாடி சாருக்கு மாலை நிகழ்ச்சிகளைப் பற்றிய விரிவான அறிக்கை ஏற்கனவே மனைவியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

''என்ன சார்! விளக்கு விஷயமா? இனிமேல் இரவு ஒன்பது மணிக்கு மேலே உங்களுக்குக் கரண்டு சப்ளை செய்வதற்கில்லை. அதற்குள் உங்கள் வேலைகளை முடித்துக் கொள்ளுங்கள்'' என்று எழுந்து வராமலே பதில் சொல்லி விட்டார்

மறு நாள் காலையில் ஐந்து மணிக்கே பின்கட்டுக் குழாயடியில் குழாயுடன் பிணைத்தவாறு வீட்டுக்காரரின் எருமை மாடு கட்டப்பட்டிருந்தது. முரட்டு மாடு அது. ராதாவுக்குக் குழாயடிக்குப் போக முடியவில்லை. கஜானனம் தான் மீண்டும் மாடியை நோக்கி, 'சார்' என்று குரல் கொடுத்தான். பளிச் சென்று பதில் வந்தது. ''மாடு தானே! இனிமேல் ஒன்பது மணி வரை மாட்டை அங்கேதான் பையன் குளிப்பாட்டப் போகிறான். உங்களுக்கு அவசரமாக இருந்தால் தெருக் குழாயை உபயோகித்துக் கொள்ளுங்களேன்!'' என்றார் வீட்டுக்காரர். ஒன்பது மணிக்குமேல் அந்தக் குழாயில் தண்ணீர் வராது.





சாத்துவிகப் போர் ஆரம்பமாகிவிட்டது. இனிமேல் தாக்குப் பிடிக்க முடியாது என்று ராதாவுக்குத் தெரியும். அன்று சாயங்காலமே வீடு வேட்டையில் இறங்கினாள். அப்பாசாமி தெருவில் ஒரு போர்ஷன் காலியாக இருந்தது. வாடகை கொஞ்சம் அதிகம் தான். தன் மனைவியின் குணம் தெரிந்து கையில் எப்போதுமே கொஞ்சம் பணம் வைத்திருப்பான் கஜானனம். அட்வான்ஸ் கொடுத்து அப்பாசாமி தெருவுக்கு வந்து சேர்ந்தாள் ராதா. அதற்கப்புறம் எத்தனை வீடுகளோ மாற்றியாகி விட்டது.

''ஏன், ராதா இத்தனை அவஸ்தைப் படறதுக்கு உன் அகத்துக்காரரிடம் சொல்லி ஒரு 'பிளாட்' வாங்கிப் போடச் சொல்லக் கூடாதோ? இஷ்டம் போல் சின்னதோ பெரிதோ ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டால் இந்தக் குடி தூக்குகிற தொல்லை இருக்காதே!'' என்றாள் ரங்கநாயகி அம்மாள் பெரிய மனுஷி தோரணையில்.

''ராதாவுக்கு அதெல்லாம் கட்டாது மாமி!'' என்று இடைவெட்டினாள் பங்கஜம்.

''ஆமாம், மாமி! அவளை நாலைந்து வருஷங்களுக்கு ஒரு தடவை ஊர் ஊராக மாற்றி விடுகிறார்கள். எந்த ஊரிலே பிளாட் வாங்குவது சொல்லுங்கள்?'' என்றாள் சுபாவமாக.

''நான் அதைச் சொல்லலே ராதா! உனக்குக் கலகலன்று நாலு குடித்தனங்களோடு இருந்து, அவர்களோடு சண்டை போட்டுக் கொள்வதும் நினைத்தாற் போல் வீடு மாற்றுவதும் பழகிப் போச்சு. சொந்த வீடு கட்டிக் கொண்டு போனால் அந்த வசதி வராதே என்றுதான் சொன்னேன். உனக்குத்திமிர்னு யாரோடவாவது சண்டை போடணும்போல் இருக்கிறது என்று வைத்துக் கொள். யாருடன் சண்டை போடுவாய்?'' என்றாள் பங்கஜம்.

சிவராமன் சம்சாரம் சரோஜா கச்சிதமாக அந்த வேளையில் வந்து சேர்ந்தாள். சும்மா வரக் கூடாதா? ''ராதாவுக்குச் சண்டை போட ஒருவர் சொல்லிக் கொடுக்க வேண்டுமாக்கும்! 'ஆட்சிக் கலை' 'சமையற் கலை' என்று எத்தனையோ புத்தகங்கள் வைத்திருக்கிறாற் போல, ராதா 'சண்டைக் கலை' என்று ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டால் ஒரே

வாரத்தில் பத்தாயிரம் பிரதிகள் விற்று விடாதா? 'அனுபவ சண்டைக் கலை' -எழுதியது நூறு வீடுகளுக்குக் குடி தூக்கிய வீராங்கனை ராதா என்று போடலாம்'' என்று சரோஜா முடித்தாள்.

ராதாவுக்கு முகம் ஜிவு ஜிவுத்தது. ரங்கநாயகி வீட்டுத் திண்ணையாக இல்லாவிட்டால் இந்த நேரம் அவள் சரோஜாவையும் பங்கஜத்தையும் ஒரு கை பார்த்திருப்பாள். ஆனால் ரங்கநாயகியின் வீட்டுத் திண்ணை ஓர் ஐக்கிய நாட்டு ஸ்தாபன சபை போல. அங்கு கிண்டலுக்கும் வம்புக்கும் இடமுண்டே தவிர நேரடித் தாக்குதலுக்கு இடம் கிடையாது. நேரடித் தாக்குதலை நடத்தி விட்டு அப்புறம் அந்த வம்பு மகாசபையில் அங்கத்தினராக இருக்க இயலாது.

''உனக்கென்னம்மா, சரோஜா! நீ ஒரு எழுத்தாளர் சம்சாரம். புஸ்தகம் வெளியிடுவது பற்றியும் விற்பனை செய்வது பற்றியும் உனக்கு நன்றாகத் தெரியும். எனக்குச் சொல்கிற யோசனையை உன் வீட்டுக்காரருக்குச் சொல்லக் கூடாதோ?'' என்றாள் ராதா கோபத்தை மறைக்க முயன்று கொண்டே.

ரங்கநாயகி நிலைமையைச் சமாளிக்க முன் வந்தாள். ''இந்தா, சரோஜா! நம்ப ராதாவுக்கு ஒரு வீடு உடனே வேணுமாம். உன் காதிலே ஏதாவது தகவல் விழுந்திருந்தால் அவளுக்குச் சொல்லேன்'' என்றாள்.

சரோஜா யோசிப்பது போல் பாவனை செய்து விட்டு ''ராதா! ராமசாமிப்பிள்ளைத் தெரு. நூற்றி ஆறாம் நம்பர் வீட்டிலே முன் கட்டுக் காலியாம். போய்ப் பாரேன்!'' என்றாள் தணிந்த குரலில்.

ராதாவின் முகம் உற்சாகத்தால் உப்பியது. ''நிஜமாகவா? இப்போதே போகிறேன். வீடு பிடிக்கப் போச்சன்னு அங்கேயே பால் காய்ச்சிக் குடித்துவிட வேண்டி பிளாஸ்கிலே பாலைக் காய்ச்சிக் கொண்டு போகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே ராதா எழுந்திருந்தாள் பையைத் தூக்கிக் கொண்டு.

ராதா தலை மறைந்ததும் பங்கஜம் மெதுவாக ஆரம்பித்தாள். ''மாமி! நேற்று ராதா வீட்டில் பெரிய கலாட்டாவாம். நம்ப ராதாவின் புருஷனுக்குத் திடீர் திடீர்னு வாய் விட்டுப் பாடணும் போல் ஆசை வந்து விடுமாம். காலை வேளையிலே அந்தக் கஜானனன் முற்றத்தில் நின்று கொண்டு 'உன்னைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ' என்று உச்ச ஸ்தாயியில் பாடினானாம். அந்த அடிக்கு மேலே தெரியாததால் கீறல் விழுந்த கிராம போன் பிளேட் போல் அதையே ஏழெட்டுத் தடவை திருப்பித் திருப்பிப் பாடியிருக்கிறான். அந்தச் சமயம் பார்த்து வீட்டுச் சொந்தக்காரருக்கு உறவான ஒரு அம்மாள் மாடிப் படியில் இறங்கி வந்து கொண்டிருந்தாளாம். அவள் முதல் நாள்தான் வெளியூரிலிருந்து வந்திருந்தாளாம். கஜானனனின் சங்கீத ஆர்வத்தைப்பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது. தன்னைப் பார்த்துத்தான் அவன் பாடறான் என்று நினைத்துக் கையிலிருந்த கறிகாய்க் கூடையை அப்படியே கஜானனன் தலையிலே போட்டுவிட்டாளாம். ராதா வரிந்து கட்டிக் கொண்டு 'உன் முகரை இருக்கிற லட்சணத்துக்கு உன்னைப் பார்த்து யாரும் சொக்கிப் போயிடுவான்னு நினைச்சுட்டியோ'ன்னு குதித்தாளாம். ஒரே அமர்க்களம். வீட்டுக்காரர் ஒரேயடியாக 'இந்த மாதிரி ரசக் குறைவாகப் பாடுபவர்களெல்லாம் என் வீட்டில் குடியிருக்க லாயக்கில்லை. இருபத்தி நாலு மணி நேரத்துக்குள் காலி பண்ணியாக வேண்டும். இல்லாத போனால் இரண்டு குண்டர்களைக் கொண்டு வந்து சாமான்களை வெளியே தூக்கி எறிஞ்சுடுவேன்'னுட்டாராம்.''

''நீ என்னவோ கூட இருந்து பார்த்து ரசித்தவள் போல் சொல்லுகிறாயே? உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள் ரங்கநாயகி அம்மாள்.

''அதுவா? எங்க மாமியார் கோவிலிருந்து கொண்டு வந்த நியூஸாக்கும். நேற்று அந்த வீட்டுச் சமையற்கார அம்மாள் கோவிலில் இதைக் கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருந்தாளாம்'' என்றாள் பங்கஜம்.

''எங்க மாமியார் இந்த நியூஸை ஏன் சொல்ல வில்லே? ஒரு வேளை 'கான்பரன்'ஸில் லேட்டாகக் கலந்து கொண்டாள் போல் இருக்கு!'' என்றாள் சரோஜா.

''கோவில் பிராகாரத்திலே ஒரு மாமியார்கள் மகாநாடே தினம் நடக்கிறது. அந்தக் கொடி மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு ஊர் வம்பை அலசி எடுத்து விடுவார்கள் போலிருக்கு'' என்றாள் ரங்கநாயகியம்மாள் சுவாரசியத்துடன்.

''நீங்கள் என்னவோ கொடுத்து வைத்தவர்கள்தான் மாமி! உங்களுக்கு இந்த மாமியார் தொல்லை இல்லை. என்னைப் போலேயா?'' என்று ஆதங்கத்துடன் நீட்டினாள் சரோஜா.


''உனக்கென்னடியம்மா தொல்லை! பிரமாதமாகச் சொல்ல வந்து விட்டாயே?.... உன்னை உட்கார்த்தி வைச்சு ஜாம் ஜாம்னு சமைத்துப் போடுகிறாள். உனக்கு வலிக்கிறதோ....?''

''ஒரே தொணதொணப்பு மாமி! அறுபது வயசானாலே எதற்காவது பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற வெறி வந்து விடும் போலிருக்கிறது. 'இன்னிக்குக் கோவிலிலே அந்த பீமாஸ் கபேக்காரர் வீட்டு அம்மாள் ஒரு புடவை கட்டிக் கொண்டு வந்திருக்கிறாள் பாரு' என்று ஆரம்பித்து ஐம்பது வருசத்துக்கு முன்னாலே தனக்குக் கூறைப் புடவை வாங்கின கதையைச் சொல்ல ஆரம்பித்து விடுவாள். இந்தப் பழங்கதையை யெல்லாம் யாராலே பொறுமையாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்க முடிகிறது?'' என்று சரோஜா அங்கலாய்த்தாள்.

''சரிதான், போ! அத்தனை பழங் கதையையும் உன் அகத்துக்காரர் பத்திரிகைக் கதையாக்கிப் பணமாக்கிவிட மாட்டாரோ? நல்ல உபகாரமான மாமியார்னு சொல்லு!'' என்றாள் பங்கஜம்.

''போதுமே! புதுசாக் கதை எழுதினாலே போயிட்டுப் போட்டுத் திரும்பி வருகிறது. பழங் கதைகளை எழுதிவிட்டால் கேட்கவே வேண்டாம்! அதுவும் எங்க மாமியார் கதை இருக்கே......''

சரோஜாவை முடிக்க விடாமல் ரங்கநாயகி கையை அமர்த்தினாள். ''நீ மாமியார் கதை என்றவுடன் தானம்மா எனக்கு ஒரு பழைய நாட்டுப்பெண் கதை நினைவுக்கு



வருகிறது. எங்க ஊரிலே அந்தக் காலத்திலே குஞ்சம்மான்னு ஒரு அப்பாவிப் பெண் இருந்தாள். ரொம்பப் பொறுமைசாலி. அத்தனைக் கத்தனே அவள் மாமியார் ஒரு கிராதகி. ஒரு நாள் குஞ்சம்மாள் கத்திரிக்காய் கூட்டு சமைத்தாள். அன்றைக்கு ஒரு உப்பு அதிகமாய்ப் போய் அந்தக் கூட்டு சரியாக அமையவில்லை. மாமியார்க்காரி ஒரு வாய் கூட்டை ருசி பார்த்துவிட்டுப் பத்திரகாளியாகிவிட்டாள்.''

''அந்த அம்மாவுக்கு உயிர் கத்திரிக்காயில் இருந்ததாக்கும்?'' என்று குறுக்கிட்டாள் சரோஜா.

''ஜாடியிலிருந்த அத்தனை உப்பையும் தூக்கி நாட்டுப் பெண் தலையில் கொட்டி விட்டாளா?'' என்று கேட்டாள் பங்கஜம் அவசரத்துடன்.

''முழுக்கத்தான் கேளுங்களேன்! அந்தமாமியார்க்காரி என்ன பண்ணினாள், தெரியுமோ? மறு நாள் ஒரு சாக்குக் கத்திரிக்காயை மொத்தமாக வாங்கினாள். 'இந்தாடி குஞ்சம்மா! இனிமேல் தினம் கத்திரிக்காய் கூட்டுத்தான் பண்ண வேண்டும். அந்தக் கூட்டை நீ சரியாகப் பண்ணக் கற்றுக் கொள்ளும் வரையில் நீ உன் புருஷனுடன் பேசக் கூடாது' என்று ஒரு பார்டர் போட்டாள்.''

''மாமி! அது 'பார்டர்' இல்லே. 'ஆர்டர்'. 'ஆர்டர்' என்றால் உத்தரவு. மேலே சொல்லுங்கோ. பின்னலைப் புடவைத் தலைப்பிலே சில்லறை முடிந்து வைத்துக் கொள்வதுபோல் வைத்துக் கொண்டிருக்கிறாளோ என்னவோ?'' என்றாள் பங்கஜம்.

ரங்கநாயகி தொடர்ந்தாள். ''பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்று வசனம்கூடச் சொல்வார்களே. மறுநாள் காலையில் அடுக்களைக் கதவைச் சாத்திக் கொண்டு கத்திரிக்காய்க் கூடையின் அருகில் உட்கார்ந்தாள். மாமியார் கூடத்தில் ஜபம் பண்ணிக் கொண்டிருந்தாள் கண்களை மூடிக் கொண்டு. திடீரென்று அந்த மாமியார் அம்மாவுக்குக் கழுத்தில் யாரோ உட்கார்ந்தது போல் உணர்ச்சி. கண்களைத் திறந்ததும் பெரிய அதிர்ச்சியே காத்திருந்தது. குஞ்சம்மா என்ன பண்ணியிருந்தாள் தெரியுமா? நீள சணல் கயிற்றை எடுத்து அத்தனை கத்திரிக்காய்களின் காம்புகளிலும் கோத்து முடிந்து பெரிய மாலையாக்கிக் கொண்டு வந்து மாமியார் கழுத்தில் போட்டு விட்டாள். 'இதோ பாருங்கோ! இனி மேல் இந்த வீட்டில் கத்திரிக்காய் என்ற பேச்சே எடுக்கக் கூடாது. அப்படி எடுத்தால் உங்க பிள்ளை உங்களுடன் பேசக்கூடாது என்று சொல்லி விடுவேன்' என்று ஒரு போடும் போட்டாள். மாமியார் முகம் திருதிருவென்றது. 'இந்தாடியம்மா மகராசி! நான் காசிக்குப் போகாமல் இங்கேயே இன்றைக்கே கத்திரிக்காயைவிட்டுவிட்டேன்!' என்றாளாம்.''—ரங்கநாயகி நிறுத்தினாள்.

சரோஜாவும் பங்கஜமும் கைதட்டிக் கதையை ரசித்துச் சிரித்தார்கள். சிரிப்பு அடங்கச் சில நிமிஷங்கள் ஆயின.

''நீங்கள் என்னவோ பழங்காலத்து சாது மாமியார் கதையைச் சொன்னீர்கள். ஒரு தற்காலத்து 'டிப்ளோமாடிக்' மாமியார் கதையை நான் சொல்கிறேன்'' என்று ஆரம்பித்தாள் பங்கஜம்.

''ஓ! அந்த அப்பள டிப்போக்காரர் அம்மாவா? அந்த அம்மா சாதுவாக இருக்கிறாளே?'' என்று கேட்டாள் ரங்கநாயகி அம்மாள் தன் ஆங்கில பாஷா ஞானத்தை வெளிப்படுத்திக் கொண்டு.

''அப்பள டிப்போவுமில்லே ஒன்றுமில்லே. 'டிப்ளோமாடிக்' என்றால் சாமர்த்தியமான என்று அர்த்தம்.''

''சரிதான் போ. எனக்கும் சொல்லிக் கொடுக்க ஒரு க்ளாசே ஆரம்பிச்சுடுவே போல் இருக்கே... முதலில் உன் கதையை ஆரம்பி, கேட்போம்'' என்றாள் ரங்கநாயகி.

''எங்க உறவுக்காரப் பெண்தான் மாமி. நிறையப் படித்தவள். பணக்கார அப்பாவுக்கு ஒரே பெண். கல்யாணம் ஆவதற்கு முன்னாலேயே குடும்பம் நடத்துவது பற்றிய புத்தகங்களை நிறைய நிறையக் கரைத்துக் குடித்தாள். அவள் குறிப்பாகத் திருப்பித் திருப்பிப் படித்தது 'முரட்டு மாமியாரை வழிக்குக் கொண்டு வருவது எப்படி?' என்ற புஸ்தகம். அந்தப் புத்தகத்தை நன்றாக உருப் போட்டு விட்டு அவள் தன் கல்யாணத்தின் மூலம் கணவனை எதிர்பார்ப்பதை விட, ஒரு முரட்டு மாமியாரையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது தானே புத்தகத்தின் உபயோகத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

''கல்யாணமாகிக் கணவன் வீடு போனாள். அங்கேதான் அவளுக்கு என்ன ஏமாற்றம் தெரியுமோ? அந்த மாமியார் அம்மாள் மருமகள், ஏன் என்பதற்குள் எண்ணெயாக ஓட ஆரம்பித்தாள். 'இந்தாடாப்பா! குழந்தையை நாடகத்துக்கு அழைத்துப் போ! சினிமாவுக்கு அழைத்துப் போ' என்று அவளாகவே பிள்ளைக்கு யோசனை சொன்னாள்.

''மருமகளுக்கு வாழ்க்கை 'சப்' என்று போயிற்று. முரட்டு மாமியாராக இருந்தால்லவா புஸ்தக ஞானத்தைப் பரீட்சை பண்ண முடியும். அதற்காகத்தானே அவள் கல்யாணம் பண்ணிக் கொண்டாள்.

''ஒருநாள் மாமியார் வீட்டில் இல்லை! வந்திருந்த விருந்தாளி காப்பிக்குப் பதிலாக எலுமிச்சம் பழம் சர்பத் கேட்டுவிட்டாள். அதற்காக நாட்டுப்பெண் ஸ்டோர் ரூமில் நுழைந்து எலுமிச்சம் பழத்தைத் தேடினாள். எலுமிச்சம் பழம் அகப்படவில்லை. அதற்குப் பதிலாக அலமாரி ஓரத்தில் இருந்த ஒரு புஸ்தகம் தென்பட்டது. அதன் தலைப்பைப் பார்த்தாள். அவ்வளவுதான்! 'ஓ'வென்று அலறிக் கொண்டு வெளியே வந்தாள். என்ன காரணம் தெரியுமோ? 'முரட்டு மருமகளை

வழிக்குக் கொண்டு வருவது எப்படி?"என்கிற புத்தகம் அது. அந்த மாமியார் அம்மாள் அதைப் படித்து விட்டு நாட்டுப்பெண்ணை ஏமாந்த சோணகிரியாக்கி விட்டாள்!"

பங்கஜம் பெரிய மேடைப் பிரசங்கியின் பாணியில் கம்பீரமாகப் பார்த்தாள்.

"அம்மோவ்!" என்று குரல் கேட்டது இல் கேட்டது. சாப்பாட்டுக் கூடைக்காரப் பொன்னம்மாள் தலையிலுள்ள கூடையை ஒயிலாகப் பிடித்தவாறு சினிமா நட்சத்திர பாணியில் உள்ளே வந்தாள். அவளுக்கு இருபது வயதுதான் இருக்கும். இடையிலே நவீன மோஸ்தர் சில்க் புடவை அழகுக்கு அழகு செய்து கொண்டிருந்தது.

"இதோ வந்து விட்டேன்!" என்று ரங்கநாயகி எழுந்து உள்ளே போனாள். மங்களவுக்குச் சாப்பாடு கொடுத்தனுப்ப வேண்டுமே!

"ஏண்டி பொன்னம்மா உனக்கு எப்போ கல்யாணம்?" என்று கேட்டாள் பங்கஜம்.

"ஏன்? ஏதாவது மாப்பிள்ளை பார்த்து வச்சிருக்கீங்களா அம்மா?" என்றாள் பொன்னம்மா கேலியாக.

"அவளுக்கென்ன பங்கஜம்! சினிமா ஸ்டார் மாதிரி இருக்கிறாள். யாராவது வந்து கொத்திக் கொண்டு போய்விட மாட்டானா?" என்றாள் சரோஜா. "பொன்னம்மா! இந்தப் புடவை உனக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்குதடி!" என்றும் சொன்னாள்.

"இதை எடுத்துக்கோ பொன்னம்மா!.... மங்களவைக் கல்லூரியிலே வெந்நீர் குடிக்கச் சொல்!... ஊரெல்லாம் ஒரே ஜுரம்" என்று கூறி ரங்கநாயகி சாப்பாட்டுப் பாத்திரத்துடன் வந்தாள்.

கைதேர்ந்த பரத நாட்டிய நிபுணி போல் பொன்னம்மா குலுக்கல் மினுக்கலுடன் சாப்பாட்டுப் பாத்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

"இவள் காலேஜுக்குள்ளே நுழைந்து கூடையை இறக்கி வைச்சுட்டால், இவளை யாரும் சாப்பாட்டுக் கூடைக்காரி என்று சொல்ல மாட்டார்கள். காலேஜ் மாணவி என்றேதான் நினைத்துக் கொள்வார்கள்" என்றாள் பங்கஜம்.

"நினைத்துக் கொள்வார்களென்ன? மங்கு காலேஜ் கணக்கு புரொபசர் அம்மா நினைத்துக் கொண்டே விட்டாளாம்! ஒரு நாளைக்கு இந்தப் பொன்னம்மா மத்தியானம் கூடையை மரத்தடியில் கொண்டுவைத்து விட்டு வளைய வந்து கொண்டிருந்தாள். அஜந்தா கொண்டை, வாயில் புடவை எல்லாம்தான் ஒரே அமர்க்களமாச்சே! கணக்கு வாத்தியாரம்மா மூக்குக் கண்ணாடியில்லாமல் அந்தப் பக்கம் வந்தவள் "ஏய்! காலையிலே ஏன் வரலே?"ன்னுளாம். இவள் விவரம் புரியாமல் 'இப்போது தான் வரேன்' என்றுளாம். 'நீ வேணும்னு கிளாசுக்கு மட்டம் போட்டிருக்கிறாய்! ஒரு ரூபாய் பைன்' என்றுளாம். அப்புறம் இந்தப் பொன்னம்மா ஓடிப்போய்க் கூடையைத் தலையில் தூக்கி வைத்துகொண்டு வந்து அந்த வாத்தியாரம்மா முன் நின்றுளாம். அப்புறம் தான் புரொபசர் அம்மாவுக்கு விவரம் புரிந்ததாம்." ரங்கநாயகி சொல்லி விட்டுச் சிரித்தாள்.

"பாவுன் மாமி! பாவுன்! காலாகாலத்தில் வாமல் யாரையாவது கல்யாணம் பண்ணிக் கொண்டும் போய் விடுவாள். அழகாகவு மேலே வாய் இருக்கு!" என்றாள் சரோஜா.

"எங்கள் மங்களவுக்கு இந்த வருடம் கல்யாணத்தை நடத்தி விட வேண்டுமென்று அவர் ஒற்றைக்காலில் நிற்கிறார். ஒவ்வொருத்தரைப் போலே பணத்துக்கு அலைய வேண்டாம். கல்யாணத்துக்கு என்று எடுத்து வைத்திருக்கும் பத்தாயிரம் ரூபாயும் பாங்கிலே தூங்குகிறது. எனக்கோ உடம்பு ஒரு நிமிஷத்தில் இருப்பது மாதிரி மற்றொரு நிமிஷமில்லை."

சரோஜா எழுந்திருந்தாள். எப்போது பேச்சு ரங்கநாயகி அம்மாளின் தேகாரோக்கியத்தைப் பற்றி வந்து நின்றதோ, அதற்கு மேல் வேறு எந்த விஷயத்துக்கும் தாவாது என்று தெரியும். "மாமி! நான் வரட்டுமா? எங்க மாமியார் அரிசி அப்பளத்துக்கு மாவு பிசைந்து வைத்திருக்கிறாள். போய்க் கொஞ்சம் அவருக்கு ஒத்தாசை பண்ணுகிறேன்" என்று புறப்பட்டாள்.

பங்கஜத்துக்குக் கஷ்டமாக இருந்தது. எத்தனை நேரம்தான் ரங்கநாயகியின் சுய வியாதிப் புராணத்தைக் கேட்டுச் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

காம்பவுண்டுக் கதவை வேகமாகத் தள்ளிக் கொண்டு கையும் பையுமாக ராதா மீண்டும் உள்ளே வந்தாள். "எங்கே அந்த சரோஜா! எங்கே அவள்?" என்று கூப்பாடு போட்டுக் கொண்டே வந்தாள்.

"ஏன் வீட்டுக்குப் போய் விட்டாள்! என்ன விஷயம்?" என்று கேட்டாள் பங்கஜம்.

"கொழுப்பெடுத்தவள்! ராமசாமி பிள்ளை தெரு நூற்றி ஆறும் நம்பர் வீட்டிலே முன்னாலே என் கூடக் குடியிருந்த ஜானகி இருக்கிறாள். அவள் என் தாயாதி. அவள் முகத்தில் விழிப்பதில்லை என்று சத்தியம் பண்ணியிருக்கிறேன். சரோஜா விஷயம் தெரிந்தும் என்னை அங்கே போகச் சொல்லி யிருக்கிறாள், பாரேன்!" என்றாள் ராதா.

சரோஜா தணிந்த குரலில் சொன்னதின் பொருள் இப்போதுதான் புரிந்தது.

"இந்த ரீதியிலே போனால் உனக்குத் தனி பங்களாத்தான் தேவைப்படும்" என்று சொல்லிக் கொண்டே ரங்கநாயகி எழுந்தாள். "காப்பி அடுப்பைப் பற்றவிட வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே உட்பக்கமாகத் திரும்பினாள்.

"அம்மா! உன்னைப் பாட்டி கூப்பிடுகிறாள்" என்று எதிர்வீட்டிலிருந்து ஒரு வாண்டு பங்கஜத்தை நோக்கி ஓடி வந்தது. "என்ன கொள்ளை வந்துடுத்து?" என்று கேட்டுக் கொண்டே பங்கஜம் எழுந்திருந்தாள்.

திண்ணையை விட்டுக் கடைசியாகக் கிளம்பியது ராதாதான்! சொந்த வீட்டில் சொகுசாக வாழ்கிறவர்கள் அத்தனை பேர் மென்னியையும் பிடித்துத் திருக வேண்டும் போன்ற உணர்ச்சி தான் அவள் உள்ளத்தில் அப்பொழுது மேவி நின்றது.

ரங்கநாயகி வீட்டு வாசல் ஹால் வெறிச்சோடி யிருந்தது. மறுநாள் வம்பில் என்னென்ன விஷயங்கள் அடிபடுமோ என்று தூண்களும் குரோட்டன்ஸ் செடிகளும் யோசித்தனவோ என்னவோ?

நேர்த்தியான, புழக்கத்திற்குகந்த
கைத்தறி துணிகளில்

புடவைகள் சோளிகள்
ஃபிராக்குகள் புஷ் ஷர்ட்டுகள்
மற்றும் ஸ்லாக்குகள்




தற்கால நாகரீக மோஸ்தர்களிலோ அல்லது பழமைபெற்ற டிசைன்களிலோ, அகலமாகவும் அல்லது குறுகலாகவும் பட்டைகள் அமைந்த ரகங்களிலோ, கைத்தறி துணிகளுக்கு இணையே இல்லை. எழிலுக்கும், சௌகர்யத்திற்கும், அன்றாட உபயோகத்திற்கோ அல்லது விசேஷமான நாட்களில் அணிவதற்கோ, கைத்தறி துணிகளே தற்கால நாகரீகமாகும். அவை நீடித்துழைப்பவை. மேலும் சிக்கனமானவையும் கூட. நாட்டின் பல பிரதேசங்களிலும் தயாராகும் கைத்தறி துணிகள் பல ரகங்களிலும் கிடைக்குமிடம்:

ஹாண்ட்லூம் ஹவுஸ்,
9, ரடன் பஜார், சென்னை-3.

தலைமை ஆபீஸ்:
அகில இந்திய கைத்தறி-
துணிகள் கூட்டுறவு சங்கம்
லிமிடெட், ஜன்மபூமி
சேம்பர்ஸ், பம்பாய்-1.

பின்னலின் நுனியை உள்ளங் கையில் அடித்துக் கொண்டே கால் தரையில் படியாமல் குதி நடை போட்டுக் கொண்டு செல்கிறாள் சுந்தரி.

இன்னும் அவள் சின்னப் பெண் இல்லைதான். இருந்தாலும் அவளுடைய உள்ளத்தில் பொங்கி முகத்தில் ததும்பும் அந்த மகிழ்ச்சியைத் தான் பாருங்களேன். சின்னப் பெண் தோற்றாள் போங்கள்!


அதை மகிழ்ச்சி என்பதா? உற்சாகம் என்பதா? போதை என்பதா? மயக்கம் என்பதா? அந்த நளினம் பூசிய உணர்வை இன்னதென்று இனம் பிரித்து ஒற்றைப் பெயர் சூட்ட முயன்றால் உங்களுக்கு நிச்சயம் தோல்விதான். அது ஒன்றல்ல; பன்மை! இருந்தாலும் தனித் தனியாய்ச் சுதாவாகப் பெற்ற வரையறையோடு அவை தென்படவில்லை.

எனவே, ஒருமை தான் அந்த உணர்ச்சி!

வான வில்லின் வர்ண ஜாலம்போல் ஒன்றினுள் ஒன்று உட்செருகி, இரண்டற இணைந்து பலவாய்க் கிளர்ந்து அதே சமயத்தில் ஒற்றையாய் வெளிப்படுகிறது அந்த இன்னுணர்வு. அது எப்படிச் சாத்தியம்?

பெண்ணைப் படைத்து, அந்த புதிர்த் தத்துவத்தினுள் ஓர் இதயத்தையும் படைத்து, ஒரு கைப்பிடியிலடங்கும் அந்தச் சிமிழுக்கு மலர் நாணும் அநுராக உணர்வையும் கொடுத்த பரம்பொருளைத் தான் கேட்கணும். கண்ணாடிச் சில்லின் பலவான விரிசல்கள்





நம்பிக்கை வாழட்டும்!

"வியார்ஜி"

ஒவ்வொன்றிலும் முழுமையாய்க் காணும் பிரதிபிம்பம்போல் சுந்தரியின் ஒவ்வோர் அவயவத்திலும் அந்த உவகை பிறிதின்றிப் பூரணமாய் வெளித் தோன்றுவதை மௌனமாய்க் காண்பதே ஒரு பெரிய ரசானுபவம்.

நான் அப்படித்தான் செய்து கொண்டிருக்கிறேன். எனக்குக்கூட உணர்ச்சியுண்டா என்று நீங்கள் வியக்கிறீர்கள், இல்லையா? கேவலம் ஒரு மரத்துக்கா இத்தகைய காவிய ரசனை என்று நீங்கள் தலையை அவநம்பிக்கையோடு ஆட்டுகிறீர்கள்! அது எனக்கு நன்கு தெரிகிறது.

சுந்தரி எனக்கு இன்று நேற்றுப் பழக்கமானவளா என்ன? பாவாடையும் சட்டையுமாய்த் தோழிகளோடு கும்மாள மிட்டுக் கொண்டு அவள் பள்ளி செல்லும் பருவத்திலிருந்து எனக்குப் பழக்கமானவளாயிற்றே!

எனது மேற்குப் பக்கத்துக் கிளையில் புதிதாகத் துளிர்க்கும் தளிர்போல் சுந்தரியின் வளர்ச்சியின் இனிய கட்டங்கள் பலவும் இன்னும் என்னுடைய நெஞ்சத்தில் பசுமையாக இருக்கின்றன.

அன்று எனக்கு நன்கு நினைவிருக்கிறது!

என்ன தூரத்தில் வருவது சுந்தரிதானா? நான் வியப்போடு பார்க்கிறேன். சட்டென்று அவளுடைய மாறுதல் இன்னதென்று எனது மர மூளைக்குப் புலனாகவில்லை. அவளுக்கு என்றுமே அலாதியான ஒரு புதிய அமைதி அவளைத் திடீரென்று சூழ்ந்து கொண்டிருக்கிறது. சதா படபடக்கும் அவளுடைய அகன்ற விழிகள் இன்று வழக்கத்துக்கு மாறாக நிலம் நோக்கித் தாழ்ந்திருக்கின்றன.

எதற்கோ காரணமின்றி அவள் கீழுதட்டைக் கடித்துக் கொள்கிறாள். அதையும் மீறி ஒரு மெல்லிய புன்னகை கீற்றாகத் தோன்றுகிறது. முகம் ஒரு கணத்தில் மாயமாய்ச் செம்பஞ்சுக் குழம்பை அப்பிக் கொள்கிறது. திடீரென்று, இந்தச் சுவையான ரசவாதத்தின் புதிர் எனக்கு அவிழ்ந்து விடுகிறது.

மகிழ் மலர்ச்சி பெற்றிருக்கிறது! அது தான் நேற்றுவரை காண இயலாத இந்தப் புதிய சோபை! பெண்மையின் பொருள் விளங்கிய நிலையில் அவளுடைய புத்தெழில் நாணம் மிகுந்த வசீகரமாய்த் தோன்றுகிறது.

சூழ யாருமே இல்லை. என்றாலும் உலகத்தின் பல கோடிக் கண்களும் அந்தக் கணத்தில் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதான பிரமையோடு பேதை பார்வையில், கை அசைவில் நடையில்—எல்லாவற்றிலுமே மருட்சியோடு தடுமாறுகிறாள். அந்தத் தடுமாற்றமும் சுவாரசியமாகத்தான் இருக்கிறது.


அந்த ஒரு வாரமும் அவளுடைய தோழிகள் அவளைத் துளைத்தெடுத்து விடுகிறார்கள். மென் வளைகளை அளவுக்கு மீறி ஒலிக்கச் செய்கிறார்கள்! குறும்புக்காரி ஒருத்தி அவள் காதோடு இனிய ரகசியம் ஒன்றைக் கிசுகிசுக்கிறாள்! அது மந்திரமாய் அவள் முகத்தில் செம்மையைக் கொணர்ந்து பூசிவிடுகிறது. பிடிவாதமாய் இறுக்க மூடியிருந்த அவளது வாயையும் திறக்கச் செய்து அவளைப் பேச வைத்து விடுகிறது.

''போங்களடி!'' — அவள் பொய்யாய்ச் சிணுங்குகிறாள். அந்தப் பொய்யான சிணுங்கலிலும் அவள் வாஸ்தவமான மகிழ்ச்சி ஒன்றை ரகசியமாக நுகர்ந்து திளைக்கிறாள். அதன் குறுகுறுப்பு உடலின் மயிர்க்கால்கள் தோறும் இனிமை பாய்ச்சுகிறது. கணத்தில் முகம் அவளைக் காட்டிக் கொடுத்து விடுகிறது! அதை மறைக்க அவள் புத்தகத்தினால் தோழியை அடிக்க விரைகிறாள். தோழி நகர்ந்து அவளது முயற்சி தோற்று அவள் மேலும் வேடிக்கைக்கு இலக்காகிறாள்.

கேலியும் கிண்டலுமாக அந்தப் பெண்களுக்கு வாழ்க்கை அந்தக் கவலையற்ற இன்ப விநாடிகளின் நிரந்தரமாய் நீண்டு விடுகிறது! அவர்களுடைய இளமையின் உற்சாகமான மகிழ்ச்சி என்னையும் தொத்திக் கொள்கிறது!

இன்று பெரிதாய் நெடுக வளர்ந்து, கிளைகளைப் பரப்பி, அடி மரம் பருத்து வறண்டு பட்டை போர்த்த நிலையில் இல்லாமல் அன்று ஆண்டுகள் பலவற்றுக்கு முன்னால்-நகர சபையின் தகரப் பீப்பாய்க்கு மேலாக எனது பச்சை இளந்தளிர்க் கிளையை நீட்டி உலகத்தை வியப்போடு நோக்கிய அந்தக் குறுஞ்செடிப் பருவத்தில் மீண்டும் வாழ்கிறேன்!

இன்னதென்று, எப்படியென்று, ஏன் என்று விவரிக்க முடியாத ஒரு பந்தம் என்னை அவளுடன் பிணைத்து விடுகிறது!





அந்த விசித்திரக் கேண்மை எங்கள் இருவருக்கும் மட்டுமே தெரியும்!

இல்லை, அதுகூடப் பொய்!

அது எனக்கு மட்டுமே தெரியும்—என்னில் நானே உணரும்—ஒன்று!

அதுதான் மெய்!

ஒரு நாள் அவள் வருவதற்குச் சற்றுத் தாமதமானாலும் எனக்குக் கிளையெல்லாம் இலைக் காம்பெல்லாம் பரபரக்கிறது. ஒரு முறை அவள் ஜுரத்தில் விழுந்து விடுகிறாள். ஒரு வாரம் பள்ளிக்கூடத்துக்கு 'லீவு' போட்டு விடுகிறாள்.

அவளுடைய தோழிகளின் பேச்சிலிருந்து எனக்கு இரண்டாம் நாள்தான் செய்தி தெரிகிறது! அந்த முதல் நாள் நான் பட்டபாடு!

அவள் குணம் பெற்று மீண்டும் பள்ளிக்கு வரும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். கடைசியாக அவள் வருகிறாள். மெலிந்து வெளுத்த கைகள் புத்தகச் சுமையைத் தாங்க மாட்டாமல் வரும் நிலை என்னுள் ஒரு சங்கடத்தை ஏற்படுத்துகிறது. களைத்துப் போன அவளை ஆசுவாசப்படுத்த நான் என் கிளைகளையும், இலைகளையும் மெல்ல அசைத்து மென்காற்றின் 'தண்' என்ற இதமளிக்கிறேன். அவள் என்னை நன்றியுடன் நிமிர்ந்து பார்த்துக் கைக்குட்டையால் நெற்றியில் அரும்பிய குறு வியர்வையை ஒற்றிக் கொள்கிறாள். அவள் பெற்ற நிறைவின் பிரதிபலிப்புபோல் எனது உடலெங்கும் புளகம் போர்த்து இலைகளெல்லாம் மகிழ்ச்சியால் சலசலக்கின்றன.

இன்னொரு நாள் திடீரென்று மழை பிடித்துக் கொள்கிறது.

பள்ளிக்கூடம் விட்டுத் திரும்பும் பெண்கள் கூட்டம் ஒன்று விரைந்து என் கீழ் ஒதுங்குகிறது. அதில் சுந்தரியும் இருக்கிறாள். மழை நீரின் ஒரு தாரையும் அவள் மீது விழாமல் இருக்க நான் பிரயாசையுடன் சிறு இடைவெளிகளை அடைத்துக் குடையாக்குகிறேன்.

''அடி, இந்த மாதிரி மழையின் போதெல்லாம் மரத்தின் கீழ் நிற்கக் கூடாது. ஒரு சமயம்போல் ஒரு சமயம் இருக்காது!'' என ஒரு பெண் எச்சரித்துக் கொண்டே என்னை அண்ணாந்து சந்தேகத்துடன் பார்க்கிறாள்.

எனக்குச் 'சுருக்' என்கிறது.

காற்றில் எந்தக் கிளையாவது தவறி விழுந்து விடக்கூடாதே என்று எனது பிடிப்பை இறுக்கமாக்கிக் கொள்கிறேன்.

மழை நின்று அவர்கள் போகும்போது எனக்கு நிம்மதியாக மூச்சு வருகிறது. திருப்தியில் எனது கிளைகள் மெல்ல அசைந்து சுந்தரியின் மீது நீர்த்துளிகளை வாரி இறைக்கையில் அவளது உடல் சிலிர்க்கிறது.

அவள் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு முன்போல் நாள்தோறும் அவளைப் பார்க்க இயலாமையால் நான் வெம்பித்தான் போயிருக்கிறேன். எனது பெரிய கிளை ஒன்று கூடப் பட்டுப் போய்விட்டதை உணர்கிறேன்.

அவ்வப்போது சுந்தரி அந்த வழியாகப் போகையில் என்னுள் புத்துணர்ச்சி பெறுகிறேன். காலம் ஒரே கட்டத்தில் இயக்கமின்றித் தம்பித்து நின்று அவள் என்றுமே பெண்ணாக இருந்திருக்கக் கூடாதா என்று சுயநலத்துடன் எண்ணுகிறேன்.

அதோ சுந்தரி வந்து கொண்டிருக்கிறாள். இன்று என்ன சற்று மிகையான அலங்காரம்? வழக்கத்துக்கு மாறான பரபரப்பு?

வருகிறவள் இரண்டு புறமும் பார்த்துக் கொண்டே என்னை நோக்கியல்லவா வருகிறாள். எனக்குப் பின்புறம் ஒதுங்கியவள் தயங்கித் தயங்கி நிற்கிறாள். எதையோ தேடுகின்ற அல்லது யாரையோ எதிர்பார்க்கின்ற அல்லது யாரிடமிருந்தோ ஓடி ஒளிகின்ற தயக்கமல்லவா அது?

அவள் எதைத் தேடுகிறாள்?

அவள் யாரை எதிர்பார்க்கிறாள்?

அவள் யாரிடமிருந்து ஒதுங்குகிறாள்?

அவளது செய்கை எனக்கு ஆச்சரியமாகப் படுகிறது. ஐயமும் வியப்பும் தோய்ந்த அதிசய உணர்ச்சியோடு அவளைப் பார்க்கிறேன்.

மணிக்கட்டை நிமிர்த்திக் கைக் கடிகாரத்தை உற்றுப் பார்க்கிறாள். மெல்லச் சலித்துக் கொள்கிறாள். ஒவ்வொரு விநாடியாய்ச் சாவதானமாகக் கழியும் காலத்தின் நம்புவதற்கே கடினமான மந்த கதி அவளுக்குப் பெருஞ்சுமையாய்த் தோன்றுகிறது போலும்.

யாரோ விரைந்து வரும் காலடிச் சத்தம் கேட்கிறது.

ஓர் இளைஞன்தான் வருகிறான். என்னை நோக்கித்தான் வருகிறான். சுந்தரி அசாதாரணமாகப் பரபரப்படைகிறாள்.

''அப்பாடா!'' சுந்தரி சற்று உரக்கவே சொல்கிறாள். நெஞ்சு நிறைந்து வார்த்தைகள் வெளிவருகின்றன. ஆர்வமாய்க் காத்திருந்த நிகழ்ச்சியின் பலிதம் ஒன்றே அளிக்கவல்ல நெட்டுயிர்ப்பு அது.

''என்ன சுந்தரி! அதிக நேரம் காக்க வைத்து விட்டேனா? என்ன? உம்!'' அவன் கொஞ்சலாய்க் கேட்கிறான்.

எடுத்த எடுப்பிலேயே அவனை எனக்கு ஏனோ பிடிக்கவில்லை. என் உணர்ச்சி இன்னதென்று எனக்கே புரியவில்லை. அதில் அளவுக்கு மீறிப் படிந்திருந்த அசூயையின் சாயலும் அதன் அசாதாரணமான கூர்மையும் என் இனத்தின் சுதர்மத்திற்கே புறம்பானவை.

அந்த இளைஞனுடைய குழைவும், பார்வையும் வேறு எனது உணர்ச்சிக்குத் தூபமூட்டுகின்றன. என்னை நானே சமாளித்துக் கொள்கிறேன். மிகுந்த பிரயாசையுடன்தான். சுந்தரியின் மீது அவன் செலுத்தும் ஆதிக்கம் தான் என்னைத் திடீரென்று தடுமாற வைத்துவிட்டது என்று என்னை நானே தேற்றிக் கொள்கிறேன். ஆதாரமற்ற பொறாமையுணர்ச்சிக்கு இடம் கொடுத்து விட்டதற்காக வெட்கப் படுகிறேன்.

அந்த இளைஞனின் குரல்தான் எப்படி மதுரநாதமாய் அவளை மெய்மறக்கச் செய்துவிடுகிறது என்று நான் அதிசயப்படுகிறேன். அவள் அவனை நிமிர்ந்து நோக்கி, தன் அகன்ற விழிகளை மேலும் மலர்த்தி, அவனை முற்றாகப் பருகி இனிமையாய் நெஞ்சில் நிறைத்துக் கொள்கிறாள்.

யுகக் கணக்காய்க் காத்திருந்த வேட்கை தணிந்து விட்ட தெம்பு அவளது மெய்ப்பாட்டில் புலனாகிறது. அவளது நெஞ்சு எழிலுடன் விம்மித் தணிகிறது. கால் கட்டை விரல் வளைந்து நிலம் கீறுகிறது. கைவிரல்கள் முடிவின்றிச் சேலைத் தலைப்பை முறுக்குகின்றன.

பாலில் தண்ணீர் கலப்பதைத் தடுக்க நீங்கள் தண்ணீருக்கு வர்ணம் கொடுப்பீர்களா ?

பாலில் தண்ணீர் கலக்கப்பட்டால் பால்காரனைத்தான் குறை கூறுவீர்களே ஒழிய தண்ணீர் அளிக்கும் முனிஸிப்பாலிட்டி மீது நீங்கள் குற்றம் சாட்டமாட்டீர்கள் ! பாலில் தண்ணீர் கலப்பதைத் தடுப்பதற்காகத் தண்ணீருக்கு வர்ணம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தவும் மாட்டீர்கள் !

ஆனால் இதைப் போன்ற நெய் கலப்படம் விஷயத்தில் மாத்திரம் சில பேர்கள், நெய்யில் வனஸ்பதி கலப்படம் செய்வதைத் தடுக்க வனஸ்பதிக்கு வர்ணம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள்.

இரக்கமற்ற மனிதர்கள் நெய்யில் கலப்படம் செய்வதற்கு அநேகவித பொருள்களை உபயோகிக்கிறார்கள் ... வனஸ்பதி ஒன்றை மட்டும் அல்ல ! வர்ணம் கொடுப்பதன் மூலமோ அல்லது இதர முறையிலோ கலப்படம் செய்வதற்கு வனஸ்பதியை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்க முடிந்தால்கூட, நெய்யில் கலப்படம் செய்வதற்கு மினரல் எண்ணெய்களும், மிருகக் கொழுப்புகளும் இருக்கவே இருக்கின்றன. இவைகள், பரிசுத்தமற்றவை, அருவருப்பு உண்டாக்கக் கூடியவை; மற்றும் மனித ஆரோக்கியத்திற்கே கெடுதி விளைவிக்கக் கூடியவை !

கலப்படத்தைத் தடுக்க இரு வழிகள்

வனஸ்பதிக்கு வர்ணம் கொடுப்பதில் அர்த்தமில்லை. ஏனென்றால் முக்கியமாக நெய் கலப்படத்தைத் தடுக்க கீழே கொடுக்கப்பட்டுள்ள இரு சிறந்த வழிகள் உள்ளன.

1. வனஸ்பதி ஸீலிட்ட டின்களில் விற்கப்படுகிறது. சில நகரங்களில், பால் முதலிய உணவுப் பொருள்களும் ஸீலிட்ட டின்களிலும், பாட்டில்களிலும் விற்கப்படுகின்றன. அம்மாதிரி, நெய்யும் ஸீலிட்ட டின்களில் விற்கப்பட வேண்டும்.

2. கலப்படம் செய்பவர்கள் மீது உணவு சம்பந்தமான சட்டப்படி கடுமையான நடவடிக்கைகள் எடுத்தல். நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை அரைகுறை நடவடிக்கைகள் போதா !



வனஸ்பதியைப் போன்ற கொழுப்புச் சத்துக்கள் உலகம் பூராவும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன

அமெரிக்கா-அயர்லாந்து-அர்ஜெண்டினா-அல்பேனியா-அல்ஜீரியா - ஆஸ்திரேலியா-ஆஸ்திரியா - இங்கிலாந்து - இத்தாலி - இந்தியா - இஸ்ரேல் - ஈராக் - ஈரான் - எத்தியோப்பியா - ஏமன் - கானடா - கிரீஸ் - செக்கோஸ்லவேகியா-டென்மார்க்-துருக்கி-தென் ஆப்பிரிக்கா யூனியன் - நார்வே - நெதர்லாண்ட்ஸ் - நைஜீரியா - பர்மா - பல்கேரியா - பாகிஸ்தான் - பிரான்ஸ் - பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்கா - பிரேஜில் - பின்லாந்து - பெல்ஜியம் - போர்ச்சுகல் - போலந்து - மத்திய ஆப்பிரிக்கா பெடரேஷன் - மலாயா - மெக்ஸிகோ - மொராக்கோ - யுனைடெட் அரபு ரிபப்ளிக்-யூகோஸ்லேவியா-ரஷ்யா - ருமேனியா - லிபியா - ஜப்பான் - ஜெர்மனி (கிழக்கு-மேற்கு)-ஸவூதி அரேபியா-ஸ்விட்ஜர்லாந்து-ஸ்வீடன்-ஹங்கேரி

அதிக விவரங்களுக்கு இந்த விலாசத்துக்கு எழுதுங்கள் :

தி வனஸ்பதி மான்யுபாக்சரர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா

இந்தியா ஹவுஸ், போர்ட் ஸ்டிரீட், பம்பாய்-1

JWT-VMA2692

அங்கே பேசாத பேச்சு, பேச்சைக் காட்டிலும் பொருட்செறிவு பெறுகிறது.

இப்பொழுதெல்லாம் அந்த இளங் காதலர்களது சந்திப்பு எனக்குப் பழகி விடுகிறது. சுந்தரியின் வாழ்வில் ஏற்படும் இந்தச் சோபனஞ்சேர் சந்திப்புக்கு நானே நிலைக்களனாக இருக்க நேர்ந்தது குறித்து நான் பெருமையடைகிறேன்.

"சுந்தரி!"

"உம்!"

"என்மீது உனக்கு நிறைய அன்புதானே?"

"இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை. எனக்குக் கோபம்தான் வருகிறது!"—சுந்தரியின் சாதுரியத்திற்கு நான் 'சபாஷ்' போடுகிறேன். எங்கிருந்து இந்தப் பெண் இவ்வளவு அழகாகப் பேசக் கற்றுக் கொண்டாள்?

"அதற்கில்லை சுந்தரி! நான் ஒரு விஷயம் சொல்லப் போகிறேன். அதற்காகத்தான் இந்தப் பீடிகை எல்லாம்!"

"எனக்கு இதெல்லாம் பிடிக்காது!"

"சரி, தப்பு! நேரடியாக விஷயத்துக்கு வருகிறேன். போதுமா?"—அவன் வேடிக்கையாகக் கன்னத்தில் போட்டுக் கொள்கிறான்.

சுந்தரி சிரிக்கிறாள்.

"உனக்குச் சிரிப்பாய் இருக்கிறது. என்னுடைய கஷ்டம் எனக்குத்தானே தெரியும்?"

கணத்தில் சுந்தரியின் முகம்மாறிவிடுகிறது. மன்னிப்புக் கேட்கும் பாவனையில் நோக்குகிறாள். "சொல்லுங்கள், கேட்கிறேன்."

"இல்லை சுந்தரி, உன்னிடம் சொல்லி ஏன் வீணாக நான் உனக்கும் வருத்தம் அளிக்க வேண்டும்?"

"ஏன் என்றால் அதற்குப் பரிகாரம் தேட முடியுமா என்று பார்க்கிறேனே!"

"முதலில் நானும் அப்படித்தான் நினைத்து ஆரம்பித்தேன். ஆனால்..."

சுந்தரி விடுவதாயில்லை. அவன் தயங்கிக் கொண்டே விஷயத்தைச் சொல்கிறான்.

"பூ! இவ்வளவுதானா? உங்களுக்கு இன்னும் நல்ல வேலை கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறதென்றால் மகிழ்ச்சிதானே?"

"அது சரி. ஆனால் அதற்காகக் கட்டுவதற்குத் தேவையான பணம்?"

"ஏன், நான் இருக்கிறேன். ஒரு வழியில் எனக்கும் இதில் அக்கறை இருக்கிறதல்லவா? நீங்கள் சொன்னீர்களே. 'இன்னும் உயர்ந்த வேலை கிடைத்த பிறகுதான் உன் அப்பாவிடம் நம் திருமண விஷயம் பற்றிப் பேச்சையே எடுக்கப் போகிறேன், அதுவரை இந்த விஷயம் தெரிய வேண்டாம்' என்று. அந்த வகையில் உங்களது லட்சியம் நிறைவேறுவதற்கும் நான் உதவி செய்ததாக ஆகிறதே!"

"ஆமாம். நீ எப்படி அவ்வளவு பணத்தை எனக்குத் தர முடியும்?"

"பணம் என்றால் பணமாகத்தானா? இதோ இவை இல்லையா?"—அவள் தான் அணிந்திருந்த நகைகளைத் தொட்டுக் காட்டுகிறாள். அவன் திடுக்கிட்டு அவளைப் பார்க்கிறான். "பயப்படாதீர்கள். என்னிடம் இதே மாதிரி இன்னொரு 'செட்' இருக்கிறது!"

அவன் பல ஆட்சேபணைகளைச் சொல்லிப் பார்க்கிறான். அவை எல்லாவற்றையும் அவள் 'பூ' என்று உதறிவிடுகிறாள். கடைசியாகத் தயங்கிக் கொண்டே அவன் அவளுடைய பேச்சுக்கு இணங்குகிறான்.


அடுத்த முறை சந்திக்கும்போது அவன் நகையோடு வருவதாகச் சொல்கிறான்.

அவர்கள் சென்றுவிட்டார்கள். நான்தான் வியப்பினால் 'நல் மர'மாய் நின்றுவிடுகிறேன்.

எங்கும் இருளின் செறிவு. மழை வரும் போலிருக்கிறது. 'உய் உய்' என்று காற்று கடுமையாக வீசுகையில் எனது கிளைகளுக்கு ஒரே உற்சாகம். எனது கட்டுப்பாட்டுக்கும் மீறி அவை பேயாட்டம் ஆடுகின்றன.

பேய்க் காற்றின் பேரிரைச்சலுக்கு மத்தியிலும் என் காதுக்குப் பழக்கமான ஒரு குரல் கேட்கிறது. அந்தக் குரல் நேராக என் கீழ் வந்ததும் மேலே நகராமல் அங்கேயே தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பதில் குரலும் இப்பொழுது கேட்கிறது. யாரோ இரண்டு ஆடவர்கள்தாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த முதற் குரல் வேறு யாருடையதுமில்லை. எனக்கு நன்றாகப் பழக்கமாகிவிட்ட சுந்தரியின் காதலனுடையதுதான்.

எதிர்பாராத வேளையில் அவனை இங்கே காணும்போது நான் ஆச்சரியப் படுகிறேன்! உடன் இருக்கும் இன்னொருவன் யார்? நான் கூர்ந்து பார்க்கிறேன். எனக்கு வயதாகிவிட்டது. கங்குலின் கனத்த போர்வையைக் கிழித்து விளக்கம் காணும் கூர்மை எனது பார்வைக்கு இல்லை.



"எல்லாரும் கவலைப்படுறாளே! எட்டு கிரகம் ஒண்ணா சேரப் போறதாமே!"

"தாராளமாச் சேரட்டுமே! அவை தனித் தனியாக இருக்கும்போது நாம்ப என்ன வாழ்ந்தோம்?"

நான் காதைத் தீட்டிக்கொண்டு அவர்களின் உரையாடலைப் பின்தொடர்கிறேன்.

''ஐயோ பாவம்! அந்தப் பெண் இது தெரியும்போது என்ன பாடுபடும்?''—முகம் தெரியாத அந்த இன்னொருவன்தான் இப்படிக் கேட்கிறான்.

''பாவமாவது! புண்ணியமாவது!''—தொடர்ந்து ஒரு குரூரமான சிரிப்பொலி!

சுந்தரியின் காதலனின் இந்தப் பேச்சும் சிரிப்பும் எனக்கு என்னவோ செய்கின்றன.

''அப்படியானால் நிச்சயமாக அவள் நகையோடு வருவாள் என்று நீ எதிர்பார்க்கிறாயா?''

''சே! என்ன ஆள் அப்பா நீ! நான் அவ்வளவு தூரம் சொல்லியும் உனக்குச் சந்தேகம் போகவில்லை பார்! அவள் என் மீது உயிரையே வைத்திருக்கிறாள். அவள் எனக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறாள்.''

''அப்படியானால்...நான் ஒன்று சொல்கிறேன், கேட்கிறாயா? நீ அவளை ஏமாற்றுவது மகாபாவம் என்று எனக்குத் தோன்றுகிறது.''

சுந்தரியின் காதலன் பெரிதாகப் பயங்கரமாகச் சிரிக்கிறான்.. குளுமை நிறைந்த புறச் சூழலையும் மீறி என்னுள் பெருந்தீ எரிந்து இமைக்கும் போதில் எனது கிளைக்கும் கப்புக்கு மாய்ப் பரவி, தளிரடங்கலாக நான் வெந்து கருகுவதைப் போன்று உணருகிறேன்.

''பாவி! என் சுந்தரியின் மனத்தில் வண்ணக் கற்பனைகளை யெல்லாம் விட்டு வஞ்சிக்கவா பார்க்கிறாய்!''—நான் குமுறுகிறேன்.

சுந்தரியின் காதலன் தொடர்ந்து பேசுவது கேட்கிறது: ''ஆமாம். இத்தனை முறைகள் ஏமாற்றும்போது அந்தப் பெண்களிடத்திலெல்லாம் ஏனப்பா இந்த இரக்கம் உனக்கு ஏற்படவில்லை...!''

''வாஸ்தவம்தான். எனக்கே இப்பொழுது நினைக்கவும் அச்சமாகத்தான் இருக்கிறது.. இந்தப் பெண் பாவம் எல்லாம் நம்மைச் சும்மா விடப் போவதில்லை. போதும் இந்த விஷப் பரீட்சை. இந்த முறையாவது இதைத் தவிர்த்து விட்டால்தான் எனக்கு நிம்மதி யேற்படும் போலிருக்கிறது. மேலும் உனக்கே இந்தப் பெண் விஷயத்தில் புதுமையாக மனம் இளகி விட்டதாகத் தெரிகிறதே. அதற்காகவாவது...''

''போதும் நிறுத்து. எனக்குத் தெரியும் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று!'' சுந்தரியின் காதலன் முடிவாகச் சொல்லி விடுகிறான். அவனுடைய நண்பன் என்னவோ சலிப்புடன் முணுமுணுக்கிறான்.

பிறகு அமைதி. நண்பன் போய்விட்டான் போலிருக்கிறது. சுந்தரியின் காதலன் மட்டும் நின்று கொண்டிருக்கிறான்.

புதிதாக ஒரு 'சிகரெட்'டைப் பற்ற வைத்துக்கொண்டு என் வேர் மீது உட்காருகிறான்.

எனக்கு எல்லாம் விளங்கி விடுகிறது. அவர்களிருவருமே கடைந்தெடுத்த அயோக்கியர்கள். இதுவரை எத்தனையோ கொடுஞ்செயல்களுக்குக் கூட்டு சேர்ந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. அவற்றில் ஒன்று இம்மாதிரி வசதியுள்ள குடும்பத்தின் இளம் பெண்களை ஏமாற்றுவது போலும்.

என்னுடைய சுந்தரிக்கா இக்கதி நேர வேண்டும்! என்னால் மேலே நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

நான் ஒரு நிர்மானத்துக்கு வந்துவிட்டேன்.

அவன் இங்கிருந்து உயிரோடு மீளப் போவதில்லை! நிச்சயம்தான்!

எனது கனத்த கிளை ஒன்று இடையில் பட்டுப் போய் நெடு நாட்களாய் நழுவி விழுவதற்குத் தயாராக இருந்தது. நான் ஒரு தர்மத்துக்குக் கட்டுப்பட்டு, ஆள் நடமாட்டம் ஏதுமில்லாதபோது யாருக்கும் ஆபத்தின்றி அதனை வீழ்த்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்பொழுது அதற்கு ஒரு 'நல்ல காரியம்' செய்யும் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. ஒரு நிமிடம் என்னுள் ஒரு தயக்கம் ஏற்படுகிறது. அவன் போன பிறகு சுந்தரியின் நிலை? அவளுக்கு யார் முழு விவரத்தையும் எடுத்துச் சொல்வது? அப்படியே அவளுக்குத் தெரிந்தாலும் இவ்வளவு தூரம் மனத்தில் ஆசைகளை யெல்லாம் வளர்த்து விட்டு அந்தப் பெண் இதயம் எப்படி இதை அமைதியாக ஏற்றுக்கொள்ள இயலும்?

எல்லாவற்றிற்கும் மேலாக அவளுடைய துடிப்பை நான் எப்படிப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியும்?

வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! அந்தப் பரிதாபத்தைக் காணும் திராணி எனக்குக் கிடையாது.

நான் எனது முடிவை மாற்றிக்கொள்ளப் போகிறேன். நான் அதை யெல்லாம் பார்ப்பதற்கு இருக்கவே போவதில்லை! கிளையை மட்டுமன்று. நானே என்னை வேரோடு அவன் மீது சாய்த்துக் கொள்ளப் போகிறேன்.

எனக்குப் புரிகிறது. சுந்தரி, நீ நாளை இதை அறிந்து எப்படித் துடிக்கப் போகிறாய் என்று.

என்மீது உனக்கு எத்தகைய சீற்றம் ஏற்படும் என்று என்னால் எண்ணிப் பார்க்க முடிகிறது. நான் உனது காதலன் மீது வேரோடு பெயர்ந்து விழுந்து அவனையும், அவனோடு உனது வாழ்வின் வசந்தக் கனவுகளையும் சிதைத்து மாய்த்து விட்டதற்காக உனது நீங்காத சாபத்துக்கு ஆளாகத்தான் போகிறேன். என்ன செய்வது? எனக்கு இத்துர்ப்பாக்கியம் நேர வேண்டாம்தான்.

பரவாயில்லை. சுந்தரி, நான் உன்னுடைய நலத்தின் மீதுகொண்ட அக்கறை—அக்கறை என்ற சாதாரணமான சொல்லுக்கு என்னுடைய விசேஷ ஈடுபாடு முழுவதையும் அணைக்கும் ஆற்றல் இருக்கிறதா—காரணமாகத்தான் இப்படிச் செய்ய நேரிடுகிறது என்று என்றுமே உனக்கு யாரும் எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்காது. ஆனாலும் காலம் என்கிற மாய சக்தி அருமருந்தாய் இந்நிகழ்ச்சியை மறக்க உனக்குத் துணை செய்யட்டும்.

நீ உன் பவித்திரமான பூ இதயத்தில் பீடமளித்து உபாசித்து உன்னையே அர்ப்பணிக்கத் தயாரான உனது காதலன் தீயவன் என்று நீ தெரிந்து கொள்ளவே வேண்டாம். அவன் நல்லவன் என்றே நம்பிக் கொண்டிரு.

இதோ காற்று பலமாக வீசத் தொடங்கி விட்டது. வானமும் குமுறி இடிக்கிறது. நான் வேரோடு சாய ஆயத்தமாகிறேன்.

உனது நம்பிக்கை வாழட்டும்!...நான்.. சாகிறேன்.

இருமல் மற்றும் ஜலதோஷத்திலிருந்து பூர்ண நிவாரணம் பெற



ஸிரோலின் 'ரோஷ்' அருந்துங்கள்

இருமலுக்கும் ஜலதோஷத் திற்கும் ஏற்ற இந்தியாவின் குடும்ப மருந்து




இருமல் அல்லது ஜலதோஷமிருந்தால் அசட்டை செய்யாதீர்கள்—ஸிரோலின் அருந்தி அபாயமின்றி துரிதமாக பூர்ண நிவாரணம் பெறுங்கள். ஸிரோலின் இருமலை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல் இருமலை உண்டுபண்ணும் கிருமிகளைக் கொல்லவும் செய்கிறது. ஸிரோலின் தொண்டைப் புண்களுக்கு சமனமூட்டுகிறது, கபம் மற்றும் சளியை போக்குகிறது. அது எவ்வளவு கடுமையான இருமலிலிருந்தும் அபாயமின்றி துரிதமாக நிவாரணமளிக்கிறது. அபாயமற்ற, நிவாரணமளிக்கும் தன்மையையும் மற்றும் இனிய ருசியையும் ஸிரோலின் பெற்றிருப்பதால் குடும்பத்திலுள்ள அனைவரும் அதைப்பெரிதும் விரும்புகிறார்கள். ஸிரோலின் என்றால் குழந்தைகளுக்கு ஒரே குஷி!

உங்கள் வீட்டில் எப்பொழுதும் **ஸிரோலின்** வைத்திருங்கள்

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள்:
வால்டாஸ் லிமிடெட்



சுமைகூலி

"ஏம்பா ஜட்கா, வர்றியா...?"-தியாகராயநகர் ஜட்கா ஸ்டாண்டில் தரையில் அமர்ந்து வண்டியில் பூட்டப்பட்டிருந்த குதிரைக்குக் கைகையாகக் காய்ந்த புல்லை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்த அப்துல்லா இந்தக் குரலுக்கு எழுந்து நின்றான்.

"வா, சாமி! எங்கே சாமி போவணும்?"

வந்தவர் கொஞ்சம் வயதானவர். 'இவன் வருவானா' என்ற கேள்வி எழக் கொஞ்ச நேரம் அப்துல்லாவையே உற்றுப் பார்த்தார். பிறகு "ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகணும்,-என்ன கேக்கறே?" என்றார்.

"வா, சாமி! ஏறு சாமி! மூணு ரூவா கொடு போதும்!" என்றான் அப்துல்லா.

வந்தவர் பதில் சொல்லாமலேயே திரும்பிப் போக யத்தனித்தார்.

"நீ இன்னா சாமி கொடுக்கறே! உனக்கு இஷ்டப்பட்டதைச் சொல்லு. கட்டுச்சின்னா வர்றேன். இல்லேன்னா இல்லேன்னுட்டுப் போறேன்!" என்று அப்துல்லா அவரை இழுத்து நிறுத்தினான்.

"ஒரு ரூபா தருவேன்!" என்றார் வந்த பெரியவர்.

"இன்னா சாமி, வவுத்திலே அடிக்கிறாப்பலே கேக்கிறியே! இங்கேயிருந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எவனாவது ஒரு ரூபாய்க்கு வருவானா சாமி? கேக்கறதிலேயும் கொஞ்சம் நியாயம் வேணும்?"

"இந்தாப்பா, பேச்சை ஏன் வளர்த்தறே! ஒனக்கு இஷ்டம் இருந்தா வா! இல்லேன்னா கட்டலேன்னுட்டுப் போ. ஒன்னே யாரும் இப்ப நிர்ப்பந்திக்கலே!" என்றார் பெரியவர் நிர்தாட்சண்யமாக.

அப்துல்லாவுக்குக் கிராக்கியை விடவும் மனமில்லை. அதற்காக ஒரு ரூபாய் காசுக்காக இந்தத் தகதகக்கும் வெய்யிலில் ஆறு மைல் தூரம் எவன் வருவான்?

"சரி சாமி! ரெண்டு ரூவா கொடு. ஏறு சாமி!"—இதுவரை இரண்டு மூன்று சவாரியாவது போயிருந்தால் அவன் இந்த இரண்டு ரூபாய்க்குக் கூட ஒப்புக்கொண்டிருக்க மாட்டான். இன்றைக்குக் காலையில் யார் முகத்தில் விழித்தானோ, தெரியவில்லை. 'கால் ரூவாக் காசின் முகத்தில் அவன் இன்னும் விழிக்கவில்லை.

"அந்தப் பேச்செல்லாம் எதுக்கு? ஒண்ணேகால் ரூவா கொடுப்பேன், இஷ்டமா?"—அவன் இஷ்டப்படாவிட்டால் அவர் நிஜமாகப் போய்விடுவார் போலிருந்தது. அப்படித்தான் என்ன அவசரமில்லாத காரியம் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு? சாவகாசமாகப் பேரம் பேசிக்கொண்டு, 'வந்தால் வருகிறான், இல்லாவிட்டால் போகிறான்' என்று அலட்சியமாக இருக்கிறாரே இந்த மனிதர்? அப்துல்லா இதையெல்லாம்



யோசித்துக் கொண்டிருக்கவில்லை. புல்லுக் கட்டுக்குப் பத்தணா போக மீதி யிருப்பது இரண்டு வேளை நாஸ்தாவுக்கு எப்படிப் போதும் என்ற யோசனையில் ஆழ்ந்திருந் தான் அவன்.

''சரி, ஏறு சாமி! நீயா ஏதாவது பார்த்துக் கொடுத்தால் சரி!'' கீழே கிடந்த புல்லைத் திரட்டி வண்டியில் கிடந்த தமுக்காளத்துக்கு அடியில் திணித்துக் கொண்டே சொன்னான் அப்துல்லா.

''இத பாரு! வண்டியிலே ஏறினப்புறம் இந்தத் தகராறு பண்ற வேலை யெல்லாம் நம்பகிட்ட வேணாம். இப்ப சொல்றதுதான். அதுக்கு ஒரு காலணா கூடத் தரமாட்டேன்.''

''சரி, நீ ஒண்ணும் கொடுக்க வேண்டாம். ஏறு சாமி!'' என்றான் அப்துல்லா எரிச்ச



என். மகாலிங்கம்

லோடு. பெரியவர் குறுக்குக் கம்பினை எடுத்து விட்டு ஏறிக் கொண்டார். அப்துல்லாவும் முன் பக்கத்தில் ஏறி உள்ளே நிறைய இட மிருந்தும் வண்டி விளிம்பில் உட்கார்ந்தான்.

''எங்கே சாமி போவணும்?''

ராமானுஜம் தெருவில் பெரியவர் காட்டிக் காட்டிய ஒரு வீட்டுவாசலில் ஜட்கா நின்றது.

''நீயும் சித்த வாப்பா...'' என்று கூறி விட்டுப் பெரியவர் இறங்கி உள்ளே சென்றார். அப்துல்லா கைலியை மடித்துக் கட்டிக் கொண்டு அவரைப் பின்தொடர்ந்தான். வீட்டுக்குள்ளே கூடத்தில் ஒரு கட்டில். அதன் மீது விரிக்கப்பட்டிருந்த கிழிந்த பாய் ஒன் றில் ஒரு கிழவி படுத்துக் கிடந்தாள். தலை தலையணையை விட்டுத் தள்ளிப் போய்க் கீழே கிடந்தது. சாம்பல் நிற எல்லை கட்டிய சிறு சிறு வட்டங்களாகப் பொறுக்குத் தட்டிக் கிடந்தது தோல். அதிலேயே யுத்த வியூகம் மாதிரி அனுபவச் சுருக்கச் சிக்கல்கள். அசை யாமல் கிடந்த உடலில் துருத்தி மாதிரி நெஞ் சுக் குழி மட்டும் எழுந்து எழுந்து அடங்கிக் கொண்டிருந்தது. மூச்சுக் காற்று புயலாகச் சீறிக்கொண்டிருந்தது.

''சித்த ஒரு கை பிடிப்பா...'' பெரியவர் கிழவியின் தலைமாட்டில் போய் நின்று கொண்டு அப்துல்லாவைக் கூப்பிட்டார். அப் துல்லா சிறிது தயங்கினான். 'இவ்வளவு இக் கட்டான நிலையிலே வச்சுக்கிட்டு நிதானமா பேரம் பேசிக்கிட்டு நின்னாரே இந்த ஆளு' என்று இப்போதுதான் நினைத்தான் அவன்.

அதிகச் சத்தம் இப்போது கேட்டுப் பார்த்தால் என்ன' என்று தோன்றிய எண்ணம் கிழவியின் பரிதாபத் தோற்றம் விளைவித்த உணர்வால் அவனுள் செயல்படாமல் நின்றுவிட்டது. பெரியவருக்கு வேறு ஏதோ யோசனை சொல்ல வாயெடுத்தவன் 'சட்'டென்று தன்னை அடக்கிக் கொண்டு கிழவியின் கால்மாட்டுக்குச் சென்றான்.

இரண்டு பேருமாகக் கிழவியைப் பிடித்துத் தூக்கி வண்டியில் கொணர்ந்து கிடத்தினார்கள். நீர் தண்டிப் போய் எலும்பும் தோலுமான உடம்பு இலேசாகத்தான் இருந்தது. வண்டிக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்த கிழவியின் காலை முன் பக்கமாகச் சென்று அவன் கைகளைப் பற்றி இழுப்பதன் மூலம் உள்ளுக்கு இழுத்துக்கொண்டு அவள் மீது ஒரு போர்வையைப் போர்த்தினார் பெரியவர். இந்த எல்லா நடவடிக்கைகளின் போதும் வீட்டுக்குள்ளிருந்து ஒருவர் கூட வெளியே தலை காட்டவில்லை. ஆனால் நடமாட்டச் சத்தம் கேட்பதிலிருந்து உள்ளே யாரோ இருக்கின்றார்கள் என்பது மட்டும் அப்துல்லாவுக்குத் தெரிந்தது.

பெரியவர் மறுபடியும் உள்ளே போய்க் கையோடு கொண்டு வந்த தலையணையைக் கிழவியின் தலையைத் தூக்கி அதற்கடியில் வைத்து விட்டுத் தாமும் ஏறி அவள் கால் மாட்டில் உட்கார்ந்து கொண்டார்.

அப்துல்லாவும் ஏறி உட்கார்ந்து சாட்டையைச் சொடுக்கினான். குதிரை இரண்டு தப்படி பின்னேறி விட்டு முன்னேறியது. வண்டியின் குலுக்கலில் கிழவியின் சீரான மூச்சு கருதி குலைந்தது. புறப்பட ஆயத்தமாகும் என்ஜின் புகை மாதிரி விட்டு விட்டு வெளிப்பட்டது. அப்துல்லா சற்றே தலையைத் திருப்பித் தனக்குப் பக்கத்தில் கிடந்த கிழவியின் முகத்தைப் பார்த்தான். இமைகள் விலகி விழிகளாலே புது உலகத்தைப் பார்க்கச் செய்ய உள் மனம் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தது நன்றாகத் தெரிந்தது அவனுக்கு! மிகவும் மோசமான நிலைதான்! எவ்வளவு சீக்கிரம் ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்க்கமுடியுமோ, அவ்வளவு சீக்கிரம் சேர்ப்பதுதான் அவனாலான உதவி. வேகமாகப் போனால் பட்டத்து நூலைச் சொடுக்கிச் சொடுக்கி இழுப்பது போல் கிழவிக்கு மூச்சு வெட்டியது. ஒரு சொடுக்கில் அது எங்கேயாவது அறுந்து போய்விட்டால்! மெதுவாகப் போனால் சீக்கிரம் போய்ச் சேர்ந்துவிட முடியாது. சாலையின் குண்டு குழிகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு ஜட்கா நிதானமாக ஓடிக் கொண்டிருந்தது.

பின்னால் பெரியவர் ஒரு கையைக் குறுக்குக் கம்பியில் வைத்து, ஒரு காலைத் தொங்க விட்டுக் கொண்டு இடது கையால் முகவாயைத் தடவியபடியே அமர்ந்திருந்தார். சற்றைக் கொருதரம் கிழவியையும் ஆகாயத்தையும் பார்க்கும் பணியில் அவர் கண்கள் ஈடுபட்டிருந்தன.

''இன்னா சாமி...அம்மாளுக்கு ஒடம்பு ரொம்ப ஜாஸ்தியாகிக் கிட்டிருக்காப்பலே, இருக்கே!''—அப்துல்லாதான் கேட்டான்.

''ம்...!'' என்றார் பெரியவர்.


''டாக்ஸி வச்சிக்கினு போனா சீக்கிரமாப் போயிடலாமே!''—இதுதான் அவன் முன்பே கூற நினைத்தது. வருகிற ஒண்ணேகால் ரூபாயும் போய்விட்டால் என்ன செய்வது என்ற நினைவு வந்தபோது இதைக் கூறுவதினின்றும் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விட்டான். ஆனால் இப்போது...? கிழவியின் நிலை அவனைப் பெரியவருக்கு இந்த யோசனையைக் கூற வைத்தது.

''அப்படிச் சீக்கிரமாப் போவணும்னு ஒண்ணும் மொடை இல்லே!'' என்றார் பெரியவர்.

''இன்னா சாமி? இளைப்பு ஜாஸ்தியாயிக் கிட்டிருக்கு, மொடை இல்லேங்கிறீங்க?''

''டாக்ஸின்னா நாலெஞ்சு ரூவா ஆயிடும். அனாவசியச் செலவுதானே!'' இதுதான் அவர் டாக்ஸி வைத்துக் கொண்டு போகாததற்கு உண்மையான காரணம்.

''உயிரை விடப் பணமா சாமி பெரிசு...?'' அப்துல்லாவுக்குப் பெரியவரின் செயல்களில் இருந்த நிதானத்தின் காரணம் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்து கொண்டிருந்தது.



''அப்படி என்ன பெரிய உசிரு...போனுல் போகட்டுமே! பாரம் கொறைஞ்சுது!'' பெரியவர் சுமந்து வந்த மூட்டையை இறக்கி வைத்து விட்டவனைப்போல் இதைச் சொல்லி விட்டுப் பெருமூச்சு விட்டார். அப்துல்லா வுக்கு எல்லாமே புரிந்து விட்டது. மனச் சாட்சியினுடையதோ அல்லது வேறு யாரு டைய நிர்ப்பந்தத்துக்காகவோ 'வைத்தியம் பார்த்தோம்' என்று பெயர் பண்ணப் பார்க் கிறார் பெரியவர். இந்தக் கிழவியால் எவ்வ ளவு தொந்தரவோ? இப்படி இவர் விரக்தி யோடு, அலட்சியத்தோடு பேசுவதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

ஜட்கா தேனும்பேட்டையைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது. குதிரை விழுங்கிய தண்ணீர் தொண்டைக் குழியில் இறங்குவது போல் கிழவியின் நெஞ்சில் எழுந்து தணிந்த அலைகளை இப்போது காணும். நான்கு இமைகள் மட்டும் சற்றே விலகி நிற்க இரு விழிகளின் ஒளி புற ஒளியோடு சங்கமித்திருந் தது. அப்துல்லா சந்தேகத்தோடு உற்றுப் பார்த்தான். இமைகள் அசைவது போலவும் இருந்தன; அசையாதது போலவும் இருந் தன. அசைவதாகத் தோன்றும் போதெல் லாம் வண்டியின் குலுக்கலில் ஏற்படும் அசைவோ என்ற சந்தேகமும் கூடவே அவ னுக்கு வந்தது. அவன் கிழவியைப் பார்ப் பதைப் பார்த்து விட்டுச் சம்பந்த மில்லாதது போல் தம் தலையைத் திருப்பிக் கொண்டார் பெரியவர்.

''ஒங்க அம்மாவா சாமி...?'' என்று கேட்டான் அப்துல்லா.

பெரியவர் சட்டென்று அவனைத் திருத்தி ஞர். ''அம்மா இல்லே. ஒன்னு விட்ட அத்தை. அந்திக் காலத்திலே நம்ம தலையிலே கொண்டு வந்து கட்டிட்டுப்போயிட்டானுக!''

''யாரு சாமி! இந்த அம்மாளோட மவனு...?''


''புள்ளெகுட்டி ஒண்ணும் இடையாது! புருசன் செத்துப் பதினைஞ்சு வருசத்துக்கு மேலே ஆவுது. அவரு செத்தபோது கிட்டத்தட்ட பதினையாயிரம் வரைக்கும் இவள் கையிலே இருந்தது. தம்பி ஒருத்தன் அக்கா, அக்கான்னு உறவு கொண்டாடிக் கிட்டுப் பணத்தை யெல்லாம் கரைச்சான். கிழவிக்கும் வயசாகித் தள்ளாமை ஜாஸ்தியா யிடுத்து. அப்புறம்தான் நான் ஒருத்தன் இளிச்சவாயன் இருக்கிறது ஞாபகம் வந்தது போல இருக்கு. 'அக்கா மூவாயிரம் ரூவா வைச்சிருக்கா. நீயும் சிரமப்படறே. ஒனக் கும் உதவியா இருக்கட்டுமேன்னு ஒங்கிட்டே கொண்டு வந்து விடறேன்' என்று கொண்டு வந்து தள்ளிவிட்டுப் போய்விட்டான்.''

''அந்தப் பணம்தான் இருக்குதே. கொஞ் சம் செலவழிச்சு வைத்தியம் பார்க்கிறது தானே?'' என்றான் அப்துல்லா மெதுவாக. அவன் கேட்டதை அவர் விகற்பமாக எடுத் துக் கொள்ளவில்லை.

''பணம் ஏது? எட்டுக்குட்டியும் பொட்டை நாயும் இருக்கிற இடத்திலே இன்னும் ஒக்காந்துக்கிட்டிருக்கா? அது கரைஞ்சு மூணு வருஷம் ஆறது. பணம் செலவழிஞ்சப்புறம் இருக்கப்படாதுன்னு தோணித்தோ என் னவோ உடம்பை வரவழைச்சிண்டுட்டா!'' பணம் செலவழிந்த பிறகு அவள் இருக்கக் கூடாது என்ற அவர் விருப்பத்தை ஒருவேளை அவர் அப்படித் தெரிவித்தார் போலும்!

அப்துல்லாவின் மனத்தில் தோன்றிய பரி தாப உணர்வுப் பார்வையின் காட்சிப் பொரு ளாகி இருந்தாள் கிழவி. பிள்ளைகுட்டி, கண வன் முதலிய பாரங்களை யெல்லாம் உதறித் தள்ளிட்டுப் பாரத்தைக் குறைத்துக் கொண்ட அவள் வேறு யாருக்கோ பாரமாக வந்து அமர்ந்து விட்டாளே! அந்தச் சுமையைத் தவிர்க்க முயலும் பெரியவரின் மனோபாவம் தவறுடையதாகப்படவில்லை அப்துல்லாவுக்கு.

ஜெனரல் ஆஸ்பத்திரி வாயிலில் ஜட்கா நின்றது. பெரியவர் கீழே இறங்கி அப்துல்லா வின் உதவியுடன் கிழவியை உள்ளே எடுத்துச் சென்றார். வராந்தாவில் கிழவியைப் படுக்க வைத்து விட்டு பர்ஸிலிருந்து ரூபாய் நோட்டு ஒன்றையும் கால் ரூபாய் நாணயம் ஒன்றை யும் எடுத்து அப்துல்லாவிடம் கொடுத்தார். அவன் பதில் பேசாமல் அதை வாங்கிக்



கொண்டு கிழவியைப் பார்த்தான். அவள் இலேசாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அவனுக்கு நிம்மதி ஏற்பட்டது.

மணி மூன்று. தோலில் கசிந்த வியர்வையால் உடல் பளபளக்க நின்று கொண்டிருந்தது குதிரை. அதன் வாயில் 'தப்பி யிருந்த' நுரையை வழித்தெறிந்து விட்டு, கடிவாளத்தைப் பற்றி ஆஸ்பத்திரிக் காம்பௌண்டுக்கு வெளியே ஜட்காவுடன் வந்தான் அப்துல்லா.

இனிமேல் அவன் ஆறு மைல் தூரம் திரும்பிப் போய் ஆகவேண்டும். சும்மாப் போவதை விட ஏதாவது சவாரியை ஏற்றிக் கொண்டு போனால் கிடைத்தவரைக்கும் ஆதாயம் தானே என்ற எண்ணத்தில் சுற்றுமுற்றும் பார்த்தான். துரித கதியில் இயங்கும் பற்பல வாகனங்கள் தென்படும் சூழ்நிலையில் அவன் உதவி யாருக்கும் தேவை இருப்பதாகத் தெரியவில்லை. கடைசி முறையாகச் சைனா பஜார் வரையில் சென்று வருவதென எண்ணத்தில் வண்டியைக் கிளப்பினான் அப்துல்லா. அங்கே சவாரி வேண்டாம், கூட்டத்திலிருந்து விடுபட்டால் போதுமென்றாகிவிட்டது அவனுக்கு.

திரும்ப ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அருகில் வரும்போது மணி ஆறு. ஆஸ்பத்திரியின் மறு வாயிலில் அந்தப் பெரியவர் நின்று கொண்டிருந்தது. அப்துல்லாவுக்குச் சிறிது ஆச்சரியமாக இருந்தது. தூரத்தில் வரும் போதே அவனைக் கண்டுவிட்ட அவர், ''வா அப்பா! உன்னைத்தான் பார்த்துக்கிட்டிருக்கேன்!'' என்று அவனை வரவேற்றார். அப்துல்லாவுக்குப் பெரியவரையும் கிழவியையும் இறக்கி விட்ட மறு கணமே அவர்களைப் பற்றிய நினைவும் மனத்திலிருந்து மறைந்து போயிருந்தது. இப்போது பெரியவரைக் கண்டதும் கிழவியைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டிய ஆவல் அவனுள் தலை தூக்கியது. ''அம்மாளுக்கு உடம்பு எப்படி இருக்குது சாமி!'' என்று கேட்டான்.

''பிராணன் போயிடுத்து...''—தமக்குச் சம்பந்தமில்லாத மூன்றாவது மனிதரைப் பற்றிக் குறிப்பிடுவது போன்ற தொனியில் சொன்னார் பெரியவர்.

''எப்போ சாமி?'' என்றான் அப்துல்லா.

''நாலு மணிக்கெல்லாம் போயிடுத்து... அப்பவே புடிச்சு ஒரு வண்டி பார்த்துண்டிருக்கேன்...கிடைக்கலை. நல்ல சமயத்துக்கு நீ வந்தே!''—அவன் வரச் சம்மதித்து விட்டது போல் அவர் பேசினார்.

அப்துல்லா பதில் கூறாமல் யோசனையில் ஆழ்ந்தான். இதுமாதிரி காரியங்களுக்கு அவன் ஜட்கா இதுவரை பயன்பட்டதில்லை.

''என்ன அப்பா வர்றியா?''—பெரியவர் அவன் நினைவைத் திருப்பிக் கேட்டார். அவன் இதற்குள் ஒரு முடிவுக்கு வந்திருந்தான்.

''என்ன சாமி தர்றே?''

''நீ என்ன கேக்கறியோ தரேன்!''

வீட்டுக்குப் போய் நடக்க வேண்டியது வேறு நிறைய இருக்கிறது. எவ்வளவு நேரம் தான் அவர் காத்துக் கொண்டிருப்பார்?

''இருபத்தி அஞ்சு ரூவா தர்றியா சாமி?'' அப்துல்லா கூசாமல் கேட்டான். கிழவியைப் பற்றிய பச்சாத்தாப உணர்வெல்லாம் அவனிடம் இப்போது இல்லை. உயிரில்லாதவள் மீது எதற்காக இரக்கம் காட்ட வேண்டும்? வரும்போது கிழவியைப் பார்த்து அவன் மனசு இளகியதற்கும் பிரதியாகத்தான் நிறையக் கூலி சம்பாதிக்க ஒரு வழியைக் காட்டிவிட்டுப் போய்விட்டாளோ அவள்? உயிரோடிருக்கும் பெரியவர் மீது அவனுக்கு இரக்கமே இல்லை. இருபத்தி ஐந்து ரூபாய் என்றதும் அவர் முகம் விகாரமாகியது. பன்னிரண்டு மணி வெய்யிலில் ஆறு மைல் தூரம் 'லொங்கு லொங்கு' என்று குடல் அதிரக் குதிரையை விரட்டி வந்ததற்கு ஒன்னேகால் ரூபாய்தானே கொடுத்தார்! கொஞ்சமாவது அவன் மீது இரக்கம் காட்டினாரா?

''சரி வா! நீ இப்போ எவ்வளவு கேட்டாலும் கொடுத்துத்தான் ஆகணும்!'' என்றார் பெரியவர் அழமாட்டாக் குறையாக. 'பேரம்' கேட்கவே இடம் வைக்கவில்லை அப்துல்லா.

ஏனோ தெரியவில்லை, அப்துல்லாவுக்குச் சிரிப்பு வந்தது. இருப்பவர்—அந்தப் பெரியவர்தான் — இல்லாத கிழவிக்கு இருபத்தி ஐந்து ரூபாய் செலவழிக்கிறேன் என்கிறார். இந்தத் தொகையில் ஒரு நாலைந்து ரூபாயைச் செலவழித்து ஒரு டாக்சி வைத்துக்கொண்டு வந்திருந்தால் ஒருவேளை கிழவி பிழைத்திருப்பாளோ? இல்லாதவள்—அந்தக் கிழவிதான் இருக்கும் அவனுக்கு இருபத்தைந்து ரூபாய்க்கு வழி செய்து கொடுக்கிறாள். இருப்பவன் மீது இருப்பவனுக்கு அக்கறையே கிடையாது!

அப்துல்லா சிரிப்பைத் தேய்த்து விட்டு வண்டியிலிருந்து கீழே இறங்கினான். அவனும் பெரியவருமாக 'மார்ச்சுவரி' சிப்பந்தியின் உதவியுடன் கிழவியைக் கொண்டு வந்து ஜட்காவில் கிடத்தினார்கள். இப்போது அந்த உடலுக்கு மூன்று பேர் தேவையா யிருந்தது.

ஜட்கா ஓடிக் கொண்டிருக்கும் போதே அப்துல்லா திரும்பி உள்ளே பார்த்தான். வரும்போது இருந்த நிலையேதான். கிழவி இப்போது இல்லாதவளாகி விட்டதனால் வண்டியில் இடம் ஒன்றும் மிஞ்சி விடவில்லை. பெரியவரும் கிழவியின் கால்மாட்டில் ஒரு காலைக் கீழே தொங்க விட்டுக் கொண்டு குறுக்குக் கம்பியில் கையை வைத்தபடியே உட்கார்ந்திருந்தார்.

''அம்மா கதை முடிஞ்சிடுச்சு!'' என்றான் அப்துல்லா. அவனுக்கு ஏதாவது பேசவேண்டும் போலிருந்தது.

''எல்லாரும் போன வழிதான்! எல்லாரும் போகப்போகிற வழிதான்!'' என்றார் பெரியவர் பட்டும் படாமலும். 'போனால் போகட்டுமே!' என்ற இரக்கமற்ற அலட்சியமான விமர்சனத்தை விட இது சற்று இளகியதுதான். எது எப்படியிருந்தாலும் அவருக்குப் பாரம் குறைந்து விட்டதென்னவோ உண்மைதான்!

ராமானுஜம் தெருவில் வண்டி திரும்பிய போது பர்ஸிலிருந்து இருபத்தி ஐந்து ரூபாய் எடுத்து அப்துல்லாவிடம் கொடுத்தார் பெரியவர். கிழவி அவருக்குச் சுமையாக இருந்த போது ஒன்னேகால் ரூபாய் கொடுத்தவர் இப்போது குறைந்த சுமைக்கு ஏன் அதிகக் கூலி கொடுக்கிறார் என்பதைப் பற்றி அவன் சிந்திக்கவே இல்லை. பணத்தை வாங்கிப் பையில் வைத்துக் கொண்டு 'சுமை குறைந்த', 'சுமை கூடிய' உடலைச் சுமக்கும் வண்டியை விட்டு வாசலில் கொண்டு போய் நிறுத்தினான் அப்துல்லா.

டாக்டர்கள் மில்க் ஆப் மக்னீஷியாவையே சிபாரிசு செய்கிறார்கள் — மிதமாக பேதி ஆவது, அமிலத்தை எதிர்த்து பூர்ண நிவாரணமளிப்பதில் சக்தி வாய்ந்தது.

உலகத்திலுள்ள ஆயிரக்கணக்கான டாக்டர்களையும், சிசு வைத்திய நிபுணர்களையும், பிரசவ வைத்தியர்களையும், ரண சிகிச்சை வைத்தியர்களையும் "நீங்கள் உங்கள் நோயாளிகளுக்கு பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை சிபார்சு செய்கிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர்களில் அநேகர் "ஆம்!" என்று பதிலளித்தார்கள்.

ஆம், குழந்தைகளுக்கும், பிரசவம் மற்றும் ரண சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் கூட பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா மிகவும் பலன் தரக்கூடியது என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

இதில் ஆச்சரியமொன்றுமில்லை!



பேதி மருந்து ஆனாலும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா நிதானமாகவும், செம்மையாகவும் இதமாகவும் வேலை செய்கிறது: ஜீரண உறுப்புகளை பலவந்தப்படுத்துவதில்லை. அமிலங்களை அடக்கும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வயிற்றுக் கோளாறு, வாயு, நெஞ்செரிச்சல் மற்றும் மலச்சிக்கலுடன் வரும் இதர அமில உபாதைகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது.

எந்தவிதமான பேதி மருந்தும் இம்மாதிரி சுகமான பரிபூரண நிவாரணமளிக்காது!


உங்கள் டாக்டரைக் கேளுங்கள்! ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டியது

பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா

REGD. TRADE MARK



இரைப்பையில் மித மிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இன்பமான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



பூரண விநியோகஸ்தர்கள்:

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்



Mira–The God Intoxicated

பரம்பொருளைப் பரம புருஷனாகக் கண்டு காதலாகிக் கசிந்துருகி இறுதியில் அவனிலேயே கரைந்த அடியார்களில் முடிமணியாக விளங்குபவள் மீராபாய். தான் மணந்த முடி மன்னனையோ, அரண்மனை வாழ்வையோ, அரச போகத்தையோ ஒரு பொருட்டாகக் கருதாமல் கண்ணனின் எண்ணத்திலேயே திளைத்துச் சாதுக்களின் சாம்ராஜ்யத்துக்கு அரசியாக விளங்கியவள் மீராபாய். தன்னுடைய பக்தி உணர்ச்சியை அமுத கீதங்களாக அள்ளி வழங்கி யிருக்கிறாள் அவள். விவரம் தெரியாத பிள்ளைப் பருவத்திலிருந்து இறுதி மூச்சுவரை கிரிதரனே பேச்சாகவும் மூச்சாகவும் அமைந்த மீராவின் வாழ்க்கை நெஞ்சை நெகிழ்க்கும் பல நிகழ்ச்சிகள் நிறைந்தது. இந்த நூலில் ஸ்ரீ தலால் அவர்கள் அந்தப் புனித சரித்திரத்தைப் பரவசமான முறையில் வர்ணிக்கிறார். அதோடு இதை இலவசமாகவும் வழங்குகிறார் என்பது அவருடைய உண்மையான பக்தியையும் எடுத்துக் காட்டுகிறது.

[Published by R. K. Dalal, 'Pallav' Garden Colony, Andheri, Bombay-58; free distribution.]

அவரைக்காய் குடும்பம்
வெள்ளரிக்காய் குடும்பம்

முதலில் வெளியான கத்திரிக்காய் குடும்பத்தைத் தொடர்ந்து இப்போது அவரைக்காய் குடும்பமும், வெள்ளரிக்காய் குடும்பமும் வெளிவருகின்றன. பெரிய பெரிய விஷயங்களை யெல்லாம் குழந்தைகள் ஆர்வமுடன் விரும்பிப் படிக்கும் வகையில் வாக மாமா இந்தப் புத்தகங்களில் விளக்கிக் கொண்டு போகிறார். அவரைக்காயைத்தான் நமக்குத் தெரியும். அதற்கு ஒரு குடும்பமாவது என்று திகைக்க வேண்டாம். அவரையின் இனத்தைச் சேர்ந்த மரம் செடிகளைக் கேள்விப்பட்டால் நீங்கள் திகைத்துப் போவீர்கள். வேர்க்கடலை, கொத்தவரை, உளுந்து, பாசிப் பயிறு, கொள்ளு, வெந்தயம் என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். எல்லாம் அவரை இனத்தைச் சேர்ந்தவைதான். தொட்டால் சுருங்கி, சுறக்கொடி, குன்றிமணி, கத்தைக் காம்பு இவை யெல்லாம் அவரைக் குடும்பத்தைச் சேர்ந்தவைதான். தாவர இனத்தின் பெரும் பகுதி அவரைக் குடும்பம் என்ற பெரிய உண்மையை வாக மாமா மிகவும் லாகவமாக விளக்குகிறார்.

இதே போலவே வெள்ளரிக் குடும்பத்தையும் பற்றிய பல ரசமான விஷயங்களை வெளியிடுகிறார். கதை போல் சுவையாக எழுதப் பட்டுள்ள இவ்விரு புத்தகங்களின் விலை ஒவ்வொன்றும் 75 ந. பை. தான்.

ஆசிரியர்: ச. வ. சுப்ரமணியன்.

வண்ணக்கிளி. வானம்பாடி. கம்பீர கருடன்

பறவைகளையும் அவற்றின் இயல்புகளையும் பற்றிக் குழந்தைகளுக்குச் சிறப்பான முறையில் பறவை இனங்கள் என்ற தலைப்பில் அநுத்தமா அவர்கள் விவரித்திருக்கிறார்.

சலங்கைக் காக்கை என்ற முதல் புத்தகத்தில் சீனுவிடம் தோழமை பூண்ட சலங்கைக் காக்கைதான் இந்த மூன்று புத்தகங்களிலும் பல பறவை இனங்களை அவனுக்கு அறிமுகப் படுத்தி அவற்றுடன் பேசச் செய்து அவற்றின் பழக்க வழக்கங்களை அறியும்படி செய்கிறது.

வண்ணக் கிளியில் மிடுக்கு மைனாவையும் குருவித் தம்பதிகளையும், வானம்பாடியுடன் தூக்கணாங்குருவி, மரங்கொத்தி, மீன்கொத்தியையும் கம்பீர கருடனோடு வாத்து, கொக்கு, கழுகு ஆகியவற்றையும் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். பறவைகளின் நிறம், உடலமைப்பு, அவை கூடு கட்டுமிடம், முட்டையிடும் காலம், முட்டைகளின் நிறம், ஆகாரம் இப்படிப் பல பறவைகளைப் பற்றிய ரசமான பல விஷயங்களைத் தகுந்த படங்களுடன் குழந்தைகளின் ஆவலைத் தூண்டும் வகையில் இந்தப் புத்தகங்களில் சொல்லி யிருக்கிறார் ஆசிரியை அநுத்தமா. ஒவ்வொன்றின் விலை ரூபாய் ஒன்றுதான்.

தமிழ்நாட்டு அரசர் கதைகள்

இதில் உள்ள ஒன்பது மன்னர்களைப் பற்றிய கதை அநேகமாக எல்லோருக்கும் தெரிந்தவைதான். ஆனாலும் வீரம், அன்பு, கொடை ஆகிய பல்வேறு நல்லியல்புகளை விளக்குவனவாதலால் இக்கதைகளை எத்தனை தடவை படித்தாலும் நம் நாட்டுக் குழந்தைகளுக்கு நன்மையே விளையும்.

ஆசிரியர்: நா. பழநியப்பன்; விலை ரூ. 1.

நூலகப்பணி


முதியோர் கல்விக்காக எழுதப்பட்ட புத்தகம் இது. மொழி, எழுத்து, காகிதம், புத்தகம் இவை பிறந்த கதையையும் நூலகம் (லைப்ரரி) பிறந்து வளர்ந்து இயங்குவதையும் மிகச்சுருக்கமாக இதில் தரப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர்: தில்லைநாயகம்; விலை 65 காசு.

மேற்கண்ட ஏழு புத்தகங்களையும் வெளியிட்டோர்: வள்ளுவர் பண்ணை, 137, பிராட்வே சென்னை-1.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

'அவரா லேசில் திருப்தியடைகிறவர்...'



'அதுவும் துணி விஷயத்திலா? அதெங்கே...' என்கிருர் பம்பாய்வாசியான ஸ்ரீமதி ஆர். ஆர். பிரபு. 'இப்போல்லாம் ஸன்லைட்டாலே வெளுக்கறேன் அவரோட துணிக எல்லாத்தையும். அவருக்கோ பெருமை! எனக்குந்தான். இருக்காதா? அமோகமா நுரைகட்டுது ஸன்லைட், தொட்டதெல்லாம் பளிச்சுன்னு வெளுப்பு. சலவைன்னு எனக்கு வேண்டியது ஸன்லைட்தான்!'

துணிகளைக் காப்பதற்குத் தூய வெண்மை வாய்ந்த ஸன்லைட் டைப் போல் வேறென்றில்லை என்பதே குடும்ப மாதர்களின் துணிவு. அதுவே உங்களுக்கும் இனிது.

ஸன்லைட்



ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

S. 30-X52 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

